# வைத்திய திரட்டு







தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

**தஞ்சாவூர்**

தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண்: 184

# வைத்தியத் திரட்டு

பதிப்பாசிரியர்:

Dr. S வெங்கட்டராஜன், L. I. M. (Regd.)

வைத்திய ஆராய்ச்சியாளர்,

சித்த வைத்திய வரலாற்று ஆராய்ச்சிக் கழகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

தஞ்சாவூர்

2005 ரூ. 60-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வைத்தியத் திரட்டு |
| பதிப்பாசிரியர் | : | S. வெங்கடட்ராஜன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 184 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2005 |
| தாள் | : | TNPL 18.6 கி.கி. |
| நூல் அளவு | : | 21x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 194 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு, (காப்பி பிரிண்டர்) சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | ராப்பர் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

நமது பாரம்பரிய வைத்திய முறைகளின் ஆதார நூல்களாக விளங்கும் ஆயிரக்கணக்கான ஏட்டுச் சுவடிகளைத் தஞ்சையை ஆண்ட மன்னர்கள் அரண்மனை நூலகத்தில் சேர்த்து வைத்தனர். அவ்வரிசையில் மருத்துவ நூல்கள் சேகரிப்பில் பெரிதும் ஈடுபாடு கொண்டு அரும்பணி புரிந்தவர் மாமன்னர் இரண்டாம் சரபோஜி ஆவார். இவர் மருத்துவச் சுவடிகளை சேகரித்ததோடு அல்லாமல், மருத்துவ நிபுணர்களையும், தமிழ்ப் புலவர்களையும் ஒருங்கிணைத்து சிறந்த மருத்துவ முறைகளை பழஞ்சுவடிகளிலிருந்து தேர்வு செய்து அவற்றைப் புலவர்கள் துணைகொண்டு தொகுப்பு நூல்களாகப் படைத்தார். அவ்வகையில் சரசுவதி மகால் நூலகத்தில் வைத்தியத் திரட்டு எனும் தலைப்பில் நான்கு சுவடிகள் உள்ளன. அவற்றில் மூன்று சுவடிகள் செல்லரித்து சற்று சிதைந்த போதும் ஒரு சுவடி நல்ல நிலையில் உள்ளது. இவற்றிலுள்ள செய்திகளை ஒருங்கே திரட்டி மருத்துவர் எஸ். வெங்கட்டராஜன் அவர்கள் வைத்தியத் திரட்டு எனும் தலைப்பில் நூலாக வெளிவருவதற்கு மிகச் சிறந்த பதிப்புப் பணியைச் செய்துள்ளார்.

இந்நூலில் சூரண வகைகள், கல்கம், ஸ்வரசம், கஷாயம், பால், வெண்ணை, மோர் மருந்துகள் உருண்டை வகைகள்,

தைலங்கள், பற்பம், செந்தூரம், வெளிப்பூச்சு மருந்துகள், லேகியம் என பலதரப்பட்ட மருந்து தயாரிப்புகள் பற்றியும், அம்மருந்துகள் எந்தெந்த வியாதிகளுக்கு ஏற்புடையவை என்பது பற்றியும், மிகத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. மருத்துவர் வெங்கட்டராஜனின் பணி நினைவு கூறத்தக்கதாகும்.

மூன்றாம் பதிப்பு காணும் இந்நூல் செம்மையுற வெளிவருவதற்குத் துணை நின்ற நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினைஅச்சிட நிதிஉதவி நல்கிய நடுவண்அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

**தஞ்சாவூர்**
**20-9-2005**

# பதிப்பாசிரியர் முகவுரை

உலகப் பிரசித்திபெற்ற தஞ்சாவூர் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்களால் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மராத்தி முதலான மொழிகளில் சேகரித்து வைக்கப்பட்ட சுவடிகள் ஏராளம். நாயக்க, மராத்தி மன்னர்களில் பலரும், அரிய நூல்களை இயற்றியும் ஆஸ்தானப் பண்டிதர்களைக் கொண்டு இயற்றுவித்தும் இந்நூல் நிலையத்தை ஆதரித்து வந்திருக்கின்றனர். அவர்களுள் தஞ்சையை ஆண்டுவந்த புகழ்பெற்ற இரண்டாம் சரபோஜி (1798 - 1832) மன்னர் அவர்கள்தன் வாழ் நாளையே பற்பல கலைகளுக்கு அர்ப்பணித்திருக்கிறார்.

இந்நூலகத்தில் சமஸ்கிருத நூல்களே மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. காரணம் என்னவென்றால் அவர் காசி, இராமேசுவரம் முதலான ஊர்களுக்குத் தீர்த்த யாத்திரையாகச் செல்லுங்கால், தங்களுடன் சாஸ்திர விற்பன்னர்களையும் கூடவே அழைத்துக்கொண்டுபோய், பற்பல இடங்களிலும் கிடைக்கும் அரிய சமஸ்கிருத, மராத்தி முதலான மொழிகளிலுள்ள நூல்களைப் பிரதி செய்துகொண்டு இந்நூல் நிலையத்தில் சேர்த்து வைத்துள்ளார். ஆனால் அவர்காலத்தில், தமிழ் மொழியில் இலக்கியம் சமயம் முதலானவைகள் இருக்கும் அளவிற்கு மருத்துவ நூல் சுவடிகளை சேகரிக்க முடியவில்லை.

200 சுவடிகள் மட்டுமே அவர் சேகரித்திருக்கிறார். தற்போது 700 சுவடிகள்வரை சேர்ந்துள்ளன. இந்நூலகத்தில் அகத்தியர், தேரையர், சட்டைமுனி, மச்சமுனி, யூகிமுனி, கருவூரார், போகர் கொங்கணர், திருமூலர், சுந்தரானந்தர், தன்வந்தரி

முதலிய சித்தர்களாலியற்றப்பட்ட நூல்களும் உள்ளன. அவை பெரும்பாலும் யோகம், ஞானம், வைத்தியம் இரசவாதம் இவைகளையே மையமாகக் கொண்டவைகளாகும்.

சரபோஜி மன்னர் அவர்கள் பற்பல மருத்துவ பேரறிஞர்களை கூட்டித் "தன்வந்தரி மகால்" என்ற மருத்துவ நிலையத்தை ஏறபடுத்தித் தங்கள் தங்கள் அனுபவமான சித்த, ஆயுர்வேத, ஆங்கில முறைகளிலுள்ள வைத்திய முறைகளைச் சேகரித்திருக்கின்றார். பின்னர் அவர் அம்மருந்து முறைகளைத் தயாரித்து நோயாளிகளுக்குக் கொடுத்து அனுபவம்கண்டு, சுமார் 2000 முறைகளைத் தேர்ந்தெடுத்து "வைத்திய அட்டவணை" என்ற பெயரில் எழுதி வைத்தார். இம்முறைகள் பின் சந்ததியார்களுக்கும் உபயோகப்படவேண்டும் என்ற பரந்த மனப்பான்மையினால் தன் ஆஸ்தான தமிழ்ப்பண்டிதர்களைக் கொண்டு "சரபேந்திர வைத்திய முறைகள்" என்ற பெயரில் செய்யுட்களாக இயற்றச் செய்தார். இதற்குச்சான்று அந்நூல்களில் "சரப வேந்தர் உரையே" "சரபேந்திர மால் கூறும் வாரே" "சரபேந்திர பூபதி சொல் பண் பிதாமே" என்றெல்லாம் காணப்படுகின்றது.

சரபேந்திரர் (சரபோஜி) காலத்திலிருந்த சில முக்கியமான ஆஸ்தான தமிழ்ப்பண்டிதர்கள் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திருவேங்கடத்தா பிள்ளை, வடிவேலு உபாத்தியாயர், காருகுறிச்சி அய்யாக்கண்ணுப் பிள்ளை மகன் வேலாயுதக் கவிஞர், முதலானோர். அவர்கள் முறையே "சரபேந்திர வைத்திய முறைகள்" என்ற பொதுப்பெயரில் நோய்க்குத் தக்கவாறு, ஜ்வரரோக சிகிச்சை, விஷ வைத்திய சிகிச்சை, நீரிழிவு சிகிச்சை, என்று பாகுபாடு செய்து 18 சுவடிகளில் எழுதியுள்ளார்கள். இவை அனைத்தும் இந்நூல் நிலையத்தாரால் பதிப்பிக்கப்பெற்று விற்பனையாகி

வருகின்றன. இம்மருந்து முறைகளைப் பயன்படுத்தி பலனடைந்தவர்களின் நற்சான்றிதழ்களும் உள்ளன. இதிலுள்ள மருந்துச் சரக்குகள் அனைத்தும் எளிதாகக் கிடைக்கக் கூடியவைகள். இதையன்றி அகத்தியர் இரண்டாயிரம், தன்வந்தரி வைத்தியம் போன்ற தொகுப்பு நூல்களும் அச்சாகி உள்ளன.

அதேபோன்று தற்போது பதிப்பிக்கப்பட்டிருக்கும் "வைத்தியத் திரட்டு" என்ற நூல் பலவித மருந்து முறைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலேயாகும். இதன் மூலச் சுவடியின் எண். 298. இதில் உரைநடைப் பகுதிகளே அதிகமாகவும், செய்யுட் பகுதிகள் குறைவாகவும் உள்ளன. முதல் 3 ஏடுகள் மிகவும் செல்லரித்துள்ளமையால் 4வது ஏட்டினின்று மருந்துகள் முறைகள்ளச் சீர்படுத்தித் தக்க தலைப்புகளும் கொடுத்து வைத்தியர்களுக்கும், ஏனையோர்களுக்கும் பயன்படுமாறு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலில் நாம் இதர மருத்துவ நூல்களில் காணப்படும் முறைகளுடன் சில அசாதாரண முறைகளையும் காண்கிறோம். உதாரணமாக நாய்கடி, எலிகடி வகைகளுக்குப் பல்லி வகைகளை உபயோகித்து தயார் செய்யக்கூடிய மருந்துகள், பாம்பு உப்புக்கண்டம், வௌவால் உப்புக்கண்டம், கழல் வண்டு மருந்து, நீராமை ரோகத்திற்கு ஆமைகளையே வைத்துச் செய்யக்கூடிய மருந்துகள் முதலியவற்றைக் காணலாம்.

தனி நூலான ஜ்வர ரோக மரண கண்டிகை, 96 வகைக் கபால நோய்கள், குழந்தைகளுக்கும், பெரும்பாடு நோய் உள்ள ஸ்திரீகளுக்கும் யந்திரங்கள், சன்னிரோக நிதானம், எலிகளின் பேதங்களும் அவற்றிற்கான சிகிச்சைகள், நேத்திர ரோக சிகிச்சைகள் முதலியவைகளும் காணப்படுகின்றன.

இம்முறைகளில் முற்காலத்தில் பழக்கத்திலிருந்த அளவு முறைகளான கழஞ்சு, வராகன், துட்டெடை, காசெடை முதலியவைகளை அப்படியே எழுதப்பட்டுள்ளன. அவைகளின் விவர அட்டவணை தனித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதில் காணும் மருந்து முறைகளை வைத்தியர்களும் ஏனையோர்களும் தயாரித்துப் பயனடைந்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம். இம்முறைகளைக் கூடுமானவரை உபயோகித்து, அவதியுறும் நோயாளிகளுக்குக் கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்பதே இப்பதிப்பின் நோக்கமாகும்.

இந்நூலைப் பதிப்பிப்பதற்கு வாய்ப்பளித்த சரசுவதி மகால் நிருவாகக் குழுவினருக்கும், மற்றும் நூலக அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழிய நலனே! வாழிய நலனே!

தஞ்சாவூர்
5-11-81

டாக்டர் **எஸ். வெங்கட்டராஜன்**
எல். ஐ. எம். (ரெஜிஸ்டர்டு)

# "வைத்தியத்திரட்டு" என்ற இந்நூலிலுள்ள மருந்துகளின் விபர அட்டவணை

(பிறைக்குறிக்குள் காணப்படும் மருந்துகள், அவைகளின் முதல் மருந்துச் சரக்கைக் குறிப்பன.

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|

## 1. சூரண வகைகள்


1. கொடிவேலிச்) சூரணம் (சூலை, குன்மம், வெப்புப்பாவைக்கு) 1
2. (தேன் வளகிச்) சூரணம் (விக்கலுக்கு) 9
3. (பனையோலைச் சுட்ட சாம்பல்) மருந்து நீர்க்கட்டிற்கு) 12
4. (சுண்ட்யாதிச்) சூரணம் (வாத குன்மத்திற்கு) 13
5. பாவன ஓமம் (கிரந்தி, புண், சூலை, ரஸ முறிவு, வெண்குஷ்டத்திற்கு) 19
6. (நந்தியாவட்டை இலைச் சூரணம்) மாதவிடாயாக 22
7. கருங்கோழிச் சூரணம் - பெருவியாதிக்கு 23
8. (கெந்தகாதிப்)பொடி (புண்ணிற்கு வெளிப்ரயோகம்) 31
9. புடரஸம் (ஸர்வ ஜ்வரங்களுக்கும்) 37
10. பரங்கிப்பட்டைச் சூரணம் (மூலத்திற்கு) 79
11. குக்கிலாதிச் சூரணம் (குன்மம், ஆமசூலை குன்ம சூலைக்கு) 92
12. கர்ப்பூராதிச் சூரணம் 92
13. இலைக்கள்ளிச் சூரணம் (ஈளை, இருமலுக்கு) 96

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| 14. | நெல்லிக்காய்க் கெந்தகச் சூரணம் (பவுத்திரத்திற்கு) | 116 |
| 15. | கெந்தக ரஸாயணம் | 136 |
| 16. | திப்பிலிச் சூரணம் (சயம், இருமல் சுவாசத்திற்கு) | 162 |
| 17. | சாதீ பலாதிச் சூரணம் (இரத்த பித்தம், இரத்தக் கழிச்சலுக்கு | |


## 2. கல்கம், ஸ்வரஸம் முதலான மருந்துகள்


| | | |
|---|---|---|
| 1. | (அழிஞ்சில் பட்டைக்) கல்கம் எலி கடிகளுக்கெல்லாம் பொதுவானது) | 18 |
| 2. | (எலுமிச்சம்பழச்சாறு) மருந்து (மாதவிடாயாக) | 22 |
| 3. | (ஆதண்டையிலைச்சாறு) மருந்து பெரும்பாட்டிற்கு | 23 |
| 4. | (முசுமுசுக்கையிலைச்சாறு) மருந்து (வெண்குஷ்டத்திற்கு) | 26 |
| 5. | (குளிர்தாமரையாதிக் கல்கம்) ஸ்திரீகளின் குருவி தோஷத்திற்கு | 27 |
| 6. | (குப்பைக்கீரைக்) கலக்கம் (பிரஸவித்தவர் களுக்கு இரத்தம் நிற்க) | 67 |
| 7. | (சுண்ட்யாதிக்) கல்கம் (முக சந்நிக்கு) | 69 |
| 8. | (குறிஞ்சிச்சாறு) மருந்து (விரியன், பாம்பு கடிக்கு) | 71 |
| 9. | (எலுமிச்சம்பழச்சாறு) மருந்து (எல்லா விஷக்கடிகளுக்கும்) | 72 |
| 10. | (மருக்காரைக்) கல்க மருந்து (மூலத்திற்கு) | 72 |
| 11. | நண்டுச்சாறு மருந்து (ராஜபிளவைக்கு) | 72 |
| 12. | (குளவிக்கூடு) மருந்து (மரித்தபிள்ளைவிழ) | 73 |
| 13. | (சீந்தில் தண்டுக்) கல்கம் (சலக்கழிச்சலுக்கு) | 91 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| 14. | (பிலாமரக்காளான்) மருந்து (அக்கரத்திற்கும், தேள்கொட்டிற்கும்) | 157, 95 |
| 15. | (கொடிவேலிவேர்) கல்கம் (ஆட்டப்படுவன், மாட்டுப்படுவன், எலிப்படுவனுக்கு) | 95 |
| 16. | (பிரண்டைச்சாறு) மருந்து (மேல்மூச்சிற்கு) | 97 |
| 17. | (நொச்சியிலைச்சாறு) மருந்து (காதுவலிக்கு சீழ் வருதலுக்கு) | 135 |
| 18. | (குன்றிக்) கல்கமும், கஷாயமும், நீராமை, வரளாமைக்கு) | 137 |
| 19. | (வாழைப்பழச்சாறு) மருந்தீட்டிற்கு மருந்து | 145 |
| 20. | பெருமருந்துக் கல்கம் (சோகை, பாண்டு, காமாலைக்கு) | 146 |
| 21. | (சித்தாமணக்கங் கொழுந்து) கல்கம் (வயிற்றுக் கடுப்பிற்கு, வாதத்திற்கு) | 163 |
| 22. | (கடுகுரோகிணி) கல்கம் (பேதிக்கு) | 171 |
| 23. | இலுப்பைப் புண்ணாக்குக் கல்கம் (பவுத்திரத்திற்கு உள்ளுக்கு) | 172 |


### 3. குடிநீர் அல்லது கஷாய வகைகள்


| | | |
|---|---|---|
| 1. | வேப்பம்பட்டையாதிக் கஷாயம் (வாதத்திற்கு) | 4 |
| 2. | வெள்ளாட்டுக் கோமியக் கஷாயம் (சகல வியாதிகளுக்கும்) | 11 |
| 3. | மகிழம்பட்டைக் குடிநீர் (தந்த வாயுவிற்குக் கொப்பளிக்க) | 28 |
| 4. | (வில்வப்பழக்) கஷாயம் (சூசிகா வாயுவிற்கு) | 41 |
| 5. | (மாவிலங்கைப்பட்டைக்) கஷாயம் (சூசிகா ரோகத்திற்கு) | 42 |
| 6. | (சுரைத்தண்டு) கஷாயம் (பிள்ளை பெற) | 69 |
| 7. | (வல்லாரைக்) கஷாயம் (மருந்தீட்டிற்கு) | 72 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
| --- | --- | --- |
| 8. | (இரஸகர்ப்பூர) மருந்துக் கஷாயம் (நீர்க்கட்டு கல்லடைப்பு, இரத்தப் பிரமேகம், மலச் சிக்கல், வயிற்றுவலிக்கு) | 76 |
| 9. | (வட்டக் கிலுகிலுப்பைக்) குடிநீர் (18 வித எலி கடிகளுக்கும்) | 77 |
| 10. | (நன்னாரிவேர்க் கஷாயம்) வகைகள் (மூலம், பவுத்திரத்திற்கு) | 80 |
| 11. | (சங்கிலைச்சரகுக்) கஷாயம் (விஷ பாகம் மண்டைக் கரப்பானுக்கு | 83 |
| 12. | (கோரைக்கிழங்குக்) கஷாயம் (பித்த சுரத்திற்கு) | 101 |
| 13. | (இலுப்பைப் பூவாதி) கஷாயம் (பித்த சுரத்திற்கு) | 101 |
| 14. | சீத கஷாயம் (குரல் கம்மலுக்கு) | 118 |
| 15. | பிள்ளைப்பிணிக் கஷாயம் (கிராணி, கழிச்சலுக்கு) | 123 |
| 16. | (பேய்மிரட்டிக்) கஷாயம் (மாந்த வலிப்பிற்கு) | 124 |
| 17. | கருக்குக் கஷாயம் (கழிச்சலுக்கு) | 125 |
| 18. | (தாடிமாதி) கஷாயம் (காய்ச்சலுடன் கூடிய கழிச்சலுக்கு) | 154 |
| 19. | (அரசம்பட்டை) கஷாயம் (வயிற்றுக் கடுப்பிற்கு) | 155 |
| 20. | (சுண்டையிலைக்) கஷாயம் (வயிற்றுக் கடுப்பிற்கு | 155 |
| 21. | சீத கஷாயம் (சீத ஜ்வரத்திற்கும், வாதச் சுரத்திற்கும்) | 159 |
| 22. | (ஆடுதீண்டாப்பாளைக்) கஷாயம் (கழிச்சல், உழலைக்கு) | 163 |
| 23. | வெங்காய ஓமக் கஷாயம் (பித்த வெட்டைக்கு) | 165 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| | **4. பால், வெண்ணெய், மருந்துகள்** (உள்ளுக்கு) | |
| 1. | ஆவின் பால் மருந்து (இரைப்பு, இருமலுக்கு) | 7 |
| 2. | பாஷாணத்திற்கு மாற்று | 7 |
| 3. | (சிறுகீரைப்) பால் மருந்து (பெரும்பாட்டிற்கு) | 10 |
| 4. | (எருக்கம்பால்) மருந்து (இருமலுக்கு) | 10 |
| 5. | (நீர்கடம்பங்) கொட்டைப்பால் (மாதவிடாயாக) | 22 |
| 6. | சாதிலிங்க வெண்ணெய் (காயத்திற்கு) (வெளிப்பிரயோகத்திற்கு) | 34 |
| 7. | சுரமுராரி (தாகச்சுரம், சீதச்சுரம், விஷச்சுரத்திற்கு) | 37 |
| 8. | துத்தவெண்ணெய் (தாப ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்கு) | 37 |
| 9. | (காட்டப்பசளைப்) பால் மருந்து (கல்லடைத்தபேருக்கு) | 60 |
| 10. | (சுரையிலைப்) பால்மருந்து (கல்லடைத்த பேருக்கு) | 60 |
| 11. | (கோரோசனைப்) பால்மருந்து(பிள்ளைகள் மாந்தத்திற்கு) | 39 |
| 12. | (குளப்பாலைப்)பால்மருந்து (அட்டுப்படுவன் எலிப்படுவனுக்கு) | 71 |
| 13. | (நமுகைப்)பால் மருந்து (பூச்சிக்கழிச்சலுக்கு) | 74 |
| 14. | வாழைக்கிழங்குப்) பால் (மருந்து) மேகவெட்டை அண்டவாதத்திற்கு | 77 |
| 15. | வில்வாதி கஷாய வெண்ணெய் (சூதிகா வாயுவிற்கு) | 89 |
| 16. | (செப்பு நெருஞ்சிப்)பால் மருந்து (கல்லடைப்பிற்கு) | 97 |
| 17. | (கோவைத்தண்டுப்) பால் மருந்து (நீரடைப்பிற்கு) | 109 |
| 18. | (சிறுபீளை மருந்து) வெண்ணெய் மலட்டு நோய்க்கு)142 | 5 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|


## மோர் மருந்துகள்


1. (விளாம்பிசினி) மோர், (பெரும்பாட்டிற்கு) 10
2. (ஆலம்பட்டை) மோர் (பெரும்பாட்டிற்கு) 20
3. (கண்டாயாதி) மோர் (தந்தவாயுவிற்கு) 28
4. (அதிவிடயச் சூரண) மோர் (வயிற்றுக் கடுப்பிற்கு) 32
5. (வெள்ளறுகு) மோர் (மேகவெட்டைக்கு) 67
6. (எலுமிச்சம்பழத்)தயிர் (பித்தம், கழிச்சலுக்கு) 105


## 6. உருண்டை வகைகள்


1. (புரசம்பட்டை) உருண்டை (வயிற்றில் கட்டிக்கு) 8
2. (சைந்தவாதி) உருண்டை (வயிற்று வலி, இசிவு, சந்நிக்கு) 13
3. (அயர்ஸாதி) உருண்டை (வெண்குஷ்டத்திற்கு) 25
4. (திந்திரிண்யாதி) உருண்டை (பித்தகாசம், ரத்தகாசத்திற்கு) 32
5. (இரஸாதி வடகம்) அக்கினி மாந்தம், மூலவாயுச்சூலைக் குணத்துடன்) 63
6. (சுண்ட்யாதி) உருண்டை (சுரத்திலுண்டாகும்) சந்நிக்கு) 71
7. (கொடிக்கள்ளிக் கொழுந்து) உருண்டை (சலக்கழிச்சலுக்கு) 73
8. (ஆவாரங்கொழுந்து) உருண்டை (சலக்கழிச்சலுக்கு) 91
9. மேகநாதி உருண்டை (சுரத்திற்கு) 118
10. காடிக்கார மாத்திரை (பவுத்திரம், மேகவெட்டைக்கு) 145

... லை (நீர்கட்டிற்கு) 161

| நெ மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|
| 12. நாபிக்குளிகை (சுரத்திற்கு) | 166 |
| 13. (சுழல்வண்டு) உருண்டை (மருந்தீட்டிற்கும், ஸ்திரீ வச்யத்திற்கும்) | 167 |
| 14. (குன்றிக்) குளிகை (சுரத்திற்கு) | 172 |


## 7. எண்ணெய் வகைகளும், தைல வகைகளும்


| | |
|---|---|
| 1. நொச்சி எண்ணெய் (வாதத்திற்குப்பூச) | 5 |
| 2. முலைப்பாலெண்ணெய் (வாதரோகத்திற் கெல்லாம்) | 5 |
| 3. மாவிங்கைத் தைலம் (உள் வீச்சு, புரவீச்சிற்கு) | 6 |
| 4. (பருத்திக்காய்ச்சாறு) இரஸம் முறிய | 8 |
| 5. (மயிலிறகாதி எண்ணெய்) சந்நிக்கு | 12 |
| 6. அமுக்கிராக்கிழங்கு எண்ணெய்) (காதில், ஈ புகுந்தால்) | 18 |
| 7. (ஆவின் பாலெண்ணெய்) பெரும்பாட்டிற்கு | 20 |
| 8. கௌரீ பாஷாண) எண்ணெய் (பவுத்திரம், ஆசன கண்டமாலைக்கு) | 22 |
| 9. (தான்றிப் ப ருப்புத்) தைலம் (வெண் குஷ்டத்திற்கு உள்ளுக்கு) | 26 |
| 10. (செங்கொடிவேலியாதி) எண்ணெய் (வீங்கு கரப்பான் வெடிகரப்பானுக்கு) | 26 |
| 11. (ஈரவெங்காய) எண்ணெய் (பிள்ளைப் பிணிக்கும், காதில் சீழ் வருகிறதற்கும்) | 27 |
| 12. ஆடுதீண்டாப்பாளை எண்ணெய் (அஸ்தி காங்கைக்கு) | 33 |
| 13. (சாறணை வேறாதி) எண்ணெய் (பவுத்திரத்திற்கு உள்ளுக்குச் சாப்பிட) | 35 |
| 14. கரிசாலை எண்ணெய் (நேத்ர வாயுவிற்கு) | 48 |
| 15. மிளகாய்த் தைலம் (நேத்ர ரோகங்களுக்கு) | 48 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| 16. | அதிமதுர வெண்ணெய் (தலைமுழுக) | 49 |
| 17. | (கீழாநெல்லிவேர்த் தைலம்) (பீனிஸத்திற்கு) | 65 |
| 18. | (சாறணையாதி) எண்ணெய் (சன்னி மேக ரோகங்களுக்கு) | 82 |
| 19. | (சிறுகுறிஞ்சாதி) எண்ணெய் (சந்நி பதிமூன்றிற்கும்) | 84 |
| 20. | (கையாந்தகரை) எண்ணெய் (இருமல், மூச்சு குன்மம், நெஞ்செரிச்சல், கிராணிக்கு) | 86 |
| 21. | உய்யக்கொண்டான் எண்ணெய் (கரப்பானுக்கு) | 89 |
| 22. | (செங்கதாரியாதி) எண்ணெய் (13வித சந்நிக்கும்) | 90 |
| 23. | கெந்தகச்சுடர் தைலம் (சுவாசகாசத்திற்கு உள்ளுக்கு) | 100 |
| 24. | (நிர்குண்டித்) தைலம் (புண்ணிற்கு) | 103 |
| 25. | வஜ்ஜிரவல்லித் தைலம் (சன்னிக்கு, வாதத்திற்கு) | 104 |
| 26. | விஷ முஷ்டித் தைலம் (சன்னிக்கு, வாதத்திற்கு) | 112 |
| 27. | அகத்தியிலைச்சாறு (எண்ணெய்) விஷ கடிக்கு) | 112 |
| 28. | கோரோசனை எண்ணெய் (சயம், காசம், இருமலுக்கு) | 114 |
| 29. | சுடர்தைலம் (13 சன்னிக்கும் 18 வித இசிவிற்கும்) | 120 |
| 30. | கெந்தக எண்ணெய் (விப்புருதிக்கு) | 121 |
| 31. | கோரோசனை எண்ணெய் (சுழி கணத்திற்கு) | 122 |
| 32. | (ஏலாதி) எண்ணெய் (மாந்தத்திற்கு) | 124 |
| 33. | கத்தாழை எண்ணெய் (மாந்தத்திற்கு) | 125 |
| 34. | வெங்காய எண்ணெய் (மாந்தம், காய்ச்சல், அஜீர்ணத்திற்கு) | 127 |
| 35. | (நீர்ப்பூலாவேராதி) எண்ணெயும், கஷாயமும் (மாந்தம், கணைச்சூட்டிற்கு) | 128 |
| 36. | பிருங்கராஜ தைலம் (தலைவாதம், தலைவலிக்கு) | 129 |

நெ மருந்துகளின் விபரம் பக்கம்

37. (இண்ட இலைச்சாறு)த் தைலம்((முகம், தலை, வீங்கின கரப்பான் நோய்க்கு) 129
38. (கெந்தகாதித்) தைலம் (புண்கள், சொறிக்கு மூழ்க) 135
39. கபால வலியின் குணமும், சம்பீரத்தைலமும் 138
40. ஏலாதித் தைலம் 143
41. (மாவிலங்கைவேராதித் தைலம்) நீர்க்கட்டுக்கு 161
42. எருக்கந்தைலம் (இளம்பிள்ளை வாதத்திற்கு) 163
43. (ஈரவெங்காய) எண்ணெய் (நீரடைப்பிற்கு) 164
44. நிர்குண்டித்தைலம் (13வித சந்நிக்கும்) 166
45. கள்ளிப்பாலெண்ணெய் (சூலைக்கட்டிற்கு, புண்ணிற்கு) 167
46. சித்ரமூல எண்ணெய் (கண்ட மாலை, பவுத்தரத்திற்கு) 170
47. குறட்டைத்தைலம் (சன்னி, வலிப்பு, புறவீச்சு உள்வீச்சிற்கு) 171
48. வலம்புரிக்காய்த் தைலம் (காதுவலி, மண்டைக்குத்தலுக்கு) 173


## 8. பற்ப செந்தூர வகைகள்


1. தாளக பற்பம் (சயம், இருமல், உடம்புக் கடுப்பு, சூலைக்கடுப்பிற்கு) 4
2. தாம்பிரச் செந்தூரம் (பெருவயிறு, மகோதரத்திற்கு) 21
3. வெள்வங்க பற்பம் (மேகத்திற்கு) 36

| மருந்துகளின் விபரம் | பக்கம் |
| --- | --- |
| 4. வங்க பற்பம் (நீர்சுருக்கு, பிரமியத்திற்கு) | 46 |
| 5. காரீயச்செந்தூரம் (நீரடைப்பு, சதையடைப்பிற்கு) | 46 |
| 6. (டங்கண் சிலாஜித்) பற்பமும், கஷாயமும் (நீர்க்கட்டு, கல்விழ) | 60 |
| 7. (வெங்கார பற்பம்) கல்லடைத்த பேருக்கு | 60 |
| 8. அயக்காந்தச் செந்தூரம் (பாண்டு ரோகத்திற்கு) | 74 |
| 9. இரஸதாளகச் செந்தூரம் (மந்தார காசம், பீனிச காசம், சுவாசகாசத்திற்கு) | 77 |
| 10. குமரி பற்பம் (சுயமக்னிச் )செந்தூரம் | 173, 102 |
| 11. சங்கு பற்பம் | 102 |
| 12. பேரண்ட பற்பம் (குன்மத்திற்கும் சயத்திற்கும்) | 132 |
| 13. தாமிர பற்பம் | 147 |
| 14. தாமிரச் செந்தூரம் | 147 |
| 15. அப்பிரகச் செந்தூரம் தீரும் வியாதிகளும், அனுபானமும் | 149 |
| 16. கெந்தகபற்பம் (சூலைக்கு) | 149 |
| 17. அரிதார பற்பம் (ஈளை, இருமலுக்கு) | 150 |
| 18. காரீயம் அல்லது கருவங்கபற்பம் மேகம் 20க்கும்) | 150 |
| 19. ரஸபற்பம் செய்யும் முறை | 153 |
| 20. தாளக பற்பமும், மாத்திரையும் (சுரத்திற்கு) | 158 |
| 21. லோகச் செந்தூரம் | 160 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| 22. | வங்க பற்பம் | 164 |
| 23. | தாமிரபற்பம் (மேகம், க்ஷயத்திற்கு) | 170 |

## 9. பூச்சு மருந்து வகைகள் (வெளிப்பிரயோகத்திற்கு)

| | | |
|---|---|---|
| 1. | (சாம்பிராணிப்) பூச்சுமருந்து (வெப்புப் பாவைக்கு) | 3 |
| 2. | (எலும்புக்) களிம்பு (கட்டி முதலியவைகளுக்கு) | 3 |
| 3. | (கழற்சிப்பருப்புப்) பூச்சு (ஆறாத புண்களுக்கு) | 20 |
| 4. | (குளிர்தாமரைக்கல்கம்) ஸ்திரீகளின் குருவித் தோஷத்திற்கு) | 27 |
| 5. | (சங்கம்பழச்சாறு) தாது புஷ்டியுண்டாக மேல்பூச்சு) | 47 |
| 6. | பூச்சு மருந்து (கண் சிவப்பிற்கு) | 59 |
| 7. | (விடத்தேரிப் புல்லுருவி) வெண்ணெய்ப்பூச்சு (பவுத்திரத்திற்கு) | 66 |
| 8. | (புங்கர் துளிர்) பூச்சுமருந்து (பிள்ளை பிறக்க) | 69 |
| 9. | (குப்பைமேனி வேர்) பூச்சு மருந்து வாழாத பெண்வாழ) | 74 |
| 10. | பூரக்களிம்பு (புண்ணிற்கு) | 76 |
| 11. | (வெள்ளைப்பாஷாணப்)பூச்சு மருந்து (மூலத்திற்கு) | 79 |
| 12. | (கழுதைவிட்டைக்) குழித்தைலம் (விஷகடிக்கு) | 89 |
| 13. | (கருநொச்சி) மருந்து (ராஜபிளவைக்கு) | 93 |
| 14. | (நரிக்கொன்னைப்) பூச்சு (வண்டுகடிக்கு) | 144 |
| 15. | (நேர்வாளப்) பூச்சு | 144 |

| நெ | மருந்துகளின் விபரம் | பக்கம் |
|---|---|---|
| 16. | (கொல்லங்கோவைக்)கிழங்குப் பூச்சும், மருந்தும் (விரியன் பாம்புக்கடிக்கு) | 156 |
| 17. | ஆடுதீண்டாப்பாளைவேர்ப் பூச்சு (விரியன் கடிக்கு) | 156 |
| 18. | (தைவேளைப்)பூச்சு மருந்து (சன்னியில் வியர்வை கண்டால்) | 164 |


## 10. கடுகு (வெல்லம் சேராத இறுகிய லேகியம்)


| | | |
|---|---|---|
| 1. | அயக்காந்த கடுகு (சோகை, காமாலைக்கு) | |
| 2. | (சவுட்டுமணை) கடுகு (வயிற்றுக்கட்டி, கெண்டை நீராமைக்கு) | 78 |
| 3. | உள்ளிக்கடுகு (குன்மசூலை, வாதரோகத்திற்கு) | 100 |
| 4. | கொம்மட்டிக்காய்க் கடுகு (குன்மம், வாயுவிற்கு) | 105 |
| 5. | (கொடிவேலிக்கடுகு) மருந்து நெய் (சுவாச காசம், உளமாந்தை, இரத்த விப்புருதிக்கு) | 136 |

ஹரி ஓம் நன்றாக

# வைத்தியத் திரட்டு

## சூலை, குன்மம், வெப்புப் பாவைக்குச் சூரணம்

கொடிவேலி நாயுருவி புங்கம்பட்டை
குலைவாழைச் சரக்குடனே குப்பைமேனி
நெடிதான பிரண்டையுட னெள்ளுச்சக்கை
நீர்முள்ளி புளியந்தோல் நிகரில்சங்கு
வடிவாக வெவ்வேறு சுட்டசாம்பல்
வனங்காட்டுக் கரணைகரிக் கரணை மூலம்
கடிதான பழுபாகல் கண்டங்கத்திரி
சிவமுள்ளி வேரென்னப் பெருமருந்து 1

.வெள் எருகுடன் பெருங்குரும்பை
பாரினில் சாறணைவேர் சத்திவேர் பொன்முசுட்டை
காரினில் தகரைமூலம் சுற்றிடு மாயில்பட்டை
வாரானைமுலையாய்! கேளாய் மாதுளைவேரின் தோலாம் 2

தோலுடன் மஞ்சள்மூன்றுந் துலங்கிய சாரம்மூன்றும்
மாலரி தேவதாரம் வசம்பும் மரத்தை கோஷ்டம்
சீலரி கடுகுரெண்டு சீரகமிளகு தேத்தான்
தோலரி விளங்ககோமம் சேங்கொட்டை காயங்கிட்டம் 3

வாகியவெட் பாலையரிசி வகைநிறை சரியாய்க் கூட்டி
ஆகிய சூரணத்தை ஆவினீ ரிலஞ்சாறு
... ... ... ... ...
தாக்கிய மாதளம்பழச் சாறுடன் பிசறிடாயே 4

பிசறிய சூரணத்தை வெருகடி காடிதன்னில்
அசறி டுஞ் சாராயத்தில் மண்டல மரைநீர் கொண்டால்

கசறிடுஞ் சூலைகுன்மம் கவுசைவெப் பாவையோடும்
அசறிடு வயற்றில்மேவ அபயமிட்டோடுங் கண்டாய் 5

இதன் பொருள் :

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | நாயுருவி வேர் |
| புங்கம் பட்டை | வாழைச்சரகு |
| குப்பைமேனி | காயவைத்த பிரண்டை |
| எள்ளுச்செடியின்தாள் | நீர்முள்ளி |
| புளியந்தோல் | சங்கின் வேர் |

இவைகளைக் காயவைத்து எரித்த சாம்பல் தனித்தனியே சமயெடை எடுத்துக்கொள்ளவும்,

| | |
|---|---|
| காட்டுக்கரணை மூலம் | நாட்டுக்கரணை மூலம் |
| பழுபாகல்வேர் | கண்டங்கத்தரிவேர் |
| சிவமுள்ளிவேர் | பெருமருந்து |
| வெள்ளருகு | பெருங்குரும்பை |
| வெள்ளைச்சாரணை வேர் | சத்திச்சாரணைவேர் |
| பொன்முசுட்டைவேர் | தகரைவேர் |
| ஆயில்பட்டை | மாதளையின்வேர்த்தோல் |
| மஞ்சள் | மரமஞ்சள் |
| கஸ்தூரிமஞ்சள் | சத்திச்சாரம் |
| யவச்சாரம் | நவச்சாரம் |
| தேவதாரம் | வசம்பு |
| சிற்றரத்தை | கோஷ்டம் |
| கடுகு | வெண்கடுகு |
| சீரகம் | மிளகு |
| தேத்தான்கொட்டை | வாயுவிடங்கம் |
| ஓமம் | சுத்திசெய்த சேங்கொட்டை |
| பொரித்த காயம் | சுத்திசெய்த கிட்டம் (மண்டூரம்) |
| வெட்பாலையரிசி | |

முதலான சரக்குகளைச் சரிசமமெடுத்துக் காயவைத்துக் கல் உரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு பசுமாட்டு மூத்திரத்தில் ஐந்து அல்லது ஆறு நாட்கள் ஊற வைக்கவும். பின்னர்

மாதளம் பழச்சாறு விட்டுப் பிசறிக் காயவைக்கவும். இந்தச் சூரணத்தில் மூவிரல் கொண்டளவெடுத்துக் காடி, சாராயம் இவற்றுடன் உட்கொள்ளவும். 20 நாட்கள் சாப்பிடவும். சூலை, குன்மம், கவுசை, வெப்புப்பாவை, வயிற்று நோய்கள் முதலானவை நீங்கும்.

கவுசை - வயிற்று வலி
வெப்புப்பாவை - வயிற்றிலுண்டாகும் கட்டி

(ஆரம்பச் செய்யுட்கள் செல்லரித்தவையாகும்)

## வெப்புப்பாவைக்குப் பூச்சு மருந்து

| | |
|---|---|
| சாம்புராணி குங்கிலியம் | பலம் ½ |
| மரத்துவெள்ளை | பலம் ¼ |
| வேம்பாடம் பட்டை | பலம் ¼ |
| மூன்று எலுமிச்சம்பழங்களின் சாறு | |
| புங்கம்பால் | படி1/8 |
| வசம்பு | வராகனெடை 1 |
| பூண்டு | வராகனெடை 1 |

இவைகளை (1 சேர் நல்லெண்ணெயில்) போட்டு, நுணாக்கொழுந்து ஒரு பிடி போட்டுக் காய்ச்சிப் பதத்தில் இறுத்துக் கொள்ளவும். (இதனை வெப்புப்பாவைக் கட்டியின் மேல் பூசக் கட்டி கரையும்)

## கட்டி முதலியவைகளுக்குக் களிம்பு

| | | |
|---|---|---|
| மனிதரின் முழங்கால் எலும்பு, கறட்டெலும்பு இவைகளை யெடுத்துப் பொடி செய்த தூள் | விராகனெடை | 5 |
| (ஈயச்செந்தூரம் | விராகனெடை | 5 |
| கையாந்தகரைச்சாறு | வெற்றிலைச்சாறு | |

இவைகளை விட்டுக் கல்வத்தின் (வெங்கலத்தாளம்) பின்புறத்தில் போட்டுக் காசிச்செம்பு (செப்பு) கொண்டு இழைத்துப் பிறகு வெண்ணெய் போட்டு நன்றாக இழைத்துக் கொடுக்கவும். (கட்டிகளுக்குப் பூசவும்.)

## சயம், இருமல், உடம்புக் கடுப்பு, சூலைக் கடுப்பிற்குத் தாளகபற்பம்

மாவலிங்கஞ் சமூலத்தை எடுத்துச் சாம்பலாக்கி அதனையே கஷாயமாகச் செய்து, இந்த கஷாயத்தை விட்டுச் சாம்பலையரைத்துக் குகை பிடித்துக் காயவைத்துக் கொள்ளவும். சுத்தி செய்த தாளகத்தை மாவிலங்கைக் கஷாயம் விட்டரைத்துக் கொண்டு, வில்லை செய்து, உலர்த்தவும். பின்னர் இவைகளை அந்த குகைக்குள்ளிட்டு மூடி சீலைமண் செய்து, நன்றாக உலர்ந்த பின்பு, ஒரு குண்டுச்சட்டியில் சாம்பல் இட்டு, அதிலே குகையை வைத்து மேலும் சாம்பல் கொட்டி அதன் மேலே சட்டி மூடிச் சீலைமண் செய்து, உலர்ந்தபின்பு அடுப்பில் வைத்து 3 நாட்கள் எரித்து, ஆறிய பின்னர் தாளகத்தை எடுத்துப் பற்பமாக்கிக் கொள்ளவும்.

தேன் முதலான தக்க அனுபானத்தில் கொடுக்க சயம், இருமல், உடம்புக் கடுப்புச் சூலைக் கடுப்பு முதலானவை தீரும். நேரத்திற்கது 3 குன்றியளவு கொடுக்கலாம்.

## வாதத்திற்கு வேப்பம்பட்டையாதிக் கஷாயம்

| | |
|---|---|
| வேப்பம்பட்டை | பலம் 20 |
| வெள்ளறுகு | பலம் 5 |
| சிவனார் வேம்பு | பலம் 5 |
| வாதமடக்கி | பலம் 5 |

அஞ்சிலைநொச்சி பலம் 5
செங்கத்தாரி வேர் பலம் 5
மிளகரணை வேர் பலம் 5
சங்கம்வேர் பலம் 5
வேம்பாரம் பட்டை பலம் 5

இவைகளையிடித்து, வெள்ளாட்டு மூத்திரம் 8 படி விட்டு, ஒரு படியாகக் காய்ச்சி, இறக்கி வைத்துக் கொள்ளவும். நேரத்திற்கு ¼ படி கொடுக்கவும். 3 நாட்கள் கொடுக்கவும். உப்பு, புளி ஆகாது. வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

## வாதத்திற்குப் பூச நொச்சி எண்ணெய்

நொச்சிச்சாறு நானாழி நேரதா யெண்ணெயையுழக்கு
பச்சைத்தகரம் வெண்கோஷ்டம் பகரும் குப்பையெருக்கம்வேர்
கச்சுக்கட்டு முலையாளே! காய்ச்சிவடித்து மேல்பூசக்
குத்திக்குடையும் வாதமெல்லாம் கூகூவென்று குடிபுகுமே!

(இ - ள்) நொச்சிச்சாறு 4 படி
நல்லெண்ணெய் 5 உழக்கு

இவற்றுடன், தகரை விதை, வெள்ளைக் கோஷ்டம், சதகுப்பை, எருக்கம் வேர் இவைகளை வகைக்கு 6 விராகனெடை எடுத்து, இடித்துச் சாறு கூட்டிய எண்ணெயில் போட்டு எரித்துக் கொண்டு, பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இத்தைலத்தை வலியோடு கூடிய வாயு வீக்கத்தில் பூசவும். உடனே வலி நிற்கும்

## வாத ரோகத்திற்கெல்லாம் முலைப்பாலெண்ணெய்

முலைப்பால் குறுணி பசுவின் பால் குறுணி
இளநீர் 1 படி

*கடைச்சரக்கு*

| | |
|---|---|
| அதிமதுரம் | இந்துப்பு |
| ஏலக்காய் | கோஷ்டம் |
| சடாமாஞ்சில் | சுக்கு |
| தக்கோலம் | சிறுநாகப்பூ |
| செவ்வல்லிக்கொடி | கடுகுரோகிணி |
| தேவதாரம் | சித்தரத்தை |
| லவங்கப்பட்டை | |

இவைகள் வகைக்கு வராகனெடை 4

நல்லெண்ணெய் 8 படி

*காட்டுமருந்து.*

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | சித்தாமுட்டி வேர் |
| நன்னாரிவேர் | அமுக்கிராவேர் |

இந்த 3 வகை மருந்துகளையும் நறுக்கி, இடித்து, சுத்தஜலம் 3 மரக்கால் விட்டு 1 படியாகக் காய்ச்சி, கடைச்சரக்குகளை இடித்து இக்கஷாயம் விட்டரைத்து எண்ணெயில் போட்டு இளநீர், பால் கூட விட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்துத் தலை முழுக வார்க்கவும்.

தலைவலி, உடம்பு வலி, வாயு, பீனிசம் முதலானவை தீரும். இதற்குக் கார்ப்பு, புளிப்பு ஆகாது.

## மாவிலிங்கத்தைலம்

| | |
|---|---|
| மாவிலிங்கைப்பட்டை | பலம் 30 |
| மாவிலிங்கயிலை பலம் | 20 |
| கொடிவேலி வேர் | செங்கதாரி வேர் |
| மிளகரணை வேர் | நிலஉவாய் வேர் |
| முருங்கைவேர்ப்பட்டை | பெருமருந்துவேர் |
| சிவதைவேர் | வேலிப்பருத்திவேர் |

குருந்தம்வேர் வாதமடக்கி வேர்
அஞ்சிலை நொச்சிவேர் சாரணைவேர்
எருக்கம்வேர்

இவைகளை வகைக்குப் பலம் 5 நறுக்கி இடித்து, 8 மரக்கால் தண்ணீர் விட்டு 2 மரக்காலாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கார்போகவரிசி |
| நற்சீரகம் | வெந்தயம் |
| பெருங்காயம் | வெளிச்சப்பிசின் |
| வெட்பாலையரிசி | செவ்வல்லிக்கொடி |
| வசம்பு | பூண்டு |
| சதகுப்பை | |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை எடுத்து, இடித்துக் கஷாயம் விட்டு நன்றாக அரைத்து, வேப்பெண்ணெய் 1 படி விட்டு மருந்துச்சரக்குகளை கூடப்போட்டு மெழுகு பதத்திலிறக்கி வடித்து உள்ளுக்கும் கொடுத்து மேலும் பூசவும். உள்வீச்சு, (சந்நி) புரவீச்சு, வாதம் எண்பதுந் தீரும்.

## இரைப்பு, இருமலுக்கு

ஆவின் பால் ஒரு சேருடன் மிளகுப் பொடி 5 வராகனெடைத்தூள் சேர்த்து 3 நாட்கள் கொடுக்கவும்.

## பாஷாணத்திற்கு மாற்று

வயல் பயறு முடிந்து, சோற்றுக்கற்றாழை மடலில் ஒரு நாள் ஊற வைத்து, மறுநாள் எடுத்துப் பசுவின் பாலுடன் அரைத்துக் கொடுக்கவும். 3 நாட்களுக்குக் கொடுக்கவும்.

## இரசம் முறிய

| | |
|---|---|
| பருத்திக்காய்ச்சாறு | படி ½ |
| எலுமிச்சம்பழச்சாறு | படி ¾ |
| பசுவின் பால் | படி ½ |
| சுத்தமான ஆமணக்கெண்ணெய் | படி ¾ |

இந்த நான்கு வகைகளையும் ஒன்றாகச்சேர்த்து 3 நாட்கள் கொடுக்கவும்

மலத்திலே தண்ணீர் விட்டுக் கழுவிப்பார்க்க ரசம் எடுக்கலாம்.

## வயிற்றில் கட்டிக்கு

புரசம்பட்டை, முத்தின மரத்தின் பட்டை பலம் 50 கொண்டுவந்து துவைத்து, ஒரு பானையில் போட்டு 8 மரக்கால் தண்ணீர் விட்டு, இரண்டு படி கஷாயமாகக் காய்ச்சி இறக்கிக்கொண்டு கஷாயத்தில் மருந்து

| | |
|---|---|
| திப்பிலி | இந்துப்பு |
| பெருங்காயம் | பூண்டு |
| நறுக்குமூலம் (திப்பிலிமூலம்) | ஓமம் |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து, முன் சொன்ன கஷாயத்தை விட்டு அரைத்து, உருண்டைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை 3 நாட்கள் எருமைப்பாலிலே குழப்பிக்கொடுக்கவும்.

**பத்தியம்** : வெந்நீர் சோறு கொடுக்கவும்.

## சோகை, காமாலைக்கு "அயக்காந்தக் கடுகு"

திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி) பூண்டு

ஓமம் சீரகம்
கருஞ்சீரகம் இந்துப்பு
அக்கிராக்காரம் சித்தரத்தை

இவைகள் வகைக்கு பலம் ¼

சுத்திசெய்த அரப்பொடி பலம் 1
சுத்திசெய்த காந்தம் பலம் 1
(கொள்ளுச்சாற்றில் சுத்தி செய்யவும்)
பிரமியிலைச்சாறு காட்டுமல்லிகைச்சாறு
கையாந்தகரைச்சாறு அவுரியிலைச்சாறு
எலுமிச்சம்பழச்சாறு

இவைகள் வகையொன்றுக்குச்சாறு படி 1

இந்தச்சாறுகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து கடைச் சரக்குகளை மேற்படிச்சாறு விட்டரைத்து, மிஞ்சின சாற்றை விட்டு அடுப்பின்மேல் வைத்துக்காய்ச்சி, இறுகின பதம் வந்தபோதுஒரு சேர் நல்லெண்ணெய் விட்டுக்கிண்டி இறக்கவும்.

**பத்தியம்** : திருக்கை, சுறாக்கருவாடு கூட்டிக்கொள்ளவும். கார்ப்பு (உரைப்பு) புளிப்புத்தவிரவும். கருவாட்டுக்கு மிளகு, உள்ளி கதிக்கக் (அதிகமாக) கூட்டிக்கொள்ளவும்.

சோகை, காமாலை, பாண்டுரோகம், விஷப்பாகம், பித்த காமாலை, வயத்தில் கட்டி முதலான நோய்கள் தீரும். இது கைகண்டது.

## விக்கலுக்கு மருந்து

தேன் வளகியைப் பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்கவும். விக்கல் நிற்கும். (மருந்து தெரியவில்லை)

## பெரும்பாட்டிற்கு மருந்துகள்.

1. விளாம் பிசினும் , சங்கம் வேரும் அரைத்து எருமை மோரில் குழப்பிக் கொடுக்கவும். பெரும்பாடு நிற்கும்.

2. சிறுகீரை, 1 கழஞ்சு பசுவின் பால் விட்டரைத்து குழப்பிக்கொடுக்கவும். இந்தப்படி 3 நாட்கள் கொடுக்கவும்.

## இருமலுக்கு

எருக்கம்பால் 1 வராகன் பசுவின் பால் 3 உழக்கு
மிளகுப்பொடி

இவை மூன்றும் கூட்டிக்கொடுக்கவும். இந்தப்படி 3 நாட்கள் கொடுக்கவும்.

## விரணசுக்கிரனுக்குக் "கண்ணிலிட உருண்டை"

| | |
|---|---|
| பச்சைக்கர்ப்பூரம் | பணவெடை |
| கோரோசனை | 4 |
| தான்றிக்காய் | 4 |
| துத்தம் | 4 |
| துரிசு | 4 |
| நந்தியாவட்டம் வேர் | 4 |
| வெண்கல் (படிக்கல்) | 4 |
| மண்டையோட்டுத்தூள் | 4 |
| ஓரிலைத்தாமரைவேர் | 4 |
| வெள்ளைக்காக்கணம்வேர் | 4 |
| பொன்னாங்காணி வேர் | 4 |
| சிறுகீரைவேர் | 4 |

இவையெல்லாங்கூட்டி இடித்து எலுமிச்சம்பழச்சாற்றில் 7 நாட்கள் அரைத்துப்பின் தாலத்தில் பிசைந்து, நீளமான மாத்திரைகளாக உருட்டி, நிழலில் காயவைத்துக் கொள்ளவும். ஒரு வருடம் சென்றபின் முலைப்பாலில் உரைத்துக் கண்களிலிட விரணசுக்கிரன் தீரும். வெற்றிலைச் சாற்றுடன் இழைத்துப்போடத் தீரும்.

## வெள்ளாட்டுக் கோமியக்கஷாயம் (சகலவியாதிகட்கும்)

| | |
|---|---|
| வெத்திலை | 1000 |
| காசுக்கட்டி | விராகன் 4 |
| குதிரைப்பல் பாஷாணம் | விராகன் 4 |
| சிவனார்வேம்பு | பலம் 50 |
| முருங்கை வேர் | பலம் 50 |
| நில உவாய் கிழங்கு | பலம் 50 |
| ஓமம் | பலம் 20 |

இவற்றையெல்லாம் வெள்ளாட்டுக்கோமியம் (மூத்திரம்) விட்டு அரைக்கவும். வெற்றிலைச் சாற்றில் பாஷாணம் காசுக்கட்டி அரைக்கவும். இந்த இரு மருந்துகளையும் கூட்டிக் கோமியத்துடன் குழப்பி அ டுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாக்கி இறக்கிக் கொள்ளவும். இந்தக் கஷாயத்தில் ஒரு அவுன்ஸ் வீதம் மூன்று வேளை உட்கொள்ளச் சகல வியாதிகளும் போம். கைகண்டது.

**பத்தியம்** : உப்பு, புளியாகாது.

குறிப்பு: 1. வெள்ளாட்டுக் கோமியம் 16 மரக்கால் எடுத்துக் கொள்ளவும்.

2. வாத ரோகங்கள், தோல் வியாதிகள், காங்கை, சயம், இருமல் இவைகள் தீரும்.

## சந்நிக்கு மருந்து

மயிலிறகு வேப்பெண்ணெயில் சுட்டுப்போட்டுப் புலித்தோலும் சுட்டுப்போட்டுச் சங்கம் வேர்ப்பொடியும் போட்டுக் கண்டங்கத்திரி வேர்ப்பொடி, தூதுவளை வேர்ப்பொடி இவைகளை குழப்பிக் கொடுக்கவும்.

குறிப்பு; சரக்குகள் 1 வராகனும், வேப்பெண்ணெய் 1 சேரும் எடுத்துக்கொள்வோம்.

## மூலத்திற்கு மருந்து

வெள்ளைப்பாஷாணம் பலம் 9 கெந்தகம் பலம் 9

அனலில் வெதுப்புப்பொடியாக்கிச் சுண்ணாம்புகொட்டைப் பாக்களவு கூட்டி, விளக்கெண்ணெயில் குழப்பி அடைபோல தட்டி வெற்றிலையில் வைத்து மூலத்தில் போடவும். இவ்வாறு கட்டிவர மூலமுளை அற்றுப்போம்.

## நீர்க்கட்டுக்கு

| | |
|---|---|
| பனையோலைச் சுட்ட சாம்பல் | 10 வராகனெடை |
| நாயுருவிச்சாம்பல | 10வராகனெடை |

எலுமிச்சம்பழச்சாற்றில் வெவ்வேறாக அரைத்துக் குக்குடபுடம்போட்டுத் தனித்தனியாக எடுத்துக்கொண்டு

| | |
|---|---|
| பொரித்த வெங்காரம் | 10 வராகனெடை |
| பொரித்த பலகரை (சோழி) | 10 வராகனெடை |

இந்த மருந்துகளைக் கூட்டிப் பொடிசெய்து குழாயில் அடைத்து வைத்துக்கொண்டு, நீர் கட்டின பேருக்கு மோரில் வெருகடி (ஒரு குத்தளவு)ப் பிரமாணம் கொடுக்கவும். இப்படி 4 நாட்கள் கொடுக்கவும், துர் மாம்ஷம் அடைத்தாலும் மாறும்.

| | |
|---|---|
| குக்குடபுடம் | 1 சாண் நீள அளவுள்ள புடம் |

## வாதகுன்மத்திற்குச் சூரணம்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கொடிவேலிவேர் |
| சவ்வியம் | கடுக்காய்த்தோல் |
| தான்றித்தோல் | நெல்லிப்பருப்பு |
| பொரித்த பெருங்காயம் | அதிவிடயம் |
| வெள்ளை வெங்காயம் | ஓமம் |
| ஆயில்யப்பட்டை | தலைச்சுருளி வேர் (பெருமருந்து) |
| யானைத்திப்பிலி | சுத்திசெய்த நேர்வாளம் |
| முக்காவேளை வேர் | கொளுஞ்சிவேர் |
| சாரணைவேர் (சத்தி) | வெள்ளைச்சாறணை வேர் |
| காட்டுமல்லிகைவேர் | அஞ்சலைநொச்சிவேர் |
| கையாந்தகரைவேர் | நிலவேம்பு |
| மலைவேம்பு | அகில்கட்டை |
| சடாமாஞ்சில் | சீரகம் |
| கருஞ்சீரகம் | வெங்காரம் |
| வளையலுப்பு | இந்துப்பு |
| வெடிட்டிலுப்பு | கறியுப்பு |
| அட்டுப்பு (உழமண்) | கல்லுப்பு |

இவைகளையெல்லாம் சமன்கூட்டிக் (காயவைத்து) கல்லுரலில் இட்டிடித்துச் சீலையில் வடிகட்டிக்கொண்டு, வெருகடிப்பிரமாணம் வெந்நீரில் அல்லது தேனில் உட்கொள்ளவும். வயிறு கழியும். வயிற்றுவலி, குன்மம், வாதம், உஷ்ணம், பித்தம், சிலேத்துமம், கவுசை, வயிற்றுளைவு முதலிய நோய்கள் தீரும். உத்தமம்.

## வயிற்றுவலி, இசிவு, சந்நிக்கு உருண்டை

சயிந்தவ லவணம் (இந்துப்பு)
காய்ச்சுப்பு (வளையலுப்பு)

| | |
|---|---|
| கல்லுப்பு | பெருங்காயம் |
| கழற்சிப்பருப்பு | சித்ரமூலம் |

இவைகளை (வகைக்கு 1 பலமெடுத்து)ச் சூரணித்து வெள்ளை வெங்காயம் 10 பலமெடுத்து உரித்து, இதுவெல்லாம் அரைத்துக் கழற்சிக்காய்ப் பிரமாணம் உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

சந்நிவாதம், வயிற்றுவலி, இசிவு, குல்மம் இவைகளுக்கு ஒரு உருண்டை வீதம் 5 நாட்களுக்கு அல்லது ஏழு நாட்களுக்கு கொடுக்கவும். கைகண்டது.

**புண்கள், சலமேகம் 20, வாதசூலைக்கு**
**"இரச கற்பூரப்பதங்கம்"**

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரசம் | 12 விராகன் |
| சூடம் | 24 விராகன் |

எடுத்து, குமரிச் (சோற்றுக்கற்றாழை) சாறு விட்டரைத்து குகை பண்ணியதில் ரசத்தைவிட்டு ஒரு சட்டியில் ஒரு மரக்கால் உப்புப்போட்டு அதற்குள்ளே குகையை வைத்து வேறொரு சட்டிகொண்டு மூடி, 7 சீலைமண் செய்து அடுப்பின் மேல் வைத்து 3 ஜாமங்கள் எரித்து, மேல் சட்டியில் சேரும், பதங்கத்தை எடுத்துக்கொண்டு குகைக்கரியுடன் ரஸப்பதங்கத்தையும் கூட்டித் திருகுக்கள்ளிப்பால் ½ படி விட்டு அரைத்து, உச்சிக் கலசத்திலே போட்டுத் திருகுக்கள்ளிச் சோறுகொண்டு கலசத்து வாயையடைத்துச் சீலைமண் செய்து வராகிப் புடம்போட்டுக் (காட்டெருமுட்டை) ஆறவிட்டு எடுத்துக்கொண்டு ஒரு நேரத்திற்கு ஒரு பணவெடை வீதம் ( 3 குன்றியளவு) வெல்லத்துடன் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்**: புண்கள், 20 சதவீத சலமேகம், வாத ரோகம், தீராத ரோகம் எல்லாந் தீரும்.

வராக புடம் - 50 எருவில் போடும் புடம்.

## பலவித எலிகடிக்கு மருந்துகள்

மாவிந்தன் என்னும் எலிகடித்தால் உடம்பு உலரும். இருமும். தலை கிறுகிறுக்கும்.

மருந்து: வனமரை (அவரை)யிலையைப் பசுவின் பாலில் குடிக்கத் தீரும்.

உமையகிரி என்னும் எலி கடித்தால் சிணுக்கு இருமல், கை கால் ஓய்ச்சல் உண்டாகும். நீர் சிறுத்துக் கழியும்.

இதற்கு மருந்து: அரைக்கீரையைச் சுண்டித் தின்னத் தீரும்.

உமையன் என்னும் எலி கடித்தால் மேல் சுவாசம் வாங்கும். உடம்பு உலரும். வயிறு கழியாது.

மருந்து: முத்தின விரால் அறுத்து அதிலே இருபது பல்லியை அரைத்து அந்த மீனில் தடவி அவித்துத் தின்னத் தீரும்.

சுந்தரிக்கன்னி என்னும் எலி கடித்தால் உடல் வீங்கும். கண் தெரியாது. வயிறு கழியாது.

இதற்கு மருந்து: வெள்ளடம்பங்கொழுந்து அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கத் தீரும்.

மண்டலி என்னும் எலி கடித்தால் வயிறு பொருமும். கைகாலோயும். கண் சிவக்கும். இருமும்.

இதற்கு மருந்து: அவுரிச்சாறு குடிக்கத்தீரும்.

மதியன் எனும் எலி கடித்தால் முகம் வீங்கும். காது கேளாது. இருமும். இளைப்பாக இளைக்கும்.

இதற்கு மருந்து: உச்சந்தலையில் சிறிது கீறி அவிரிச்சாசறு தேய்த்து அவிரிச்சாறு குடிக்கவுந் தீரும்.

சாப்புக்காரயன் என்னும் எலி கடித்தால் தலைநோகும். வெதும்பும். மூக்கு அடைக்கும்.

மருந்து: மருக்காரம் பழம் பசுவின் பாலில் குடிக்கத் தீரும்.

மோகந்தன் என்னும் எலி கடித்தால் வயிறும் முகமும் வீங்கும். காலோயும். இருமும்.

இதற்கு மருந்து: பிராய்ப்பட்டையை நறுக்கி கஞ்சித் தெளிவிலேஊறவைத்துக் கொடுக்கத் தீரும்.

அருவாயன் என்னும் எலி கடித்தால் தலைச்சுற்றும். பித்தமதிகரிக்கும். உடம்பு உலரும். இருமும்.

இதற்கு மருந்து: அழிஞ்சில் வேர்ப்பட்டை அரைத்து ஆவின் பாலில் குடிக்கத் தீரும்.

கல்நெஞ்சன் என்னும் எலி கடித்தால் உடம்பெங்கும் வீங்கும். வெடிக்கும்.புண்போல் நோகும். நெஞ்சில் சளி விழும்.

இதற்கு மருந்து: சாரைப்பாம்புக்கண்டமும், உள்ளி வசம்பும் கூட்டிக் கடுகு எண்ணெயில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும்.

மோதடன் எனும் எலிகடித்தால் நெஞ்சடைக்கும். சலம் விழும். உடல் உலரும்.

இதற்கு மருந்து: எள்ளுப்புண்ணாக்கு, சாரைப்பாம்பு உப்புக்கண்டமும், செவ்வகத்தியிலையின் சருகு இவற்றுடன் எண்ணெய் நாழி வார்த்து, எரித்து வடித்துக் கொடுக்க தீரும்.

மூகன் என்னும் எலி கடித்தால் பல் வலிக்கும். வெதும்பும். வயிறு கழியும். இருமும்.

இதற்கு மருந்து: ஆவின் மோரில், நத்தை, வாழைப்பட்டைச்சாறு விட்டுக்குடிக்கத் தீரும்.

பகைவீரன் என்னும் எலி கடித்தால் வயிறு எரியும். வாய்நீர் சுழற்றும். குரல் கம்மும். இருமும்.

இதற்கு மருந்து: நெய்க்கொட்டான் பழமும் (பூவந்திப்பழம்) தலைச்சுருளி வேரும் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

பகவதி என்னும் எலிகடித்தால் குணம்: சோறு செல்லாது. இருமும். அசாத்யமாக இளைக்கும்.

இதற்கு மருந்து: பிராய்ப்பட்டையை நறுக்கிக் கொடுக்கத் தீரும்.

சம்புராயன் என்னும் எலிகடித்தால் சுரீர் சுரீரென்று வலிக்கும். வயிறு கழியும். வெதும்பும்.

இதற்கு மருந்து: சாரைப்பாம்புக்கண்டமும், பல்லி நாக்கும், நண்டு நிணமும், ஆடுதீண்டாப்பாளைச்சாறும் வேப்பெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும்.

சநிராகாயனென்னும் எலி கடித்தால் சரீரமெல்லாம் வீங்கும். உலரும். வெடிக்கு'ம். இருமும்.

இதற்கு மருந்து: சுத்தரி நாயகன் விதையையரைத்துப் பசுவின் பாலிற் குடிக்கத் தீரும்.

விநாயகன்மூர்த்தி என்னும் எலி கடித்தால் வீணந்தண்டிலே இசும்பும். (முதுகுத் தண்டு விரைத்துக் குனிய நிமிர முடியாது.)

இதற்கு மருந்து: வேப்பரிசி, புங்கரிசி, இலுப்பையரிசி ரசம், கெந்தகம், எலிப்பாஷாணம் கூட்டி நொச்சியிலைச்சாறு விட்டரைத்து 3 பாக்களவு உட்கொள்ளத் தீரும்.

குறிப்பு: 18 வித எலிகளின் பேதங்களை அறிவது எளிதல்ல. நம் முன்னோர்கள் அவைகளைப் பாகுபடுத்திக் கூறியிருக்கின்றனர்.

### 18 வித எலிகடிகளுக்கும் பொதுவான மருந்து

குருவை நெல் அவல் நாழி கள்ளிப்பால் விட்டு ஊறவைத்து நிழலுலர்த்தலாக உலர்த்தி 8 நாட்கள் உட்கொள்ளத் தீரும்.

### எலிகடியென்றதற்கெல்லாம் பொதுவான மருந்து

அழிஞ்சில் பட்டை 1 விரல் நீளம், இருவிரல் உயரம் சரியாக நறுக்கி, அரைத்துப் பழம் புளி, ஒரு எலுமிச்சங்காயளவு கூடப்போட்டு அரைத்து, களிப்பாக்களவு மூன்று உருண்டை முலைப்பாலில் தோய்த்துத் தின்னவும். மோரும் சோறும் உண்ணவும். மறுநாள் அரிசிச்சோறு உண்ணவும். ஏழு நாட்கள் பத்தியம்.

### வாயுகுன்மத்திற்கு "எருக்கிலை ஓமக்கருக்கு"

ஓமம் படி 1½ எடுத்துக் கையாந்தகரைச்சாறு 4 படி விட்டு ஊறவைத்துச்சாறு சுண்டின பிறகு நன்றாய் உலர்த்தி இடித்து, வஸ்திரகாயம் பண்ணி, எருக்கிலை தொன்னை தைத்து, அதில் சூரணத்தை வைத்துச் சட்டி காயவைத்துத் தைத்த தொன்னையும், சூரணத்தையும் புரட்டி, அடுப்பின் மேலேற்றி, இலை கறுகின பிறகு எடுத்து, இடித்துப் புதுக் கலசத்தில் வைத்துக்கொண்டு மோரில் ஒரு குத்தளவிட்டுத் தினம் 3 வேளை கொடுக்கவும். வயிற்று வலி தீரும்.

### காதில் ஈ புகுந்தால் மருந்து

அமுக்கிரா வேர் ஒரு துண்டு நல்லெண்ணெயில் கொதிக்க வைத்துப் போதுமான சூட்டுடன் காதில் விடச் செத்துதவிழும்.

வலிக்கண்டால் பேயச்சுரைக்காயும் இந்துப்பும் நல்லெண்ணெயில் காய்ச்சிக் காதில் விடவும். வலி தீரும்.

**பிள்ளை விழ**

விடத்தேரை வேரைத் தலையிலும் கட்டவும். இந்த வேரையரைத்து அறையிலும், காலிலுந் தடவப் பிள்ளை விழும்.

**கிரந்தி, புண், சூலை, ரசமுறிவு, வெண்குஷ்டத்திற்கு "பாவன ஓமம்"**

| | |
|---|---|
| சங்கம்பட்டை | ஒரு பிடி |
| சங்குக்குப்பி வேர்ப்பட்டை | ஒரு பிடி |
| கொடிவேலித்தூள் | ஒரு பிடி |
| மிளகறணை வேர்த்தோல் | ஒரு பிடி |
| செங்கதாரி வேர்த்தோல் | ஒரு பிடி |
| சிவனார்வேம்பு வேர்த்தூள் | ஒரு பிடி |
| பூவரசம்பட்டை வேர்த்தூள் | ஒரு பிடி |
| ஓமம் (புடைத்தது) | 2 பிடி |
| வெள்ளறுகுத்தூள் | ஒரு பிடி |
| துளசிவேர்த்தூள் | ஒரு பிடி |

இதுவெல்லாம் புதுப்பானையில் போட்டு

| | |
|---|---|
| வெள்ளாட்டுக் கோமியம் | பதக்கு |
| கையாந்தகரைச்சாறு | பதக்கு |

கூடவிட்டு ஒரு முடாவிலிட்டு அதற்கு நடுவில் மருந்துடன் கூடிய பானையை வைத்து பானையின் கழுத்தளவு மணல் போட்டு அடுப்பின் மேலேற்றி எரித்துப் பனைமட்டை கொண்டு கிண்டி சாறுகள் முழுவதும் வத்தின பிறகு இந்த மருந்தைக் காயப்போட்டு, இடித்துச் சூரணம் பண்ணி வெருகடிப் (ஒரு குத்தளவு) பிரமாணம் தேனில் உட்கொள்ளவும். 20 நாட்கள் அந்தி சந்தி கொள்ளவும்.

**பத்தியம்** : புளி, புகையிலை தவிர்க்கவும். கைகண்டது.

## பெரும்பாட்டிற்கு மருந்து

1. ஆவின் பால், முத்தின வேப்பம்பட்டை, நல்லெண்ணெய் மூன்றுங் கூட்டியெரித்துப் பதமாக்கி உள்ளுக்கு கொள்ளவும். ஸ்திரீகளின் அதிகமான இரத்தப் போக்கு நிற்கும்.

2. ஆலம்பட்டையும், இந்துப்பும் அரைத்து எருமைமோரில் கரைத்துக் குடிக்க ரத்தமறும். உள் புண்ணும் ஆறும்.

## ஆறாத புண்ணுக்கு மருந்து

கழற்சிப் ப ருப்பை உரைத்து, புண்ணில் போட ஆறிப்போம்.

புரை விழுந்த புண், விப்புருதி இதுவெல்லாந் தீரும்.

## இரஸப்பதங்கம் செய்முறை

ஒரு சட்டியிலே, செங்கல் பொடியும் உப்பும் விரவி கலந்து (கலந்து) முக்கால் சட்டி மாத்திரம் இட்டு நடுவே, பல்லாரி குழி போல் குழித்துக் கண்டங்கத்திரி வேர் அரைத்துக் குகையாய்ப் பிடித்து, அந்தக்குழியிலே குகையைவைத்து வேண்டிய அளவு பாதரஸம் விட்டுப் பொருத்தி மேலே வாய்க்கும் பொருந்துமாறு மற்றொரு சட்டிகொண்டு மூடி ஏழு சீலைமண் செய்து, அடுப்பின்மேல் வைத்து, மூன்று நாள் இராப்பகல் இடைவிடாமல் பத்தின மருந்தை வழித்துக் கொண்டு அதிலே½ பணவெடை வெல்லத்திலேயாகுதல் தேனிலேயாகுதல், கொள்ளச் சத்திகுன்மம், வலிகுன்மம், பக்கசூலை, பக்கவாயு, இதுமுதலான வி.யாதிகளெல்லாந் தீரும். புளி, புகையிலை தவிர்க்கவும்.

## அக்கினி குமாரன்

| | |
|---|---|
| சுத்திசெய்த ரஸம் | சுத்திசெய்த கெந்தகம் |
| சுத்திசெய்த காந்தம் | சுத்திசெய்த அரப்பொடி |

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு வீதம் எடுத்துக் கற்றாழஞ் சாறுவிட்டு ஒரு ஜாமம் அரைத்து, உருண்டைகளாக உருட்டி நிலத்தில் மெழுகி, அதில் வைத்து மூடி 2 நாழிகையிருக்க விட்டு, எடுக்க வெந்துபோயிருக்கும். அதைப் பொடிசெய்து தேனில் 3 பணவெடை உட்கொள்ள, வலிகுன்மம், பக்கசூலை, பக்கவாயு, பாண்டுரோகம் இது முதலான வியாதிகள் தீரும். புளி, புகையிலை தவிர்க்கவும்.

## தாம்பிரச்செந்தூரம்

தாமிரத்தை ஈசலிறகுபோலே தட்டிப் புளியிலை போலே நறுக்கிக்கொண்டு,புளியிலைச்சாறு, புளித்தகாடி எலுமிச்சம்பழச்சாறு, கள்ளிப்பால் இந்தத் திரவங்களிலே மும்மூன்று நாளூறப்போட்டு, எடுத்து ஒரு பலம் செம்பிற்கு, அரைப்பலம் நெல்லிக்காயக் கெந்தகம் நொச்சியிலைச்சாறு விட்டரைத்து தகட்டில் பிசறி ஒரு சட்டியிலே ஒன்றோடொன்று ஒட்டாமல் பரப்பி, மேலே ஒரு சட்டிகொண்டு மூடிச் சீலைமண்செய்து, எருவடுக்கிக் கஜபுடமிட்டு எடுத்துப் பொடிசெய்து, ஒரு பணவெடை செந்தூரம் தேனில் உட்கொள்ளக் கவுசை, பெருவயிறு, மகோதரம் உதரத்திலுள்ள வியாதிகள் எல்லாம் தீரும்.

**குறிப்பு** : கஜபுடம் - 22½ அங்குல உயரம், அகலம், சுற்றளவுள்ள வட்டமான குழியில் எருக்களையடுக்கி மத்தியில் சட்டி வைத்துப் புடம் போடவும்.

### மாதவிடாயாக மருந்து

நந்தியாவட்டம் இலையும் குன்றியிலையும் சமன் எடுத்துக் காயவைத்து, இடித்துப் பொடிசெய்து, நெல் பொரியுடன் கொடுக்கவும். இப்படி மூன்று நாட்கள் கொடுக்கவும். மாதவிடாயாவாள்

### இதுவுமது

எலுமிச்சம் பழச்சாறு உழக்கு, சோமநாதிகாயம் கூட்டிக் கஞ்சியில் கொடுக்கத் தீட்டாவாள். கரு அழியும்.

### இதுவுமது

நீர்க்கடம்பங் கொட்டையை ஆழாக்கு முலைப்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

### ஆசன கண்டமாலைக்கு (பவுத்திரம்)

| | |
|---|---|
| கௌரீபாஷாணம் | விராகன் 2 |
| எலிப்பாஷாணம் | விராகன் 2 |
| காசுக்கட்டி | விராகன் 2 |
| களிப்பாக்கு | விராகன் 2 |
| காவிக்கல் | விராகன் 2 |
| துத்தம் | விராகன் 2 |

இளங்கன்றையுடைய எருமை வெண்ணெயை காய்ச்சிய வெந்நீரில் முன்சொல்லிய சரக்குகளைத் தூள்செய்து வறுத்துக்கொள்ளவும். பின்னர் ஒரு சாணைக்கல்லில் எருமை வெண்ணெய் ½ சேர் வைத்து ஒரு விராகனெடை பாதரசம விட்டு முன் பொடிகளையும் இட்டு அரைத்து சீலையிலூட்டித் திரி செய்துகொள்ளவும். பின்னையும் 3 நாட்கள் போட்டபின் புங்கெண்ணெயும் வேரும் இதை நன்றாகப்பிழிந்துகொண்டு

நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் அது மூன்றுவகை எண்ணெய்லுங்கூட்டிக் காய்ச்சி சீலையில் நனைத்துப் போடவும்.

**தீரும் வியாதிகள்** : ஆசனகண்டமாலை (பவுத்திரம்) ஓடு விப்புருதி இதுவெல்லாந் தீரும்.

## பெரும்பாட்டிற்கு மருந்து

| | |
|---|---|
| 1. ஆதண்டையிலைச்சாறு | ஒரு உழக்கு |
| 2. பசுவின் நெய் | ஒரு உழக்கு |
| 3. மிளகுத்தூள் | ஒரு உழக்கு |

இவைகளைச்சேர்த்து 3 நாட்கள் குடிக்கவும். உதிரம் அறும். கைகண்டது. கசப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

| | |
|---|---|
| 2. சுக்குப்பொடி | உழக்கு |
| பசுவின் நெய் | உழக்கு |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து ஆறு நாட்கள் உட்கொள்ளவும். பத்தியம் நன்றாகப் பிடிக்கவும். உதிரப்போக்கு நிற்கும்.

## பெருவியாதிக்கு மருந்து (கருங்கோழிச்சூரணம்)

ஒருமுழ நீள, அகலமுள்ள ஒரு குழி வெட்டி அந்தக்குழிக்குள்ளே ஒரு கலசம் வைத்து, அதிலே நாழி அரிசி போட்டு அதற்குள்ளே ஒரு விரியன் ஒட்டையிட்ட பானையை வைத்து, அதற்குள்ளே ஒரு விரியன் பாம்பை அடித்துப் போட்டு, கலத்தின் வாய்க்குப் பொருந்தும்படி அகல் கொண்டு மூடிப்புதைத்து விடவும். நான்கு நாட்களுக்குப் பிறகுயெடுத்துப் பாம்பை எறிந்துபோட்டு கலசத்திலுளள அரிசியை எடுத்துக்கொள்ளவும். கருங்கோழியைக் கட்டி வைத்து அந்த அரிசியைக் கோழிக்குப் போட்டு வரவும். அந்தக் கோழியின் இறகெல்லாம் உதிர்ந்துபோம்.

அதன் பிறகு மருந்து வகைகள்

| | |
|---|---|
| எள்ளுக்காய் | அழிஞ்சில்பட்டை |
| தலைச்சுருளி அதாவது | வாகைப்பட்டை |
| (பெருமருந்துபட்டை) | புரசம்பட்டை |
| மாவலிங்கப்பட்டை | சங்கம்பட்டை |
| அவுரிச்சமூலம் | புங்கம்பட்டை |
| வட்டத்துத்திவேர் | கத்தாழைவேர் |
| சிவனார்வேம்பு | கொடிவேலிவேர்ப்பட்டை |
| அமுக்கிராவேர் | |

முதலான சரக்குகள் வகைக்கு காலேயரைக்கால் பலம் வீதமெடுத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| ஆடுதின்னாப்பாளைச்சாறு | ஒரு உழக்கு |
| பேய்க்குமட்டிச்சாறு | ஒரு உழக்கு |
| அவுரிச்சாறு | ஒரு உழக்கு |
| சித்திலைவிழுதிவேர்ப்பட்டைச்சாறு | ஒரு உழக்கு |
| பொன்னாவாரைவேர்ச்சாறு | ஒரு உழக்கு |
| வேலிப்பருத்தி வேர்ச்சாறு | ஒரு உழக்கு |
| கண்டங்கத்தரிவேர்ச்சாறு | ஒரு உழக்கு |
| நிலவாகைவேர்ச்சாறு | ஒரு உழக்கு |
| காட்டுக்குறிஞ்சாவேர் | ஒரு உழக்கு |
| பெருஞ்செருப்படிவேர்ச்சாறு | ஒரு உழக்கு |
| நெய்க்கொட்டான் வேர் (பூவந்திவேர்)ச்சாறு | ஒரு உழக்கு |

கடைச்சரக்குவிபரம்

| | |
|---|---|
| சவுக்காரம் | கல்லுப்பு |

காசுக்கட்டி கடுக்காய்த்தோல்
சாதிக்காய்

வகையொன்றுக்கு பலம் 1/4

காட்டுமருந்து, கடைச்சரக்கு இவைகளையெல்லாம் உலர்த்திக் கல்லுரலிலிட்டு, நன்றாகச் சூரணம் பண்ணிக் கருங்கோழியின் கால், தலை, குடல், சிறகு இவைகளை நீக்கி விட்டு அதற்குள்ளே திணித்துத்தைத்து, ஒரு சட்டியில் போட்டு, சாறு வகையெல்லாம் ஊற்றி நன்றாக வேகவைத்து வெந்த பிறகு எடுத்து நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து, புதுக் கலசத்தில் வைத்துக்கொண்டு 21 நாட்கள் வெருகடிப்பிரமாணம் (ஒரு குத்தளவு) உட்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**: பெருவியாதி, செங்குஷ்டம், வெண்குஷ்டம், வண்டுகடிகள், விஷகடிகள் முதலானவைகள் தீரும்.

கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப்பதார்த்தங்களையும் தவிர்க்கவும்.

## வெண்குஷ்டத்திற்கு மருந்து

| | |
|---|---|
| சுத்திசெய்த அரப்பொடி | 1 வராகனெடை |
| சுத்திசெய்த பாதரசம் | 1 வராகனெடை |

இவற்றை நன்றாக அரைத்துக்கொண்டு பொடியானபின்,

| | |
|---|---|
| காட்டுமல்லிகையிலை | 1 பிடி |
| கையாந்தகரைச்சமூலம் | 1 பிடி |
| கூத்ததங்குதம்பைச்சமூலம் | 1 பிடி |

இவைகளையும் போட்டு

பிராய்பட்டைச்சாறு
மருதம்பட்டைச்சாறு
ஓதியம்பட்டைச்சாறு

இம்மூன்று வகைச் சாறுகளையும் தனித்தனியே விட்டு அரைத்து பனிரெண்டு உருண்டைகள் செய்து கொள்ளவும். தினம் 2 மணி நேரமும் நெய்யில் தோய்த்து உட்கொள்ளவும்.

பத்தியம் பிடிக்கவும். வெந்நீரில் கூட்டவும்.

### வெண்குஷ்டத்திற்கு மருந்துகள்

| | |
|---|---|
| தான்றிக்காயினுட்பருப்பு | 2 பணவெடை |
| வேலிப்பருத்தியிலை | 2 பணவெடை |

இவ்விரண்டையும் அரைத்து வட்டிலில் விட்டு வெய்யில்லே வைக்கத் தைலமாகும். வெற்றிலையில் தடவித்தின்ன வெண்குஷ்டம் தீரும்.

2. ஞாயிற்றுக்கிழமை நாள் பொங்கலிட்டு, முசுமுசுக்கையிலை நன்றாகக் கசக்கி கண்ணில் விட்டுத் தலையில் உள்ளங்கால், உள்ளங்கையிலும் சாறுவிட்டுத் தேய்க்கவும்.

### வீங்கு கரப்பான், வெடிகரப்பானுக்கு

| | |
|---|---|
| செங்கொடிவேலிவேர் | செங்கதாரிப்பட்டை |
| முக்குருந்தவேர் | தாண்டாவேர் |
| சிறுகளாவேர் | அவுரி.வேர் |
| அவுரி இலை | பிடரிவேர் (ஒருவகைப்புல்) |
| முத்தெருக்கஞ்செவிவேர் | விளக்குமாத்துப்பத்தைவேர் |
| கருத்த காக்கணம் வேர் | (சீதப்புள்) |

இந்த மருந்துகளை அரைத்துச் சித்தாமணக்கெண்ணெயிலே போட்டுப் பதத்தில் வடித்து உள்ளுக்குத் துட்டளவு கொடுக்கவும். மேலுக்கும் பூசவும் பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும்

## பிள்ளைப் பிணிக்கும், காதில் சீழ் வருகிறதற்கும் எண்ணெய்

| | |
|---|---|
| பெருநரளைவேர் | செங்கதாரிவேர் |
| உத்தாமணிவேர் | பொன்முசுட்டை வேர் |
| கோழியவரைவேர் | நன்னாரிவேர் |
| கிரந்திநாயகம் | தூதுவேளைவேர் |

இவைகள் வகைக்கு 1 பலம்

| | |
|---|---|
| ஈரவெங்காயச்சாறு | ஒரு உழக்கு |
| சித்தரத்தை | பேரரத்தை |
| வசம்பு | உள்ளி |

இவைகளை மேற்படி சாறு விட்டரைத்து ஆமணக்கெண்ணெய் ஒரு படியுடன் கலந்து வெய்யிலிலே வைதது, மறுபடியும் ஈரவெங்காயச்சாறுவிட்டு, மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும்.

பிள்ளைகளுக்குத் துட்டளவு கொடுக்கவும். மாந்தம், கணைச்சூடு முதலான குழந்தைகள் வியாதிகள் அனைத்துந் தீரும். சிரங்களுக்குத் தடவவும். காதில் சீழ் வருவதற்கும் உள்ளுக்குக்கொடுத்து நஸ்யமிடவும்.

## ஸ்திரீகளின் குருவித்தோஷத்திற்கு

சூதகமாகும்போது கட்டியுமுட்டியுமாக ஆட்டுரத்தம் போலே தீட்டு வெளிப்படும்.

இதற்கு மருந்து:

குளிர்தாமரை வேர் நெல்லிக்காயளவு

| | |
|---|---|
| புன்னைப்பூ | அதிமதுரம் |
| ஏலக்காய் | திப்பிலி |
| கோஷ்டம் | |

இவைகளைச் சமனாக எடுத்துத் தண்ணீரிலரைத்து ஐந்து நாட்கள் முழுகின நாட்கள் முதல் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யவும். சிவபூஜை செய்யவும்.

## தந்த வாயுவிற்கு

மகிழம்பட்டை வெட்டிவந்து துவைத்துக் குடிநீர் வைத்து நாலு நாட்களுக்குக் கொப்பளிக்கவும்.

தந்தவாயு, முகஜன்னி, முகவாதம், இவையெல்லாம் தீரும்

## இதுவுமது

| | |
|---|---|
| 1. சுக்கு | மிளகு |
| பூண்டு (உள்ளி) | கஞ்சாப்பொடி |
| ஆவாரம்பட்டை | |

இவைகளை அனலில் வெதுப்பி, அரைத்து மோரில் கொதிக்க வைத்து

| | |
|---|---|
| ஈரவெங்காயச்சாறு | உழக்கு |
| முலைப்பால் | உழக்கு |
| எலுமிச்சம்பழச்சாறு | உழக்கு |

இவை சரிகூட்டி 3 நாள் ஆறுநேரம் கொடுக்கவும். உளைச்சலுக்கு உச்சந்தலையிலிடவும். சட்டி காயவைத்து சற்று சூடாக்கி ஒத்தடமிடவும்.

| | |
|---|---|
| 2. முருங்கைவேர் | வேளைவேர் |
| வசம்பு | உள்ளியும் |

ஒரு பல்லியும் அடித்துப்போட்டு நல்லெண்ணய் வார்த்து எரித்துத் திரியில் தோய்த்து, அணைத்துவிட்டுத் திரியிலிருந்து எழும்பும் புகையை முகரவும்.

## மரணகெண்டிகை விபரம்

ஒவ்வொரு நக்ஷத்திரத்திலும் ஆரம்பமான ஜ்வரம் மருந்துகள் கொடுக்காவிட்டாலும் கீழ்க்கண்ட நாட்களில் குணமாகும். அல்லது நோயாளியைக் கொல்லும். இது பொதுவான

விதியாகும். ஆகவே மருந்துகளும் கொடுக்கப்படவேண்டியது அவசியமாகும்.

அசுவனியில் பற்றிய சுரம் எட்டாம்நாள் விடும்.

பரணியில் பற்றின சுரமும் எட்டாவது நாள் விடும்.

நவச்சுரம் 9ம் நாள் விடும்.

கார்த்திகையில் பற்றிய சுரம் எட்டாம் நாள் விடாது இருந்தால் பத்தாம் நாள் விடும்.

ரோகிணியில் பற்றிய சுரம் எட்டாம் நாள் விடாதிருந்தால் பன்னிரண்டாம் நாள் விடும்.

மிருகசீரிஷத்தில் பிடித்த சுரம் பத்தாவது நாள் விடும்.

திருவாதிரையில் பிடித்த சுரம் ஐந்தாவது நாள் வேதனை செய்யும். இருபதாவது நாள் தீரும்.

புனர்பூசத்தில் ஏற்பட்ட ஜ்வரம் இரண்டாவது நாள் குணமாகும். இரண்டாவது நாள் தீராவிட்டால் எட்டாம் நாள் தீரும்.

பூசத்தில் பத்தின ஜ்வரம் ஐந்தாம் நாள் விடும்.

ஆயில்யத்தில் பத்தின ஜ்வரம் கொல்லும்

மகத்தில் பத்தின ஜ்வரம் பன்னிரண்டாம் நாள் தீரும்.

பூரத்தில் பத்தின ஜ்வரம் பதினைந்தாம் நாள் விடும்.

உத்திரத்தில் பத்தின ஜ்வரம் பதினேழாம் நாள் கொல்லும். கொல்லாதிருந்தால் முப்பதாம் நாள் விடும்.

அத்தத்தில் பத்தின ஜ்வரம் ஏழாம் நாள் விடும். விடாதிருந்தால் ஒன்பதாம் நாள் விடும்.

சித்திரையில் பத்தின ஜ்வரம் மூன்றாம் நாள் விடும்.

சோதியில் பற்றிய ஜ்வரம் பத்தாம் நாள் விடும். விடாதிருந்தால் கொல்லும்.

விசாகத்தில் பற்றிய ஜ்வரம் ஏழாம் நாளும் இருபத்தேழாம் நாளும் விடும். விடாதிருந்தால் கொல்லும்.

அனுஷத்தில் பற்றிய ஜ்வரம் பன்னிரண்டாம் நாள் விடும்.

கேட்டையில் பற்றிய ஜ்வரம் ஐந்தாம் நாள் விடும். விடாதிருந்தால் இருபத்தேழாம் நாள் கொல்லும்.

மூலத்தில் பற்றிய ஜ்வரம் ஒன்பதாம் நாளும் பதிமூன்றாம் நாளும் விடும்.

பூராடத்தில் பத்தின ஜ்வரம் பன்னிரண்டாம் நாள் விக்கலெடுத்துக் கொல்லும்.

திருவோணத்தில் பத்தின ஜ்வரம் முப்பதாம் நாள் விடும்.

அவிட்டத்தில் பற்றின்ஜ்வரம் முப்பத்தெட்டாம் நாள் விடும். விடாதிருந்தால் கொல்லும்.

சதையத்தில் பற்றின ஜ்வரம் கொல்லும்.

பூரட்டாதியில் பத்தின ஜ்வரம் எட்டாம் நாள் விடும். விடாதிருந்தால் ஒன்பதாம் நாள் கொல்லும்.

உத்திரட்டாதியில் பற்றிய ஜ்வரம் எட்டாம் நாள் விடும்.

ரேவதியில் பத்தின ஜ்வரம் எட்டாம் நாள் விடாதிருந்தால் கொல்லும்.

***சுரத்திற்கு மரண கண்டிகை முற்றும்.***

## புண்ணிற்குப் பொடி

| | |
|---|---|
| கெந்தகம் | விராகனெடை 1 |
| காவிக்கல் | விராகனெடை 1 |
| களிப்பாக்கு | விராகனெடை 1 |

இம்மூன்றையும் பொடிபண்ணிப் புண்ணில் போட உதிரும்.

## புரைவிழுந்த புண்ணிற்கு

| | |
|---|---|
| மெழுகு | பலம் 2 |

உழக்கு நல்லெண்ணெய் விட்டுக்காய்ச்சி, மெழுகு பதத்தில் வருகிறபோது இதற்கு மேல் மருந்து

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | துரிசு |
| காசுக்கட்டி | களிப்பாக்கு |
| வேப்பம்வேர் | உள்ளிப்பூண்டு |
| குங்கிலியம் | மயில் இறகுச்சாம்பல் |

வகை ஒன்றுக்கு விராகன் ஒன்று

| | |
|---|---|
| கெந்தகம் | விராகன் 2 |

இதுவெல்லாம் நுணுக்கி முந்தின மருந்தில் போட்டுக்கிண்டி குபீரென்று தண்ணீர் ஊத்திப்போட்டு, மறுநீர்விட்டுக் கடைந்து மெழுகை வழித்துச் சிமிழில் பத்திரப்படுத்திப் புரையோடிய புண்ணில் போடவும்.

## வீக்கத்திற்கு மருந்து

| | |
|---|---|
| பெருங்காயம் | ஒரு பாக்களவு |
| உள்ளி | மிளகு |
| அவுரிவேர் | கிலுகிலுப்பைவேர் |

இந்த மருந்தெல்லாம் (1 விராகனெடை) வீதமெடுத்து அரைத்துப் பசுவின் நெய்யில் போட்டுப் பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து வீக்கத்திலும் பூசவும்.

## வயிற்றுக் கடுப்பிற்கு

| | |
|---|---|
| அதிவிடயம் | 1 கழஞ்சு |
| காசுக்கட்டி | 1 விராகன் |
| பெருமரப்பட்டை | விளாம்பிசின் |
| கஞ்சாப்பொடி | அபின் |

இவை 1 பணவெடை சுத்தி பண்ணி, எருமைத்தயிரில் கொடுக்கவும்.

## பித்தகாசத்திற்கு

மூன்று வருஷத்துப் பழையபுளி பலம் 1 எலுமிச்சம்பழச்சாறு விட்டு 3 நாட்கள் அரைக்கவும்.

| | |
|---|---|
| சாதிக்காய் | விராகனெடை 5 |
| சாதிப்பத்திரி | விராகனெடை 2 |
| குரோசானி ஓமம் | விராகனெடை 3 |
| கோரோசனை | விராகனெடை 1 |
| அதிவிடயம் | விராகனெடை 1 |
| சித்தரத்தை | விராகனெடை 3 |

இவைகளைப் பொடித்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு 1 நாள் அரைக்கவும். கழற்சிக்காய்ச்சாறு விட்டு 1 நாள் அரைக்கவும். இம்புறல் சாறுவிட்டு 1நாள் அரைக்கவும். ஓரிதழ்த்தாமரைச்சாறு விட்டு 1 நாள் அரைக்கவும். வாழைத்தண்டுச்சாறுவிட்டு 1 நாள் அரைக்கவும். இவையெல்லாவற்றையும் கூட்டியரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு,

பித்தகாசம், ரத்தகாசம், பீனிசகாசம், இவைகளுக்கெல்லாம் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ 14 நாட்கள் அந்திசந்தி உட்கொள்ளவும்.

**பத்தியம்**: மாம்சம் நீக்கவும். பசுவின் நெய் கூட்டவும். உப்பைப் பனை மட்டைச் சாறு, மிளகரணைச்சாறு இவைகளில் வறுத்துப் ப த்தியம் கூட்டவும். அகத்திக் கீரையையும் நீக்கவும்.

## அஸ்திகாங்கைக்கு "ஆடு தீண்டாப்பாளை எண்ணெய்"

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | 4 சேர் |
| புலிதுடக்கி (ஆடுதீண்டாப்பாளை (வேர்) | 15 விராகன் |
| எள்ளு | 1 உழக்கு |
| வெந்தயம் | 1 பலம் |
| கடுக்காய்த்தோல் | ½ பலம் |
| தான்றிக்காய்த்தோல் | ½ பலம் |
| கடுகுரோகிணி | 7 விராகனெடை |

**பத்தியம்** : மேற்படி கடைச்சரக்குககளை இடித்து வஸ்திரகாயஞ் செய்து ஆமணக்கெண்ணெயுடன் கலந்து, காய்ச்சி பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு, துட்டெடை 9 நாட்கள் கொடுக்கவும். காங்கை (உடல் சூடு) நீங்கும்.

## அஸ்தி காங்கைக்குக் "கோதுமை வடகம்"

| | |
|---|---|
| கோதுமை மாவு | உழக்கு |
| உளுந்தமாவு | உழக்கு |

| | |
|---|---|
| பனைவெல்லம் | பலம் 1 |
| தேங்காய்த் திருவல் | படி 1/2 |

இவைகளை யொரு கல்லுரலிலிட்டு நல்லெண்ணெய் ஒரு உழக்கு விட்டு இடித்துப் பதினாலு உருண்டைகளாக்கி 7 நாட்கள் தினம் இருவேளை உட்கொண்டு வர, அஸ்தி காங்கை தீரும்.

## காயத்திற்கு சாதிலிங்க வெண்ணெய்

| | |
|---|---|
| ஆவாரையிலை | கொல்லங்கோவைக்கிழங்கு |
| கோபுரந்தாங்கிச் சமூலம் | நிலவேம்புச் சமூலம் |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு புதுப்பானையில் தண்ணீர் கொண்டுவந்து, இடித்த மருந்துகளைத் தண்ணீரில் போட்டுவைக்கவும்.

**இதற்கு மேல் மருந்து**: விழுதுயிலையுடன், சாதிலிங்கத்தை அரைத்து முன்சொன்ன தண்ணீரில் கலந்து ஒரு இரவு வைத்து, மறுநாள் மத்தினால் சிலுப்ப (கடைய) வெண்ணெயாம். இதைக் குளிர்ந்த தண்ணீரில் போட்டு வைத்துக்கொண்டு, காயத்தில் தடவிக் கட்டவும். விரணங்கள் ஆறிப்போம்.

**குறிப்பு**: பச்சிலை மருந்து ஒரு பிடியும், லிங்கம் ஒரு பலமும் எடுத்துக்கொள்ளவும்.

## சொறி சிரங்கிற்கு தேங்காய் மருந்து

முத்தின தேங்காயின் கண்களைத் திறந்த இளநீரை ஊற்றிவிட்டுக் கல்லுப்பை நிமிரக்கொட்டி (முழுவதும் நிரப்பி) ஒரு ஆப்பினால் கண்களை அடைத்து, 7 நாட்கள் புதைத்து வைத்து, எடுத்து உடைத்துக் கீறிப் பணியில் வைத்து எடுத்துக்கொண்டு வெல்லத்தை முன்னே வாயில் போட்டுக் கொண்டு பிறகு ஒரு

கீற்றைத் தின்னவும். இவ்வாறு 3 நாட்கள் உட்கொள்ளவும். சொறி சிரங்கு புண்கள் ஆறும்.

## பவுத்திரத்திற்கு உள்ளுக்குச் சாப்பிட எண்ணெய்

| | |
|---|---|
| சாரணை வேர் | முடக்கொத்தான் வேர் |
| குளப்பாலைக் கொடி | கொடிமல்லிகை வேர் |
| வக்கணத்தி வேர் | முல்லைவேர் |
| சிறுகாஞ்சோரிவேர் | பெருகாஞ்சோறி வேர் |
| செப்பு நெருஞ்சிவேர் | சிறுசெருப்படி வேர் |
| பேராமுட்டிவேர் | சிற்றாமணக்கம் வேர் |
| காட்டுமொச்சை வேர் | |

இவைகள் வகைக்குப் பலம் ½

கடுகுரோகிணி வளையலுப்பு

வகைக்குப் பலம் ஒன்று

மிருதார் சிங்கி கல்மதம்

இவை பலம் 5

| | |
|---|---|
| வேப்பம்பிசின் | பலம் 9 |
| திப்பிலி | பலம் 5 |
| பூண்டு | பலம் 1 |
| கற்கடகசிங்கி (கடுக்காய்ப்பூ) | வராகன் 4 |
| கடுக்காய்த்தோல் | பலம் 1 |
| தான்றிக்காய்த்தோல் | பலம் 1 |
| சாதிலிங்கம் | வராகன் 3 |
| ரசம் | பலம் 1 |
| சித்திரமூலம் | பலம் 1 |
| சுக்கு | பலம் ½ |

இவைகளையெல்லாவற்றையும் இடித்து இளநீர் விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெய் 20 சேருடன் குழப்பியடுப்பின்

மேலேற்றிப் பதத்தில் இறக்கி, பத்திரப்படுத்தவும். இதனையொரு முட்டைக் கரண்டியாலே நேரத்திற்கு 1 கரண்டி வீதம் உட்கொள்ளவும். 11 நாட்கள் உட்கோள்ளவும்.

**பத்தியம்**: கசப்புப் பண்டங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

மூலம், பவுத்திரம், ஆசனப் புண்கள் தீரும்.

## "வெள்வங்க" பற்பம் (மேகத்திற்கு)

வெள்வங்கத்தை வேண்டிய அளவு (ஒரு பலம்) கொண்டுவந்து உருக்கி 3 தரம் காடியில் சாய்த்துச் சுத்தி பண்ணி, ஈசலிறகு போல் தட்டிக்கொள்ளவும். ஒரு கோணியை ஒரு முழ அளவிற்குச் சதுரமாகக் கிழித்துக் கீழே பரப்பி அதன்மேல் ஈயத் தகட்டைப் பரப்பி அதன் மேலே துத்தியிலை பரப்பித் திரிதிரித்து உருட்டி (அதாவது சுருட்டி நூலினால் கட்டி) ஒரு முழ நீளம், அகலம், உயரமும் உள்ளபடி காட்டெரு முட்டையையடுக்கி, அதன் நடுவில் அக்கோணிச் சுருளை வைத்துப் புடம் போடவும். புடம் ஆறியபின் புடத்தைப் பார்க்க வங்க பற்பம் கிடைக்கும்.

இதற்கு அநுபானம்: சர்க்கரையில் கொடுக்கவும். (பணவெடை 2) மேகமெல்லாந் தீரும்.

**குறிப்பு**:1. இது மதுரை குமரசாமிப் பண்டிதர் குமாரர் ஆறுமுகம் சொன்ன மருந்து
2. வெள்வங்கம் - வெள்ளீயம்
3. காட்டெருமுட்டை - தானாகவே உலர்ந்தசாணி
4. மேகம் - சர்மநோய்

## தாககுரம், சீதசுரம், விஷசுரத்திற்கு "சுரமுராரி"

மடல் துத்தம் வேண்டிய அளவு (ஒரு பலம்) கொண்டு வந்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு 21 நாட்கள் அரைத்துப் பின்பு, பசுவின் வெண்ணெய் விராகன் 4 அந்த மருந்தில் போட்டு நன்றாக நீர்சுவற அரைத்து இந்த மருந்தைச் சிமிழில் வைத்துக்கொண்டு வேளைக்கு நாலு குன்றிப் பிரமாணம் சர்க்கரையில் கொடுக்கவும். பின்பு வெந்நீர் ஒரு சிரங்கை (கையளவு) கொடுக்கவும்.

தாககுரம், சீதசுரம், விஷசுரம் முதலானவைகள் தீரும்

## புடரஸம்

சாதிலிங்கம் வேண்டிய அளவு (ஒரு பலம்) கொண்டுவந்து எலுமிச்சம்பழச்சாறு வார்த்து, ஒரு நாள் முழுவதும் அரைத்து, உலர்த்திச் சூரணம் பண்ணிச் சிமிழில் அடைத்து வைத்துக் கொண்டு வேளைக்கு குன்றிப் பிரமாணம் எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்கவும்.

சர்வ ஜ்வரங்களும் தீரும்.

## தாப ஜ்வரம், சீத ஜ்வரங்களுக்குத் " துத்த வெண்ணெய்"

துத்தம் (வெண்மையாக வறுத்தது) விராகனெடை 4, மிளகு விராகனெடை 2, கூட்டியரைத்துப் பசுவின் வெண்ணெயி விராகனெடை 6 கூடப்போட்டு நன்றாகக் கல்வத்திலிட்டரைத்துச் சிமிழில் அடைத்து 3 குன்றியளவு எலுமிச்சம்பழச்சாற்றிலேயே கொடுக்கவும்.

தாபச் சுரம், சீதச் சுரங்கள் தீரும்.

## எலும்புருக்கிக்குச் "சந்திரப்ரபா குளிகை"

| | |
|---|---|
| கெந்தகம் | விராகன் 2 |
| மனோசிலை | விராகன் 4 |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | இந்துப்பு |
| கொடிவேலிவேர் | |

இவைகள் வகைக்கு பலம் 2

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | பலம் |

இவைகளையெல்லாம் கூட்டி, உரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். பின்னர்,

**பத்தியம்** : நெய்யில் சுத்தி செய்த கெந்தகமும், இஞ்சிச்சாற்றில் சுத்தி செய்த மனோசிலையையும் தனித்தனியே பொடித்துக்கொண்டு, முன் சூரணத்துடன் கலந்து, கல்வத்திலிட்டுக் கரிப்பான் (கையாந்தகரைச்) சாறுவிட்டு ஒரு நாளரைத்த இலந்தைக் கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து காய வைத்துக் கொள்ளவும். தினம் ஒரு உருண்டை தேனில் கொள்ளவும்.

எலும்புருக்கி நோய் தீரும். (அதாவது சயரோகம்)

## பத்ரகாளி ரஸம்

| | |
|---|---|
| சுத்திசெய்த ரசம் | சுத்திசெய்த நாபி |
| சுத்திசெய்த கெந்தகம் | சுக்கு |
| சுத்திசெய்த திப்பிலி | மிளகு |
| பொரித்த வெங்காரம் | ஊமத்தை விதை |
| இந்துப்பு | |

இவைகள் வகைக்கு 1 விராகனெடை எடுத்துக்கொள்ளவும்.

முதலில் ஒரு கல்வத்தில் ரசத்தையும், கெந்தகத்தையும் போட்டு நன்றாக கருப்பாகும் வரை அரைத்துக் கஜ்ஜலி செய்து, மற்றச் சரக்குகளை நன்றாகக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணம் செய்து ஒரு குகையிலிட்டு மூடி பாங்காயெந்திரச் சட்டியில் மணல் போட்டு அ தன் நடுவில் மருந்துடன் கூடிய குகையை வைத்து 2 ஜாமங்கள் ( 6 மணி நேரம்) எரித்துப் பின்னர் ஆறவிட்டு எடுத்துக் கல்வத்தில் பொடித்து, மீன் பிச்சு வார்த்து 2 மணி நேரமரைத்து, உளுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணித் தக்க அனுபானங்களில் அதாவது (தேன் அல்லது நெய்) உட்கொள்ளவும். திரிதோஷ ஜ்வரம், ஜன்னி வாத சுரம் முதலானவை தீரும்.

## விச்வம்பர ரசம்

| | |
|---|---|
| சுத்தி செய்த ரசம் | சுத்திசெய்த அப்ரகம் |
| சுத்திசெய்த சாதிலிங்கம் | சுத்திசெய்த நாபி |
| சுத்திசெய்த அரிதாரம்(தாளகம்) | |

இவைகளைச் சமனெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடியாகவரைத்துச் சிறுபுள்ளடிக் கஷாயம் வார்த்து, 2 நாட்கள் அரைத்துச் செப்புச் சிமிழிலிட்டுச் சீலைமண் செய்து கோழிப்புடமாக 10 வரளியை (ஒரு சாண் நீள, அகல, உயரமுள்ளபடி அடுக்கிப்) புடம் போட்டெடுத்துச்

| | |
|---|---|
| சுவர்னம் (நாய்) | மீன் |
| பன்றி | ஆமை |

இவைகளின் பிச்சு அதாவது பித்தநீர் வாங்கிக்கல்வத்திலிட்டரைத்து, உளுந்துப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக்கொள்ளவும். தக்க (தேன் அல்லது நெய்) அனுபானங்களிலுட்கொள்ளவும்.

சன்னி பாதச் சுரம், தோஷசுரம் இவைகள் தீரும்.

வேண்டிய பத்தியம் கொள்ளவும். அதாவது இச்சா பத்தியமிருக்கவும்.

## ஜயவிக்ரம ரஸம்

சுத்திசெய்த நாபி　　சுத்திசெய்த மனோசிலை

சுத்திசெய்த அரிதாரம்　　சுத்திசெய்த கெந்தகம்

சுத்திசெய்த வெங்காரம்

இவைகளை சமன் எடுத்துத் தனித்தனியாக அரைத்து. ஒரு கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறுவிட்டு, 3 நாட்கள் அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றிலேயே டோலா யந்திரமாகக் கட்டி எரித்து, மறுபடியும் மீன் பிச்சிலரைத்துக் கொண்டு, குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும். தேனில் தினம் 2 வேளை கொடுக்க 13 வகைச் சந்நிகளும் தீரும்.

## இச்சாபேதி ரசம்

| | |
|---|---|
| சுத்திசெய்த ரசம் | விராகன் 1 |
| சுத்திசெய்த கெந்தகம் | விராகன் 1 |
| சுக்கு | விராகன் 1 |
| திப்பிலி | விராகன் 4 |
| மிளகு | விராகன் 5 |
| பொரித்த வெங்காரம் | விராகன் 6 |
| கோரைக்கிழங்கு | விராகன் 7 |
| கடுக்காய்த்தோல் | விராகன் 8 |
| சுத்திசெய்த நேர்வாளம் | விராகன் 9 |

முதலில் இரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு, நன்றாகவரைத்துக் கஜ்ஜலி செய்துகொண்டு, பின்னர் சூரணித்த மற்ற சரக்குகளுடன் சரியளவு வெல்லம் சேர்த்து (2½ பலம்) கூட்டி

நன்றாகக் கல்லுரலிலிட்டிடித்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம், உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும். குளிர்ந்த ஜலத்தில் 1 உருண்டை கொடுக்கப் பேதியாகும்.

இதனால் குன்ம ஜ்வரம் (வயிற்று வலி, மலச்சிக்கலுடன் கூடிய ஜ்வரம்) தீரும்.

## சமரோசன குளிகை

| | |
|---|---|
| சுத்திசெய்த நேர்வாளம் | பலம் 1 |
| கடுகுரோகிணி | பலம் 1 |
| சுத்திசெய்த ரசம் | ஒரு கழஞ்சு |
| சுத்திசெய்த ‘கெந்தகம் | ஒரு கழஞ்சு |
| சுத்திசெய்த வெங்காரம் | ஒரு கழஞ்ம் |

முதலில் ரசத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலி செய்துகொண்டு, மற்ற சரக்குகளைச் சூரணித்துப் போட்டு, இளநீர் விட்டரைச்சு, அதில் குழப்பி அடுப்பின் மேலேற்றிச்சூடாக்கி, இறுகிய பதத்தில் எடுத்துக்கொண்டு, குன்றிப் பிரமாணம் உருண்டடை செய்து வைத்துக்கொள்ளவும்.

ஒரு உருண்டை வாழைப்பழத்திற்குள் வைத்து விழுங்கவும். வயிறு கழியும். அத்கமாகப் பேதியானால் அதற்கு மாத்து மோரும் சோறும் சாப்பிடவும்.

## சூசிகா வாயுவிற்கு

வில்வப் பழம் 1 பலம் எடுத்து, ஒரு சட்டியிலிட்டு இளம் பதமாக வறுத்து, 2 சேர் தண்ணீர் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சிப் பிழிந்துகொள்ளவும். அதனுடன் ஒரு கையகலச் சீலையைக் கருக்கி (அதாவது ஒரு சாண் நீள, அகலமுள்ள வெள்ளைத் துணியைச்) சுட்டசாம்பல், ஒரு பெரும் பாக்களவு எருமை வெண்ணெய் இவைகளைக்கூட்டி மேற்படி கஷாயத்தில்

கொடுக்கச் சூதிகா ஜ்வ ரம் கடுப்பு, தாகம் முதலானவை நிற்கும் · கைகண்டது. (பிரசவித்த ஸ்திரீகளுக்கு ஏற்படும் ஜ்வரம் சூதிகா ஜ்வரமாகும்.)

## இதுவுமது

மாவிலங்கப்பட்டை, , சாரணைவேர் சமன் (1 விராகனெடை) கூட்டி, இடித்து ஒரு சிரங்கைத் தண்ணீர் (கையளவு) விட்டு இடித்துச் சாறுபிழிந்து, சுடவைத்துத் திப்பிலிச் சூரணம் குத்தளவு போட்டு, உட்கொள்ளக் கொடுக்கவும். சூதிகா ரோகம் தீரும்.

## கண்டாமலக லேகியம்

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | படி 43 |
| சர்க்கரை | பலம் 50 |
| நெய் | படி 1¾ |

கூட்டிக் காய்ச்சிப் பாகு பதமாகச் செய்துகொள்ளவும்.

இதற்குக் கற்கம்

| | |
|---|---|
| வாய்விளங்கம் | கொடிவேலிவேர் |
| ஏலக்காய் | கிராம்பு |
| இலவங்கப்பத்திரி | சிறுநாகப்பூ |
| அதிமதுரம் | இந்துப்பு |
| சீரகம் | |

இவைகள் வகையொன்றுக்கு பலம் ½

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |

இவை வகைக்கு பலம் 1

| | |
|---|---|
| திப்பிலி | முந்திரிகைப்பழம் |
| சிவதைவேர் | |

வகைக்கு 4 பலம்

இவைகள் எல்லாவற்றையும் கல்லுரலிலிட்டு, இடித்துச் சூரணம் செய்து முன்காய்ச்சின பாகிலேபோட்டுக்கிளறிப் பதத்திலிறக்கி வேறொரு கலசத்தில் வைத்துப் பசுவின் நெய் 3 நாழி விட்டுக் குழப்பித் தினம் 2 விராகனெடை இருவேளை உட்கொள்ளப் பாண்டு, வாயு, சோகை, காமாலை, தலைநடுக்கம், (சிரக்கம்பம்) தலை மயக்கம், அம்லபித்தம் (வாய் நீரூரல்) மூலவியாதி, கிரந்தி, பீலிகை, ஆநாகம் (வயிற்றுப்பொருமல்) பயித்தியம் (பித்தாதிக்கம்) முதலான வியாதிகளெல்லாந் தீரும்.

## பிப்பல்யாதி ரஸாயணம்

| | |
|---|---|
| திப்பிலி | பலம் 16 |
| சர்க்கரை | பலம் 8 |
| வாயுவிடங்கம் | பலம் 4 |
| சுக்கு | பலம் 4 |
| சிறுதேக்கு | பலம் 4 |
| சீரகம் | பலம் 4 |
| மிளகு | பலம் 4 |
| சவ்வியம் (மிளகுக்கொடி) | பலம் 4 |
| திப்பிலிமூலம் (கண்டத்திப்பிலி) | பலம் 2 |
| கொடிவேலிவேர்ப்பட்டை | பலம் 2 |
| லோகச்செந்தூரம் (அயம்) | பலம் 2 |
| கரிப்பான் (கையாந்தகரைப்)பொடி | பலம் 2 |
| ஏலம் | பலம் 1 |
| கிராம்பு | பலம் 1 |
| இலவங்கப்பத்திரி | பலம் 1 |
| பெருங்காயம் | பலம் 1 |
| தக்கோலம் | பலம் ½ |
| சீந்திச்சர்க்கரை | பலம் 3 |

இவைகளை எல்லாம் இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு தேன் 16 பலம் வார்த்துப் பிசைந்து, கலசத்தில் வைத்துப் பதினாறு

நாட்கள், தான்யபுடமிட்டு (நெற்குவியலுக்குள் புதைத்துவைத்து) எடுத்து நெல்லிக்காய்ப் பிரமாணம் உட்கொள்ளச் சயம், அரோசகம், பாண்டு, மந்தாக்கினி, சுவாசம், இருமல் இவை தீரும்.

குறிப்பு: சீந்தில்கொடியின்மேல் புரணியைச் சீவிவிட்டு இடித்துத் தண்ணீரில் நன்றாகப் பிசைந்து, வெண்மையான மாவு போன்று அடியில்தங்கும் வண்டலே சீந்தில் சர்க்கரையாகும்.

## குண்டலாதி லேகியம்

| | | |
|---|---|---|
| சங்கம்வேர் | | பலம் 100 |
| கண்டங்கத்தரிவேர் | | பலம் 80 |
| வெள்ளிலோத்திரம் (முள்ளிலவு) | | பலம் 25 |
| வாகைப்பட்டை | குமிள் | |
| முன்னைவேர் | பாதிரிவேர் | |
| காட்டுமல்லிகைவேர் | சிறுவழுதலை (சிறுகத்திரி) | |
| செம்முள்ளி | கீழாநெல்லி | |

இந்த வேர் வகைகள் பலம் 10

இவைகள் எல்லாவற்றையும் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிக் கல்லுரலிலிட்டு இடித்து ஒரு வாயகன்ற பாத்திரத்திலிட்டு 12 மரக்கால் சுத்தஜலம் விட்டு, எட்டிலொன்றாகக் காய்ச்சி பழைய வெல்லம் 100 பலமெடுத்துக்கொண்டு, கஷாயத்தில் கரைத்து வடிக்கட்டிக்கொண்டு, தேன் பதமாகும்வரை மறுபடியும் காய்ச்சி,

இதற்குக்கற்கம்

| | |
|---|---|
| தேவதாரம் | இலவங்கம் |
| பெருங்காயம் | கற்கடகசிங்கி |
| சிறுதேக்கு | சுக்கு |
| மிளகு | ஏலம் |
| தக்கோலம் | திப்பிலி |
| கையாந்தகரை | லோகபற்பம் |

இவைகள் ஒரோன்றும் 1 பலவீதமெடுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு அந்தப்பாகிலிட்டு லேகியமாக்கி, ஆறவைத்துத் தேன் படி 1 வார்த்துக் குழப்பித் தினமும் 2 வேளை 3 விராகனெடை வீதம் உட்கொள்ளக்

| | |
|---|---|
| காசசுவாசம் | சயரோகம் |
| சூலை (வலி) | மூத்திரக்ருச்ரம் |
| மூத்திரப்பாளம் (வெட்டை) | குரோதவாதம் (வாயுத் |
| அக்கினிமந்தம் | பீலிகை (கட்டி) (தம்பம் |
| ஹ்ருத்ரோகம்(இதயநோய்) | விக்கல் |
| மூலரோகம் | வாயுப்பொருள் |
| பாண்டுரோகம் | சோகை |
| உதிரவாதம் (இரத்தப்போக்கு) | அட்டபீலிகை |
| நேத்திரவாயு | |

முதலான சகல வியாதிகளும் தீரும்.

## மலட்டு ரோகத்திற்கு மருந்து

முத்தின தேங்காயின் கண்களைத் திறந்து, அதற்குள்ளே சுத்திசெய்த அரப்பொடியை பாதிவரை நிரப்பிக் குப்பைமேனிச் சாற்றையும் அதற்குள்விட்டுப் பூமிக்குள் 5 நாட்கள் புதைத்து வைக்கவும். பின்னர் இத்தேங்காயை எடுத்து உடைத்து கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு கழற்சிக்காய்ப் பிரமாணம் இளவெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். பூச்சி, உதிரக்கட்டு, மலட்டுரோகம் இவைகள் தீரும்.

**பத்தியம்**: பச்சையரிசிக் கஞ்சியைகாய்ச்சிப் பாலுடன் கொடுக்கவும்.

## வங்கபற்பம்

வெள்ளீயம் வேண்டிய அளவு (1 பலம்) கொண்டுவந்து, ஒரு சட்டியில் போட்டு உருக்கப் பசுவின் மோரில் ஏழு தடவை காய்ச்சவும். சுத்தியாகும். பின்னர் அதனைத் திரும்பச் சட்டிதனிலிட்டு அடுப்பின் மேலேற்றி உருக்கி அமுக்கிராவேர் கொண்டுவந்து, காசுபோலே நறுக்கி அதனுடன் போட்டு, இரும்புக்கரண்டி கொண்டு 3 நாட்கள் இடைவிடாமல் அடுப்பின் மேலேற்றி மத்திக்க (வறுக்க)ப் பற்பமாகும். வாயில் போட்டால் வழுவழுப்பில்லாமல், இருக்கும் மட்டும் வறுக்கவும். இதில் ஒரு பணவெடை (3 குன்றி) வெண்ணெயிலோ, தேனிலோ உட்கொள்ள,

| | |
|---|---|
| நீர்ச்சுருக்கு | நீர்க்கடுப்பு |
| இருபது பிரமியம் | உள்வெட்கை |
| உடம்பு வத்துதல் | |

முதலான ரோகங்கள் தீரும். தாது விருத்தியுண்டாகும்.

## காரீயச் செந்தூரம்

காரீயம் வேண்டிய அளவு ( 1பலம்) கொண்டுவந்து ஒரு சட்டியிலிட்டு உருக்கி, மோரிலே 3 தடவையும் , அதேபோல் நொச்சியிலைச் சாற்றிலே 3 தடவையும் சாய்க்கவும். சுத்தியாகும். பின்னர் அதனை ஒரு சட்டியிலிட்டு உருக்கின முகத்திலே ஒரு பலத்திற்கு 1 கழஞ்சாக (1¼ விராகன்) அபின் சேர்த்துப் பச்சை முருங்கைத் தடிகொண்டு மத்தித்து (நன்றாக வறுத்துப்) பிறகு ஆவாரை வேர்ப்பட்டையும், வட்டத்துத்தி வேர்ப்பட்டையும் இடித்துத் தூளாக்கிச் சிறுகச் சிறுகப்போட்டு, இருப்புக்கரண்டி கொண்டும் முருக்கந்தடிகொண்டும் இப்படி 3 நாட்கள் மத்திக்கவும். செந்தூரமாகும்.

இதில் ஒரு பணவெடை செந்தூரம் பசுவின் வெண்ணெயிலே உட்கொள்ல நீரடைப்புத் தீரும். அதிமாங்கிஷத்தைக் கரைக்கும். (சதையடைப்பு) நீரிழிவிற்குச் செந்தூரத்திலே 1 பணவெடையும், கருங்குங்கிலியத்திலே ஒரு கழஞ்சு, அபின்மருந்து 2 பணவெடையும் கூட்டிப் பொடிசெய்து, எருமைத்தயிரிலே 20 நாட்கள் கொடுக்கத் தீரும்.

## தாதுபுஷ்டியுண்டாக மேல்பூச்சு

சங்கம் பழச்சாறு　　　　பிரண்டைச்சாறு
புளிநாரளைக்கொடிச் சாறு

இது மூன்றையும் கூட்டிக் கரண்டியில் வார்த்துப் பசுவின் நெய்விளக்கில் கரண்டியைப்பிடித்து வெச்சென வைத்து (அதிலிட்டுக்) காய்ச்சி புனுகும், பச்சைக் கற்பூரமும் சாரித்துத்தண்டில் பூசிப் புணரவும்.

## இரண சுக்ரனுக்குக்காக்கண மாத்திரை

வெள்ளைக் காக்கணம் வேர்　　சுக்கு சிறு துண்டு
மஞ்சள்

இது மூன்றையும் ஒரு பாத்திரத்திலிட்டுப் பசுவின்பால் வார்த்து அவித்துப் (வேகவைத்து)

படிகம் (படிக்காரம்)　　　　துத்தம்
துரிசு

இவைகளையும் போட்டுக் கோழியின் இரத்தம்விட்டு அரைத்து, உருண்டைபண்ணி (1 வருடஞ் சென்றபின்) எலுமிச்சம்பழச்சாறு, ஈரவெங்காயச்சாறு இவைகளில் உரைத்துக் கண்களிலிடவும்.

**குறிப்பு:** எல்லா மருந்துகளும் சமனெடை யெடுத்துக் கொள்ளவும்.

### நேத்திர வாயுவிற்குக் "கரிசாலை எண்ணெய்"

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | படி ½ |
| கையாந்தகரைச்சசாறு | படி ½ |
| பால் | படி 2 |
| நெல்லிக்காய்ச்சாறு | படி 2 |
| அதிமதுரக்கல்கம் (பால்விட்டரைத்து) 1 பலம் | |

இவைகளையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து 3 நாட்கள் சூரியபுடம் வைத்து 1 நாள் உமிக்காந்தலில் வைத்து, நான்காம் நாள் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

3 நாட்கள் தலையில் சிறிதளவு தேய்த்துக்கொண்டு நாலாம் நாள் முழுகவும். இவ்வாறு 5 முறை தேய்த்து முழுகவும்.

இதனால் தீரும் வியாதிகள்:

| | |
|---|---|
| பித்தகாசம் (கண்நோய்) | படலம் |
| புகைச்சல் | ஒளிவாயு (பார்வையில் மின்மினி தோன்றுதல்) |

என்பன.

**பத்தியம்**: உரைப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

### நேத்திர ரோகங்களுக்கு "மிளகாய் தைலம்"

| | |
|---|---|
| நன்கு முற்றிய பச்சைமிளகாய் | 3 பலம் |
| கையாந்தகரைச்சாறு | ½ படி |

இந்த இரண்டையும் கூட்டி வெய்யிலிலே வைத்துச் சாறு வற்றியபின், பசுவின் பால் ½ படி விட்டு அதுவும் வற்றும் அளவு வெய்யிலிலே வைத்துக்காய்ந்து, உலர்ந்த பிறகு ஒரு படி நல்லெண்ணெய்விட்டு, அடுப்பின்மேல் வைத்து காய்ச்சவும்.

ாய்ந்தபிறகு 2 அல்லது 3 மிளகையிட அது வெடிக்கும் பதத்தில் இறக்கி மறு பாண்டத்தில் வடிக்கட்டிக் கொள்ளவும்.

தேய்த்து முழுகிவரக் கண்நோய் அகலும்.

## தலைமுழுக " அதிமதுர வெண்ணெய்"

அதிமதுரம் 2 பலம் இடித்திப் பொடிபண்ணி, 5 படி பசுவின் பாலில் போட்டு நன்றாகச் சுண்டும் வரைக்காய்ச்சி ஆறியபின் பிறைமோர் குத்தி வைக்கவும். மறுநாளெடுத்துச் சிலுப்பி (கடைந்து) அதிலிருந்து வெண்ணெய் எடுத்துத் தலையில் காலைநேரத்தில் தேய்த்துக்கொண்டு, சாயங்காலம் உசிலை இலை பொடியையாவது அல்லது பயற்ற மாவையாவது தேய்த்துக்கொண்டு முழுகவும்.

புளி நீக்கிப் பத்தியமிருக்கவும். இப்படி 4 நாட்களுக்கு ஒருமுறை முழுகவும். கண்ணோய்கள் அகலும், ஒருத்தலைவலிக்கும் நல்லது.

**குறிப்பு**: வெந்நீர் ஸ்நானம் நல்லது.

## கபால நோய்களுக்குத் "திரிப்புகை"

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மஞ்சள் | மரமஞ்சள் |
| சதகுப்பை | கஸ்தூரி மஞ்சள் |
| ஆலத்திக்கற்பூரம் (கட்டிச்சூடம்) | |

இவைகளைச் சமனெடுத்து, இடித்துக் கருநொச்சிச்சாறு விட்டுக் குழம்பாக்கி, ஒரு சிறு வெள்ளைத்துணியில் ஒரே சீராகத்தடவி உலர்த்தி, நான்கு விரற்கடை கொண்ட அளவாகக்கிழித்து திரித்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு திரி எடுத்து நெய்யில் தோய்த்துக் கொளுத்தி அணைத்து அதிலின்று எழும்பும் புகையை முகரவும்.

கபால வியாதிகள், மண்டைக்குத்தல், மூக்கு நீர்ப்பாய்ச்சல், ஒருத்தலைவலி முதலானவைகள் தீரும்.

### கண்ணெரிச்சலுக்கு " துத்த வெண்ணெய்"

ஆவின் பச்சைப் பால்தனிலே
(அமுதங்கடைந்து) நேயவாங்கி
மேவுந் துத்தம் துரிசியுடன்
விளங்கு மெலுமிச்சஞ் சாற்றால்
காவின் கலத்தின் புறந்தேய்த்துக்
கண்டச் சிமிழிதனி லடைத்துக்
கூவுங் குயிலின் மொழியாளே!
கன்னி யெழுதக் குணமாமே.

(இ-பொ) பசுவின் பாலைப் பசசையாகக் (உறைக்குற்றாமல்) கடைந்து, வெண்ணெய் எடுத்து ஒருகல்வத்தில் இட்டுத்துத்தம், துரிசு, இவைகள் தனித்தனியே விராகன் கூட்டியரைத்து, மறுமுறையும் எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு வெங்கலக் கல்வத்தின் புறத்திலிட்டு நேக ஒரு நாள் அரைத்து, மரச்சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். ஒரு மாதம் சென்றபின் இக்களிம்பில் ஒரு சிறு ப.யறுஅளவெடுத்துக் கண்களிலிடவும். கண்ணீர்ப்பாய்ச்சல், கண் எரிச்சல் முதலான நோய்கள் தீரும்.

### கண்ணோய்க்குக் களிம்பு

வறுத்த துரிசு துத்தம்
மனோசிலை

இவைகளைப் பொடி செய்து, ஒரு வெங்கலப்பாத்திரத்தில் புறத்தில் போட்டு, எலுமிச்சம்பழச்சாறு, கரிசலாங்கண்ணிச் சாறு, மருளங்கிழங்குச்சாறு இவை மூன்றும் வெவ்வேறே விட்டுக் காசிச் சொம்பு (செப்புச் சொம்பைக்) கொண்டு ஒரு ஜாமம் (3 மணி நேரம்)

அரைத்துச் சிமிழிலடைத்துக் கொண்டு கண்ணிலெழுந்த வியாதிகளுக்கெல்லாம் எள்ளளவு போடவும்.

## கண்ணோய்களுக்குக் "கதகாதிக் குளிகை"

| | |
|---|---|
| தேத்தாங்கொட்டை (தோல் | இந்துப்பு |
| துத்தம் சீவியது) | சீனாக்காரம் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | பீதரோகிணி |
| பொன் (ராவியதூள்) | செம்பு ராவியபொடி |
| அரப்பொடி | பாதரஸம் |
| எருக்கம்பூ | சிறுநெருஞ்சில்வேர் |
| கடுக்காய்த்தோல் | நெல்லிமுள்ளி |
| தான்றித்தோல் | அதிமதுரம் |
| பவழம் | முத்து |
| வெள்ளிராவியதூள் | |

இவைகளைச் சமனெடுத்து (வகைக்கு 1 விராகன்) இடித்து வஸ்திரகாயஞ்செய்துக் கல்வத்திலிட்டுப் புங்கம்பால் விட்டு 12 ஜாமங்களரைத்து, நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொண்டு, நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். ஒரு வருடஞ் சென்றபின் இம்மருந்தைத் தக்க அனுபானத்தில் கண்ணிலெழுந்த வியாதிக்கெல்லாம் உரைத்துப்போடவும்.

**குறிப்பு**: முலைப்பால், நந்தியாவட்டைப்பூச்சாறு, சுத்தஜலம் இவைகளில் உரைத்துப்போடவும்.

## கண்ணோய்களுக்கு மருந்து

வாழை மரத்துப் பிசின் எடுத்து வந்து பசுவின் பாலிலரைத்துக் கண்களில் போடவும்.

**குறிப்பு**: வாழைமரத்தைச் சிறிதளவு கீறினால் அதிலிருந்து தண்ணீர் வடிந்து கெட்டியாகும்

## கண்ணோய்க்குச் "சாறணை உருண்டை"

| | |
|---|---|
| சாரணைவேர் | நிலக்காக்கரட்டான்வேர் |
| சங்குத்தூள் | துவரம்பருப்பு |
| கிட்டம் | |

இவைகளெல்லாம் 1 கழஞ்சு வீதம் எடுத்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு, இஞ்சிச்சாறு விட்டரைத்து,உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

கண்ணோய்களுக்கு முலைப்பாலிலிழைத்து சிறு பயற்றம்பருப்பளவு போடவும். கண்சிவப்பு, சன்னிகள், பார்வைக் குறைவு முதலான நோய்கள் தீரும்.

## நயன சஞ்சீவிக் குழம்பு

தேத்தான் கொட்டை மிகச்சீவிச்
சிறந்த யிளநீர்தனிற் கிடத்தி
ஏத்த மூன்று நாளூறி
எடுத்தே தேன்வார்த் தரைத்திடவே
தோ(த்)தாய் நீண்ட கண்ணிலிடத்
துலங்கும் நயனக் கலக்கமறும்
நன்றாய் வெளிவருஞ் சிவப்பறுக்கும்
நயன சஞ்சீவிக் குழம்பிதுவே.

(இ-ள்) நன்றாக முற்றிய தேத்தாங்கொட்டையை எடுத்துப் பாக்குவெட்டிகொண்டு, சீவிக்கொண்டு இளநீரில் 3 நாட்கள் ஊறப்போடவும். பின்னர் அலம்பி சுத்த தேன்விட்டுக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொள்ளவும். கண்சிவப்பு நீங்கிக் கண்கள் வெளுக்கும்.

### கண்புகைச்சலுக்கு "நஸ்யம்"

கொஞ்சிக் கொழுந்துங் கார்வசம்பு ள்ளியும்
அஞ்சும் முலைப்பாலி லாக்கியே - கஞ்சணியு
மாதே நஸ்யமிட வாங்கும் புகைச்சலெல்லாம்
தானே வெளியாகுந் தான்.

கொஞ்சிக்கொழுந்து வசம்பு
பூண்டு

இம்மூன்று மருந்துகளையும் நசுக்கு முலைப்பால் விட்டரைத்துப் பிழிந்து கொண்டு, மூக்கில் நஸ்யமிடவும். கண் புகைச்சல் தீரும்.

### நேத்ரரோகங்களுக்குக் கண்டுஷம்

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| ஜாதிக்காய் | கிராம்பு |
| அக்கிராக்காரம் | |

இவைகள் வகைக்கு 2 வராகனெடை

இந்துப்பு வராகனெடை 5

இவைகளை இடித்து, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கொள்ளவும். பின்னர் சுண்டைக்காயளவுள்ள உருண்டைகளாக்கிப் பத்திரப்படுத்தவும். வேண்டும்போது தினம் ஒரு மாத்திரையை வெந்நீரில் கரைத்து வாய்க் கொப்பளிக்கவும். நேத்திர ரோகங்கள் தீரும்.

### நேத்ர ரோகங்களுக்குப் "புறவளையம்"

சீனாக்காரம் காசுக்கட்டி

இவ்விரண்டையும் சரி எடையெடுத்து நுணுக்கிக் கல்வத்திலிட்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கொதிக்க வைத்துக்

கண்களைச் சுற்றி வளையமாகப் பற்றுப்போடவும். கண்சிவப்பு, கண்ணெரிச்சல் உடனே நிற்கும்.

## கண்ணிலெழுந்த வியாதிகளுக்கு "ஏலாதி மாத்திரை"

| | |
|---|---|
| ஏலம் | மிளகு |
| பளிங்குக்கல் | இலாமிச்சம்வேர் |
| சங்கு பற்பம் | பொன்முசுட்டை |
| சந்தனத்தூள் | மஞ்சள் |
| கோழிமுட்டையோடு | மடல்துத்தம் |
| கடல்நுரை | இந்துப்பு |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |
| பச்சைக்கர்ப்பூரம் | காட்டுக்கரணைக்கிழங்கு |
| மெழுகு | தேத்தாங்கொட்டை |

இம்மருந்துகள் வகைக்கு ஒரு கழஞ்சு வீதமெடுத்து, இடித்துக் கல்வத்திலிட்டுப் பசுவின் பால், கையாந்தகரைச்சாறு, சாரணைச்சாறு, வேப்பிலைச்சாறு இவைகளில் தனித்தனியே ஒரு நாள் வீதமரைத்து, நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொண்டு, நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும். முலைப்பாலிலோ, தண்ணீரிலோ அல்லது தேனிலோ வியாதிக்குத்தக்கபடி மாத்திரையை இழைத்துச் சிறு பயறளவு கண்களிலிடவும். கண்ணோய்கள் தீரும்.

**குறிப்பு**: மாத்திரை திரட்டுமுன்னர் பச்சைக்கர்ப்பூரத்தைச் சேர்த்தரைக்கவும்.

## தலைநோய், கண்ணோய்தீர "இரஸாதிப்புகை

| | |
|---|---|
| பாதரஸம் | மயில்துத்தம் |
| பால்துத்தம் | சாதிலிங்கம் |
| கெந்தகம் | வெள்ளைப்பாஷாணம் |

இவை ஓரொன்று மஞ்சாடி (2 குன்றி) நிறை

முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜலியாகச் செய்து, பின் மற்ற சரக்குகளைப் போட்டரைத்து, ஒரு சீலையில் ஒரே சீராகப் ப ரப்பித் திரியாகத் திரித்து வைத்துக்கொண்டு, நெருப்பில் கொளுத்தி அணைக்கப் புகை கிளம்பும். இதனை மூக்கிலுரிஞ்சத் தீராத தலைநோய், கண்ணோய்கள் தீரும். கைகண்டது. கைப்பு, உப்பு, புளிப்புத் தவிர்க்கவும். 3½ நாட்கள் புகை பிடிக்கவும்.

## நேத்ரரோகத்திற்குக் "கண்டுஷம்"

மறுக்காரைக்காய் இளங்காய் 30 கொண்டுவந்து, மேல் தோல் உரித்துச் சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| திப்பிலி | விராகன் 3 |
| மனோசிலை | விராகன் ½ |
| வெங்கலப்பொடி | விராகன் 3 |
| சீனாக்காரம் | விராகன் 1 |
| குதிரைப்பல் | விராகன் 1 |
| திராப்பொடி | விராகன் 3 |
| ஓமம் | விராகன் ½ |
| இந்துப்பு | விராகன் ½ |
| கழுதையெலும்பு | விராகன் 1 |
| புங்கம் விரை | விராகன் 1 |

இவைகளை நன்றாகக் கல்வத்தில் நுணுக்கி முன்சொன்ன மறுக்காரைச்சாறுவிட்டு, நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு, சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

நேத்திர ரோகங்கள் தீரத் தினம் ஒரு மாத்திரை எடுத்து, வெந்நீரில்கரைத்து வாய்க்கொப்பளிக்கவும்.

## கண்வியாதி தொண்ணூற்றாறுக்கும் "சங்காதி மாத்திரை"

| | |
|---|---|
| சங்கு | விராகன் 5 |
| பீங்கான் | விராகன் 5 |
| துருசு | விராகன் 3 |
| திப்பிலி | விராகன் 3 |
| கடல்நுரை | விராகன் 5 |
| வெள்ளைக்கல்லு | விராகன் 5 |
| முதலைப்பல் | விராகன் 3 |
| ஓமம் | விராகன் 2 |

இவைகளைத் தூள் செய்து, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு 4 ஜாமங்கள் ( ½ நாள்) அரைத்து நீண்ட மாத்திரைகளாகத்திரட்டி வைத்துக்கொண்டு, நிழலில உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை 1 வருடஞ் சென்றபின் முலைப்பாலில் இழைத்துக் கண் வியாதிகள் 96க்கும் சிறு பயறளவு போடவும். திமிரம், படலம் முதலானவ தீரும்.

## கண்ணோய்களுக்குத் "துருசு பற்பம்"

| | |
|---|---|
| துருசு | விராகனெடை 3 |
| சிறுகீரைவேர் | விராகனெடை 1 |
| பொன்னாங்காணிவேர் | விராகனெடை 1 |

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நேகவரைத்து, ஒரு உருண்டையாக உருட்டி வெய்யிலில் காயவைத்து உள்ளீரம் போகும்வரை நன்றாக உலரவைக்கவும். பின்னர் இதனை ஒரு வெள்ளைத்துணியில் சாணியப்பிக் கவசம் செய்து உலர்த்தி, ஒரு சாண் நீளம், ஒரு சாண் அகலம் ஒரு சாண் உயரம் விராட்டியடுக்கி, அதன்மேல் ஒரு சின்ன அகலை வைத்து அதில் மருந்து உருண்டையை வைத்து மேலே மற்றொரு

அகல்கொண்டு மூடி, அதற்குமேல் மற்றும் ஒரு சாண் எருவடிக்கித் தீப்போடவும். வெந்து ஆறியபின் மருந்தை எடுத்துப்பொடித்து, வஸ்திரகாயஞ் செய்து சிமிழில் அடைத்துக்கொண்டு, கண்ணோய் சகலத்திற்கும் ஒரு அரிசி எடை கண்களிலிடவும்.

**குறிப்பு**: படலம், சுக்ரன், திமிரம் முதலான நோய்கள் தீரும்.

### கண்ணோய்களுக்குத் "துத்தாதி உருண்டை"

| | |
|---|---|
| துத்தம் | துருசு |
| ஆமையோடு | புங்கம்விரை |
| ஓரிலைத்தாமரைவேர் | |

இது ஐந்தும் சரிகூட்டிக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து (நாலு நாழிகை) நீண்ட மாத்திரைகளாகத்திரட்டி நிழலில் உலர்த்திக் காய்ந்தபின் முலைப்பாலில் இழைத்து 2 நேரமும் 10 நாட்கள் கண்களிலிடவும். முன்சொன்ன கண்ணோய்களெல்லாந் தீரும்.

### சந்தனாதி உருண்டை

| | |
|---|---|
| நல்ல சந்தனம் | பிச்சிமொட்டு |
| பொன்மெழுகு | காவிக்கல் |

ஆகச் சரிகூட்டித் தண்ணீர்விட்டு, 4 நாழிகை (சுமார் 2 மணி நேரம்) அரைத்து, உருண்டைசெய்து, முன்தலை மண்டையிலே உண்டாகின்ற வியாதிக்கெல்லாம் பச்சை உருண்டையுடன், இந்த உருண்டையையும் முலைப்பாலிலரைத்து 2 நேரமும் 7 நாட்கள் மேலே போடவும். கண்களிலுள்ள வியாதிகளுக்கு இந்த உருண்டையை, முலைப்பாலிலிழைத்துச் சிறு பயறளவு கண்களில் தீட்டவும்.

### கண்ணோய்களுக்குப் "பச்சை உருண்டை"

| | |
|---|---|
| துத்தம் | துரிசு |
| மிளகு | இந்துப்பு |

| | |
|---|---|
| கடல்நுரை | வெண்கலப்பொடி |
| சந்தனம் | கோஷ்டம் |
| மஞ்சள் | மண்டையோட்டுத்தூள் |
| கோழிமுட்டையோடு | கற்பூரம் |
| சீனாக்காரம் | தாமரைவளையம் |
| சுக்கு | நெல்லிப்பருப்பு |
| கடுக்காய்த்தோல் | |

இவை ஓரொன்று ஒரு நிறையாகக் கூட்டியிடித்துக் கல்வத்திலிட்டுக் கையாந்தகரைச் சாற்றிலரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். இம்மாத்திரையிலொன்றை எடுத்து, முலைப்பாலில் இழைத்துக் கண்களிலிடத் திமிரம், பாலகாசம், பிரிசல்கண், மாலைக்கண், மாறுகாசம், கண்ணில்பூ, கெற்பதோஷம், வெள்ளெழுத்து, இமைக்குந்தம், இரணசுக்கிரன் முதலான வியாதிகளுக்கு முலைப்பாலிலிடவும். இது கைகண்டது.

**காசம், படலம், "சங்காதி மாத்திரை"**

| | |
|---|---|
| ஓரிலைத்தாமரைவேர் | 3 கழஞ்சு |
| சங்கு | 2 கழஞ்சு |
| துருசு | 1 கழஞ்சு (1 வராகன்) |

இந்த மருந்துகளைச் சூரணித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு 4 நாழிகை அரைக்கவும். பின்னர் கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டரைத்து, நான்கு நாழிகைகள் அரைத்து, நீண்ட மாத்திரைகளாகச்செய்து, காயவைத்துக் கொள்ளவும். இதனை முலைப்பாலிலரைத்து, அந்தி, சந்தி இரு வேளைகளிலும் 5 நாட்கள் போடவும்.

காசம், படலம், பற்பரோகம், நீர்படலம், நீர்க்காசம் இழிகண் முதலான ரோகங்கள் தீரும்.

## கண் வாதரோகத்திற்கு கண்ணிலிடு மருந்து
## (சங்காதி மாத்திரை)

அதியதோர் மதுரஞ்சங்கம் அமர்மனோசிலையும் செங்கல்
நெறிகடல் நுரையிந்துப்பு நேகவரைத் துண்டைசெய்து
கொதியறத் தண்ணீர்தேய்த்துக் குலவிய கண்ணிலிட்டால்
தீதுகள் வாதரோகம் தீர்ந்திடுமுண்மையாமே.

(இ-ள்.) அதிமதுரம் — சுட்டசங்கு
பளிங்குக்கல் — சிவப்புக்கல்
கடல்நுரை — இந்துப்பு
மனோசிலை

இவைகளைச் சமனெடுத்து, இடித்துக் கல்வத்திலிட்டு (வெந்நீர் விட்டு) நன்றாகவரைத்து உருண்டை செய்துகொண்டு நிழலிலுலர்த்தவும். இந்த மாத்திரையை ஆறிய வெந்நீரிலிழைத்துப் பயறளவு கண்களிலிடக் கண் வாதரோகங்கள் தீரும்.

## கண் சிவப்பிற்குப் பூச்சு மருந்து

இரும்பது சிவக்கக்காய்ச்சி யுரம்படு கடுக்காய்சுக்கு
... ... உகந்துடன் காய்ச்சித் தோய்த்து
நரம்பிடு மெய்யில் பூசில்நேர்படும் நீரும்மாறும்
முற்படும் சிவப்புந்தீரும் உண்மையாய்க் கண்டுகொள்ளே.

(இ-ள்) கடுக்காய், சுக்கு இவைகள் இரண்டையும் சரியெடை எடுத்து இடித்து, 8 மடங்கு ஜலம் சேர்த்து, ஒரு பங்காகவற்றவைத்துப் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தோய்க்கவும். இக்கஷாயத்தை உடம்பிலெங்கும் பூசிக் குளிக்கவும்.

கண்ணீர் வடிதல், சிவப்பு முதலானவை தீரும்.

**குறிப்பு:** "நெல்லிவற்றல்" விடுபட்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

## தாதுபுஷ்டி மருந்து

வெள்ளடம்பு இலை ஒரு பிடி எடுத்துச் சித்தாமணக்கும் இலையில் பொதிந்து, உமிக்காந்தலில் வைத்து வதக்கிச் சாதத்துடன் சேர்த்துச் சாப்பிடவும். தாது புஷ்டியுண்டாகும்.

## நீர்க்கட்டு, கல்விழ மருந்து

கற்பூரசிலாஜித் கொண்டுவந்து எருமுட்டையில் புடம் போட்டு, இதற்கு நாலிலொரு பாகம் பொரித்த வெங்காரம் கூட்டி இரண்டையும் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும்.

நாணல் புல்லை 3 பிடி எடுத்துக் குறுக நறுக்கி, ஒருசட்டியிலிட்டு, 8 மடங்கு தண்ணீர் விட்டு நாலிலொன்றாக வற்றக்காய்ச்சி, இறுத்து மேற்படி பொடி ஒரு விராகனெடை போட்டுக் கலந்து கொடுக்கவும். நீர் தாராளமாக இறங்கும். சிறுநீரில் கற்கள் இருந்தாலும் அவைகள் விழுந்து நீர்க்கட்டு விட்டுப்போம்

## கல்லடைத்த பேருக்கு மருந்துகள்

1. காட்டுப்பசளைக்கிழங்கைப் பசுவின் பாலில் அரைத்துச் சுக்குப்பொடி கூட்டிக் கொடுக்கவும். கல்லு விழும்.

2. வெங்காரம் பொரித்து, இள வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

3. சுரை இலையையரைத்துப் பசுவின் பாலில் ஒரு விளாங்காய்ப் பிரமாணம் அரைத்துக் கொடுக்க நீர்க்கட்டு அகலும்.

## சமுத்திராப்பழக் கல்பம்

சமுத்திராப்பழம் (கொந்தளம்பழம்) முருங்கைப் பட்டைச்சாறு வார்த்து உள்ளுக்குக்கொடுக்க எந்தவிதமான குஷ்டமும் தீரும்.

2. ஆட்டு மூத்திரத்திலிழைத்துக் கண்களிலிடப் பூ மாறும்.

3. சர்க்கரையில் கூட்டிக்கொடுக்க வயிற்றுவலி நீங்கும்.

4. பால், சர்க்கரையிலே கூட்டிக்கொடுக்க உடம்பு பெருக்கும்.

5. ஓமத்தில் கூட்டிக்கொடுக்க, வீக்கம் மாறும்.

6. ஓமமும், சர்க்கரையும் கூட்டிக்கொடுக்க, மகோதர வியாதி தீரும்.

7. நெய்யிலே கூட்டிக்கொடுக்க வெண்குஷ்டந் தீரும்.

8. தேனும் சர்க்கரையும் கூட்டிக்கொடுத்தால் காது செவிடு தீரும்.

9. கடுக்காயில் கொடுக்கப் பயித்தியந் தீரும்.

10. வசம்பில் கூட்டிக்கொடுக்க குரல் ஓசையுண்டாம். (கம்பீரமாகும்)

11. எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுத்தால் இருமல் தீரும்.

12. மிளகுப்பொடியில் கூட்டிக்கொடுத்தால் உடம்பு வலி தீரும்.

13. வங்கத்தில் (பற்பம்) கூட்டிக் கொடுத்தால் தம்பனமாகும். போகசக்தி அதிகரிக்கும். இதற்கு மாத்து எலுமிச்சம்பழத்தை முகர்ந்தால் நிற்கும்

14. இஞ்சிச்சாற்றில் கொடுத்தால் உடம்பு எரிச்சல் தீரும்

15. அரத்தை (சிற்றரத்தை)யுடன் கூட்டிக்கொடுத்தால் வாதரோகங்கள் தீரும்.

16. வெள்ளாட்டு மூத்திரத்தில் கூட்டிக்கொடுத்தால் சேத்தும ரோகங்கள் தீரும்.

17. பாக்குடனே போட்டுக்கொள்ளச் சகல வியாதிகளும் நாசமாகும்.

18. கடுக்காய்ப்பொடியும் எலுமிச்சம்பழச்சாற்றில் உரைத்துக் கண்களிலிட உடம்பு ஆரோக்யம்

19. கோமூத்திரத்தில் அரைத்துத் திலகமிட வசீகரமாகும்.

20. எவச்சாரத்திலே உரைத்துக் கொடுக்கச் சிலேத்துமம் தீரும்.

21. சீரகம், சர்க்கரையில் கூட்டிக்கொடுக்கச் சுரத்திற்கு நல்லது.

22. வெல்லத்துடன் கூட்டிக்கொடுத்தால் இரத்தப் பிரமியந் தீரும்.

23. ஊமத்தஞ்சாற்றில் மிளகுடன், சமுத்திராப்பழம் சேர்த்துக்கொடுத்தால் வஜ்ரகாயம் (உடல் வலிவு) உண்டாகும்.

24. இஞ்சிச்சாற்றில் கூட்டிக்கொடுத்தால் மேகவியாதிகள் தீரும்.

25. மஞ்சள் பொடியில் கூட்டிக்கொடுக்க வாயுப் பிரமியம் தீரும்.

26. கரிசலாங்கண்ணிச் சாற்றில் கொடுக்கக் காது வியாதிகள் தீரும்.

இந்தப்படிக்கு 1 மண்டலம் (40 நாட்கள்) கொள்ள வியாதிகளெல்லாம் குணமாகும்.

27. சுக்கு வெல்லத்திலே கூட்டிக்கொடுத்தால் உதர சூலை (வயிற்றுவலி) தீரும்.

28. கடுக்காய்ப்பொடியிற் கொடுத்தால் வயிறு பேதிக்கும். று கழியும்)

## அக்னி மாந்தம், மூலவாயுச் சூலையின் குணம்

உடம்பு வறளும். அசனம் செரியாது. சாப்பாடு செல்லாது. ாயு மேற்கொள்ளும். வயிறு இரையும். நா வறட்சி உண் ாகும். மலச்சிக்கலேற்படும். தாதுக்கள் க்ஷீணமடையும். ரத்தம் வற்றும். சோகையேற்படும். நெஞ்செரிக்கும். (நெஞ்சுக்கரிப்பு உண்டாகும்.)

இதற்கு மருந்து:

| | |
|---|---|
| சுத்திசெய்த ரஸம் | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 4 கழஞ்சு |
| சுத்திசெய்த துரிசு | 2 கழஞ்சு |
| சுத்திசெய்த ஏலக்காய் | 4 கழஞ்சு |
| சுத்திசெய்த அரிதாரம் | 2 கழஞ்சு |
| சுத்திசெய்த சாதிலிங்கம் | 4 கழஞ்சு |
| சுத்திசெய்த அபினி | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த சாதிக்காய் | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த கிராம்பு | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த திப்பிலி | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த கடுக்காய்த்தோல் | 2 கழஞ்சு |
| பொரித்த வெங்காரம் | 3 கழஞ்சு |
| ஓடுபோக்கிச் சுத்திசெய்த நேர்வாளம் | 5 கழஞ்சு |
| கடுகுரோகிணி | 3 கழஞ்சு |
| இந்துப்பு | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த அரப்பொடி | 5 கழஞ்சு |
| சுத்திசெய்த தாம்ரப்பொடி | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த பொன்கிட்டம் (பொன் நிமிளை) | 5 கழஞ்சு |
| பொரித்த சீனாக்காரம் | 3 கழஞ்சு |

| | |
|---|---|
| வளவிக்காரம் (வளையலுப்பு) | 8 கழஞ்சு |
| கற்பூரம் | 8 கழஞ்சு |
| மிளகு | 8 கழஞ்சு |
| தான்றித்தோல் | 2 கழஞ்சு |
| நெல்லிமுள்ளி | 8 கழஞ்சு |
| முந்திரிகைப்பழம் | 8 கழஞ்சு |
| பேரீச்சம்பழம் | 8 கழஞ்சு |
| வில்வப்பழச்சதை | 8 கழஞ்சு |
| கடுகு | 4 கழஞ்சு |
| கம்பிப்பிசின் | 2 கழஞ்சு |

இவைகளைக்கூட்டி, இதற்குக் கஷாயச்சரக்குகள்

| | |
|---|---|
| வெள்ளைக்காக்கணம் வேர் | 2 கழஞ்சு |
| சதுரக்கள்ளிவேர் | 2 கழஞ்சு |
| அதன்பால் | 1 உழக்கு |
| சிவதைவேர் | 2 கழஞ்சு |
| வரிக்கற்றாழைச்சாறு | ½ படி |
| பசுவின் கோமியம் (மூத்திரம்) | 1 நாழி |
| எலுமிச்சம்பழச்சாறு | ½ படி |
| வெருகங்கிழங்கு | 2 கழஞ்சு |
| காட்டுக்கரணைக்கிழங்கு | 2 கழஞ்சு |
| கரிக்கருணைக்கிழங்கு | 2 கழஞ்சு |
| பிரண்டைவேர் | 2 கழஞ்சு |
| கொடிவேலிவேர் | 2 கழஞ்சு |
| முருங்கைவேர் | 2 கழஞ்சு |
| உகாய்வேர் | 2 கழஞ்சு |
| நாரத்தம்பழச்சாறு | ½ படி |

செய்யும் முறை:

முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்தில் இட்டு நன்றாகக் கருப்பாகும்வரை (கஜ்ஜலி) அரைத்துக் கொள்ளவும். பின்னர், ரஸ ஔஷதங்களையும், கடைச்சரக்குகளையும்,

கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். வேர் வகைகளைக் கொண்டுவந்து துண்டு துண்டுகளாக நறுக்கி, கல்லுரலிலிட்டு, ஒன்றிரண்டாக இடித்துக்கொண்டு ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்தஜலம் சேர்த்து, அடுப்பின் மேலேற்றி 1 பங்காக வற்ற வைத்துக்கொள்ளவும். பின்னர் வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தைக் கல்வத்திலிட்டு, மேற்படி கஷாயச்சாறு கலவையினால் 6 நாட்கள்,சிறுகச் சிறுகவிட்டு நன்றாக அரைக்கவும். நன்கு, இறுகியபின், சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டைகள் பண்ணி நிழலிலுலர்த்தித் தினம் 2 உருண்டைகள் வீதம் காலை, மாலை உட்கொள்ளவும்.

இதற்கு அனுபானம்: தேன், முலைப்பால், பசுவின் மூத்திரம், விளக்கெண்ணெய், பசுவின் பால், இளஞ்சூடுள்ள வெந்நீர் முதலானவைகளில் தேவைக்குத் தக்கபடி உட்கொள்ளவும்.

**பத்தியம்**: உப்பு, புளி, உரைப்புப் பண்டங்களைத் தவிர்க்கவும்.

குறிப்பு: 1 கழஞ்சு 1¼ வராகனெடை. 2. உரி ½ படி 3. கற்றாழையை அரிந்து கடுக்காய்த்தூள் சேர்த்துப்பிழியச் சாறு வரும்.

## பீனிஸத்திற்கு நஸ்யம்

கஸ்தூரி கொண்டுவந்து பசுவின் நெய்யில் எரித்து, 3 நாட்கள் நஸ்யம் செய்யவும்.

## பீனிஸத்திற்குத் தைலம்

கீழாநெல்லிவேர் நறுக்கி வைத்துக்கொண்டு

| | |
|---|---|
| மஞ்சள் | மிளகு |

ஆதண்டையிலை

இவைகளை வகைக்கு 1 வராகனெடையெடுத்து நசுக்கி, நல்லெண்ணெய் 1 சேருடன் சேர்த்துச் சிவக்கக்காய்ச்சித் தலையில் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் முழுகவும். பீனிஸம்(மூக்கு நீர்ப்பாய்ச்சல்) தீரும்.

## பவுத்திரத்திற்கு மருந்து

விடத்தேரி மரத்தின்மேல் வளரும் புல்லுருவியைக் கொண்டுவந்து, நிழலில் உலர்த்திப் பொடிசெய்து, பசுவின் வெண்ணெயில் குழைத்து ஆஸனப் புண்ணில் போடவும். பூச்சிகள் சாகும். புண்ணும் ஆறும்.

## பிள்ளைபெற்ற வயத்திலே அவகடம் (சிரமம்) ஏற்பட்டுக் கால் வழியே தன்னையறியாமல் நீர் இறங்கினால் மருந்துகள் (Vulvo Vesical Fistula)

முழு உளுந்து கொண்டுவந்து நனையவைத்துத் தோல் போக்கிக் காயவைத்து திருவையிலிட்டரைத்து மாவாக்கி,

| | |
|---|---|
| நறுந்தாளியிலை | 1 பிடியும் |
| முடக்கொத்தான் கொழுந்து | 1 பிடியும் |
| விடத்தேரைக்கொழுந்து | 1 பிடியும் |

இவைகள் மூன்றையும் அம்மியில் வைத்துப்பால் போகாமல் கெட்டியாக அரைத்து நல்லெண்ணெய் காயவைத்து உளுத்தமாவுடன் சிறிது தண்ணீர் விட்டுக்குழப்பி கருப்புக் கட்டியும் (பனைவெல்லம்) சேர்த்துக் களிகிண்டி உட்கொள்ளவும்.

2. உதிர வேங்கைப்பட்டையை ஊறவைத்து அரிசியுடனே இடித்துக் களிகிண்டி, நல்லெண்ணெய் வார்த்துக் கருப்புக்கட்டி (பனைவெல்லம்) கூட்டி உபயோகிக்கவும்.

3. நீர்ப்பூலாவேர் வெட்டிவந்து அரிசியுடனே சேர்த்துத் தண்ணீர்விட்டு இடித்துக் களிகிண்டிச் சாப்பிடவும்.

4. நல்லெண்ணெயும், கருப்புக்கட்டியும் சேர்த்துச் சாப்பிட்டாலும் குணமேற்படும்.

5. கோழிமுட்டை வெள்ளைக்கருவும், உளுந்தமாவும் பிசைந்து கருப்புக்கட்டியுடன் கூட்டி நல்லெண்ணெய் சேர்த்து உட்கொள்ளவும். அன்று மல்லாந்து படுக்கவும்.

## பிரஸவித்தவர்களுக்கு இரத்தம் நிற்க மருந்துகள்

1. நமுளைகயிலை புட்டவியலாக அவித்துக் கீழ்வயிற்றில் கட்டவும். 3 நாட்கள் கட்ட, உதிரப்போக்கு நிற்கும். கைகண்டது.

2. குப்பைக் கீரையைக் கொண்டுவந்து எலுமிச்சங்காயளவு விழுது அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க நிற்கும்.

## மேகவெட்டைக்கு மருந்து

வெள்ளறுகு ஒரு பிடி கொண்டுவந்து படி மோரில் இரவில் நறுக்கிப்போட்டு வைத்துக் காலமே அந்த வெள்ளறுகைப் பிசைந்து எடுத்து வடிக்கட்டிக் கொண்டு, 3 நாட்கள் குடிக்க வெள்ளை விழுதல் மாறிப்போம். கை கண்டது.

## சில் விஷகடிகளுக்கும், வீக்கம் முதலான வியாதிகளுக்குக் குழையடி மந்திரம் (விபூதி மந்திரித்தல்)

ஓம் குருவாழ குருநாதன் வாழ
எந்தன் வாழ எந்தனாசாரியர் வாழ
எவ்வாணை மறக்கிலுங் குருவாணை மறவேன்
குருவும். குருத்தடிச் செருப்பும் பள்ளிக்
குடையும் பகல்விளக்கும் அடியேன் தலைமேற்
கொண்டேன் சிவத்தினீர் வற்றிச்ச பன்னீர்
.... டுப்பத்து கட்டுவிட்டுக் கட்டுவிட்டு விதனமாறி
வீக்கமத்து விதனமத்துத் தீய்ந்து திரிபுரமேமோ
சுவாமியானை கடுக்காதே! கணபதியானை விளியாதே!
வைரவனாணை எரியாதே! இந்திரணாணை படுபடு!
பரமசிவனாணை படுபடு! ஆயிதந்த திருநீறு!
அம்மைதந்த திருநீறு! காளிதந்த திருநீறு!
காளாத்ரிதந்த திருநீறு! துர்க்கைதந்ததிருநீறு!
துர்க்காபரமேஸ்வரிதந்த திருநீறு! நீலா!
குமுலா! ஆதித்தா! சக்திமாரிஷி ஆறுசடை
முறுவுடை அம்மையாணை! ஆறிவிடு! ஆறி
விடு! போதுமினிப் போதுமினி சிவந்தபாதமும்
எழுந்க வீ(மீ)சையும் முன்னே எழுந்த
முன்குடுமியும் காதிலிட்ட கவச குண்டலமும்
ஏகமணிந்த திருவெண்ணீறும் பத்து விர
லும் பசும்பொன் புறப்பட்ட நயினார் கீழேழு
பூமியும் கொல்லன் ஏந்தியெடுத்த மழுவைக்
கண்டு வெண்ணெயுருக்கினாப் போலே யுருகி ஓடிவா!
சுவாமியாணை! ஆதி வயிரவன் அமுதுண்ணு
மல்ல வாளி யம்மை மருள மருளப் பார்த்த
விஷம் உறங்கக்கொண்டோடிவரப் பாதம்
எழுந்தருளப் பையேயானால்ச் கருணச்சுருள
ஊர்ப் பிள்ளையாரே சுவாகா! ஓம் இரதா
வயிர தாயி தாயிதா அக்கினி அசுஷணாசவதி

என்று ஜெபிக்கவும்.

## முகசந்நிக்கு மருந்து

சுக்கு 1 விராகன் திப்பிலி 1 விராகன்
மிளகு 2 விராகன்

இவைகளை ஒரு சீலையிலே முடிந்து அறியாப் பிள்ளையின் சிறுநீரிலே வேகவைத்துச் சுண்டின பிறகு எடுத்து அரைத்து அந்த நீரிலேயே குடிக்கவும் தீரும்.

முகசந்நி - முகவாதம்

## பாம்பு வாய்க்கட்ட

கொம்புப்பாகல்வேரை ஞாயிற்றுக்கிழமையில் வாய் பேசாமல் பிடுங்கி கொண்டுவந்து பாம்பின் வாயின் அருகில் பிடிக்கவும். பாம்பு எழாது. கைகண்டது.

## பிள்ளைபெற மருந்து

சுரைத்தண்டுடன் இலையையும் சேர்த்து வேகவைத்து மூன்று நாட்கள் காலமே கஷாயம் பருகவும். சுகப்பிரசவமாகும்.

## பிள்ளை பிறக்க மருந்துகள்

புங்கந்துளிர் ஒரு பிடி பொடுதலை ஒரு பிடி

இவை இரண்டையும் நசுக்கித் த லைப்பிள்ளைப் பெற்றவளின் முலைப்பால் வார்த்தரைத்துத் தலையில் தேய்க்கப் பிள்ளை விழும்.

2. கோரோசனையை (3 குன்றி) முலைப்பாலிலுரைத்துக் கொடுக்க வயிறு கழியும். காய்ச்சல் தீரும். மாந்தம் தீரும்.

இதற்கு மாத்து

நீர்ப்பூலாவேர் வெந்தயம்
ஈரவெங்காயம்

இவைகளை வகைக்கு ஒருபிடி எடுத்து நசுக்கிக் கஷாயம் வைத்துக்கொடுக்கவும்.

3. வெள்ளாட்டின் கொழுப்பை உருகவைத்து

கருவேலம்பட்டை வேப்பம்பட்டை
முருங்கைப்பட்டை ஆலம்பட்டை

இதெல்லாம் ஒரு நிறையாக அரைத்து நெய்யில் (கொழுப்பில்) போட்டுப் பதத்தில் வடித்து, ஒரு நேரத்திற்கு முட்டைக் கரண்டியாலே ஒரு கரண்டி கொடுக்கவும். 10 நாட்கள் இரு நேரமும் உட்கொள்ளவும். கார்ப்புப் புளிப்புத் தவிர்க்கவும்.

குறிப்பு: கொழுப்பு ஒரு சேருக்கு மருந்துச் சரக்குகளை தனித்தனி 1 விராகனெடை எடுத்துக்கொள்ளவும்.

## மூலத்திற்கு அடை

பேய்ப்பீர்க்கிலையும், உளுந்தும் ஊறவைத்து நன்றாக அரைத்துப் பன்றி நெய்யிலாகுதல், பசுவின் நெய்யிலாகுதல் அடை சுட்டுத் தின்கவும். அந்திசந்தி ஏழு தின்னவும். மூலக்கழிச்சல், கடுப்புத் தீரும்.

## பாம்புகடி(தடைதீர்க்க) மந்திரம்

ஆரிட்டார் நாகராசாவே! பார்வையிட்ட பத்துவிரலும் கல்லத்து, கருமலையத்து, சொல்லத்து, சொல்பிரட்டத்து, சொன்னவாயத்து, பில்லத்துப் பூப்போலே ஓடிப்போகச் சுவாகா!

## ஜன்னிக்கு மருந்துகள் (சுரத்திலுண்டாகும் சந்நி)

1. கருப்புக்கட்டியைக் கறுகச்சுட்டு வெள்ளாட்டுப் பாலிலரைத்துக் கொடுக்கவும்.

2. சுக்கு கழஞ்சு 4
மனோசிலை கழஞ்சு 8
கடுக்காய்த்தோல் கழஞ்து 3

இவைகளை இடித்துக் கல்வத்திலிட்டுப் பாகலிலைச் சாறு விட்டு அரைத்துக் குண்டுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு

குப்பைமேனியிலை முழுமஞ்சள் (வரளி)

கூட்டிக் கஷாயம் வைத்து அந்தக்கஷாயத்தில் ஒரு உருண்டை கொடுக்கவும். சன்னி 13ம் தீரும்.

## அட்டுப்படுவன், எலிப்படுவனுக்கு மருந்து

குளப்பாலைவேர் வெட்டிக்கொண்டு வந்து, பசுவின் பால் அல்லது வெள்ளாட்டுப்பால் விட்டு நன்றாக, அரைத்து 3 நாட்களுக்குக் கொடுத்துவரவும்.

**பத்தியம்**: 6 நாட்களுக்குக் கைப்பு, புளிப்பு உள்ள பதார்த்தங்களை நீக்கவும்.

## விரியன் பாம்புகடிக்கு மருந்து

குறிஞ்சாச்சாறு செருப்படிச்சாறு

இவ்விரண்டையும் (வகைக்கு ½ ஆழாக்கு) வீதம் கலந்து குடிக்க, விரியன் கடி தீரும்.

## எல்லாவித விஷக்கடிக்கும் மருந்து

எலுமிச்சம்பழச்சாறு, செருப்படிச்சாறு இவ்விரண்டையும் சமன் கலந்து குடிக்க, எவ்வகை விஷங்களும் தீரும்.

## மூலத்திற்கு மருந்து

மருக்காரைவேர் அழிஞ்சில்வேர்

இவ்விரண்டையும் சமனெடுத்து இளவெந்நீரிலரைத்து, ஒரு கொட்டைப்பாக்களவு 5 நாட்கள் கொடுக்கவும். கைப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

## ராஜப்பிளவைக்கு "நண்டுச்சாறு" மருந்து

நண்டை நசுக்கி வைத்துக் கட்டவும். காயாயிருந்தால் வெள்ளறுகைக் கொண்டுவந்து, அரைத்து விளக்கெண்ணெயில் குழைத்துப் போடவும். பிளவை பழுத்து வரும்.

## மருந்தீட்டிற்கு (இடு மருந்து) மருந்து

| | |
|---|---|
| வல்லாரைச்சாறு | படி 2 |
| தேங்காய்ப்பால் | படி 2 |

இவை இரண்டையும் கூட்டி அடுப்பின் மேலேற்றி படியாகக் காய்ச்சிக் கொண்டு,

| | |
|---|---|
| திப்பிலி | விராகனெடை 1 |
| ஏலக்காய் | விராகனெடை 1 |

பொடி பண்ணிப் போட்டுக் கொடுக்க வயிறு கழியும். மருந்தீடு போகும். வெந்நீர் குளிக்கவும், பசுவின் பால் வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும். புளி ஆகாது.

**குறிப்பு**: பிறரை வசம் செய்யவோ, விரோதத்தினாலோ உடலுக்கு ஒவ்வாத சரக்குகளைக்கூட்டி மருந்து வைத்தல் ஆகும். இதற்குக் "சுரவிஷம்" என்றும் பெயர்.

## மரித்தபிள்ளை விழ மருந்து

குளவிக்கூடு மண், புழு உள்ளதாகப்பார்த்து எடுத்து, எருமைத் தக்காளிச் சாற்றிலேயரைத்து, அந்தச் சாற்றிலேயே கொடுக்கவும். மரித்த பிள்ளை வெளியாகும். அதன் பிறகு வேப்பம் ஈர்க்குக் கருக்கிக் கஷாயம் செய்து கொடுக்கவும்.

## பவுத்திரத்திற்கு மருந்துகள்

1. கொடிக்கள்ளிக் கொழுந்து
   கருஞ்சீரகம்

இவ்விரண்டையும் சமன் கூட்டியரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டைகள் செய்து 15 நாட்கள் உலகமறியாப்பிள்ளையின் சிறுநீரில் உள்ளுக்குக் கொடுக்கவும். பத்தியமாக இருக்கவும். (உப்பு, புளிப்புக் கசப்புச் சுவையுள்ள பண்டங்களை நீக்கவும்.)

2. பரங்கிப்பட்டை 10 பலம் இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, கோதுமை படி 1 இடித்து வடிக்கட்டிக் கொண்டு, இவ்விரண்டையும் தனித்தனியே வைத்துக்கொள்ளவும். திருகுக்கள்ளியைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் பானையில் போட்டு, வேண்டிய தண்ணீர்விட்டுச் சுண்டவைத்து அந்தக் கஷாயத்தை இறுத்து, இரண்டு மாவும். தனித்தனியாக ஒரு உழக்கு வீதமெடுத்துப் பிசறி புட்டவியலாக அவித்து, எடுத்து ஆறவைத்து, இதனுடன் வெல்லம் வேண்டிய அளவு கூட்டி உட்கொள்ளவும். 5

நாட்கள் 10 வேளை இக்களியை உட்கொள்ளவும். பசுவின் பாலில் புட்டவித்துக் கொள்ளவும். விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

**பத்தியம்:** துவரம் பருப்பு முளைக்கீரை, முருங்கைப் பிஞ்சு, வெள்ளாட்டு உப்புக்கண்டம் கூட்டவும்.

மஞ்சள், மிளகு, புளி இவைகளைத்தவிர்க்கவும்.

**குறிப்பு:** புட்டவியல் செய்யும் முறை: ஒரு சட்டியில் பசுவின் பால் வார்த்து அதன் வாயை ஒரு வெண்மையான துணியில் வேடு கட்டி, பிசறிய மாவை அதன்மேல் பரப்பி, வாய்க்குத் தக்க அகலினால் மூடி, அடுப்பின் மேலேற்றி, பால் சுண்டு மட்டும் எரித்துப் பின் மருந்தையெடுத்து உபயோகிக்கவும்.

## பூச்சிக் கழிச்சலுக்கு மருந்து

நமுகைவேர் வெட்டிக் கொண்டுவந்து ஒரு காசத்தினைப்பட்டை முலைப்பாலிலரைத்துக் கொடுக்கவும். நிற்கும்.

**குறிப்பு:** நமுகை - நமை என்ற மரம்

## வாழாத பெண் வாழ மருந்து

குப்பைமேனி வேர் மாதளைவேர்
கோரோசனை

இம்மூன்றையும் அரைத்துக் குளிக்கப் பெண்களுக்கு வசீகரம் ஏற்படும்.

## பாண்டு சோகத்திற்கு "அயக்காந்தச் செந்தூரம்"

| | |
|---|---|
| ஊசிக்காந்தம் | பலம் 4 |
| மிளகு | பலம் 2 |
| கண்டத்திப்பிலி | பலம் 1½ |

| | |
|---|---|
| ஓமம் | பலம் 1½ |
| கொத்தமல்லிவிதை | பலம் 1½ |
| பெருங்காயம் | பலம் 1½ |
| அரப்பொடி | பலம் 4 |
| ஜீரகம் | பலம் 1½ |
| கருஞ்சீரகம் | பலம் 1½ |
| சிறுநாகப்பூ | பலம் 1½ |
| இலவங்கப்பட்டை | பலம் 1½ |
| கடுகரோகிணி | வராகன் 2 |
| சாதிக்காய் | வராகன் 2 |

முதலில் காந்தத்தையும், அரப்பொடியையும் சுத்திசெய்து கல்வத்திலிட்டுப் பொடிசெய்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைத்து வில்லையாகத்தட்டிக் காயவைக்கவும். காய்ந்தபின் ஒரு மண் ஓட்டில் வில்லையைவைத்து, மற்றொரு ஓடு கொண்டு மூடிச்சீலைமண்செய்து காயவைத்துப்புடம் போடவும். இவ்வாறு 8 தடவை புடம் போடவும். சுத்தமான செந்தூரமாகும். பின்னர் கடைச்சரக்குகளைச் சூரணமாக்கி வஸ்திரகாயம்செய்து வைத்துக்கொண்டு 10 நாட்கள் ஒரு குத்தளவுச் சூரணத்தில், 2 குன்றியளவு செந்தூரம் சேர்த்துத் தினம் 2 வேளை வெந்நீரிலோ தேனிலோ உட்கொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும். பாண்டு, சோகைவீக்கங்கள் தீரும்.

## கிரந்திப்புண், சூலை, வெடித்த புண்ணுக்கு மருந்து

| | |
|---|---|
| ரஸகர்ப்பூரம் | வராகன் 1 |
| குரோசாணிஓமம் | வராகன் 1 |
| வெல்லம் | பலம் ½ |

இம்மூன்று மருந்தும் கூட்டியரைத்து 7 நாட்கள் இரண்டு நேரமும் கொடுக்கவும். 8வதுநாள் விளக்கெண்ணெய் தேய்த்து வெந்நீரிலி

முழுகவும். 10வது நாள் வெந்நீர் ,ஸ்நானம் செய்யவும். 12வது நாள் நல்லெண்ணெய் தேய்த்து முழுகவும்.

**பத்தியம்:** கறிவகை, கத்தரிக்காய், கோழி, செம்மறிக்ககருவாடு, வாழைக்காய், பூசனிக்காய், பாகற்காய், நல்லெண்ணெய், பிலாக்காய், மாங்காய், கடுகு, கெண்டைமீன், உல்லான் கருவாடு பெருங்காயம் இதுவெல்லாம் 12ம் நாள் கூட்டவும்.

புதன், சூலை, மேகசூலை, வாதசூலை, ஆறாதபுண், இதுவெல்லாம் தீரும்

## புண்ணிற்குப் "பூரக் களிம்பு"

ரஸகர்ப்பூரம் வேண்டிய அளவு கொண்டுவந்து வெங்கலப்பாத்திரத்தின் பின்புறம் பசுவின் வெண்ணெய்கூட்டிக் காசிச்செம்பு (செம்பு) கொண்டுவந்து ஒரு நாள் இழைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு சீலையிலூட்டிப் புண்ணில் போடவும்.

## நீர்க்கட்டு, கல்லடைப்பு, இரத்தப் பிரமேகம், மலச் சிக்கல், வயிற்றுவலிக்கு இரஸகர்ப்பூர மருந்து

ரஸகர்ப்பூரம் கொண்டுவந்து சுத்திசெய்து, சிறுபூளை வேர், நெருஞ்சிவேர், ஓரிதழ்த்தாமரை வேர், சிறுகீரைவேர், நெல்லிவேர் இதுவெல்லாம் நறுக்கிச் சமனாகக்கூட்டிக் கஷாயம் வைத்து இறுத்துக்கொண்டு 1 பணவெடை (3 குன்றி) கஷாயத்தில் கொடுக்கவும்.

**குறிப்பு:** பூரசுத்தி, பூரத்திற்குச் சமனெடை வெத்திலையும் மிளகும் சேர்த்து அரைத்துத் தண்ணீரில்கலக்கி அதனில் பூரத்தைக் கிழிகட்டி டோலாயந்திரமாக எரிக்கவும்.

## மேகவெட்டை, அண்ட வாதத்திற்கு

| | |
|---|---|
| வாழைக்கிழங்கு | சர்க்கரை |
| பொரித்த துரிசு | |

இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்து அதிலேயே குழப்பிக் கொடுக்கவும்.

## மந்தாரகாசம், பீனிசகாசம், சுவாசகாசத்திற்கு
## "இரஸ தாளகச் செந்தூரம்"

| | |
|---|---|
| தாளகச்செந்தூரம் | ரசச்செந்தூரம் |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து, வெற்றிலைச் சாற்றில் 1 பணவெடை வீதம் உட்கொள்ளவும். தினம் 3 நேரம் உட்கொள்ளவும். மேற்படி வியாதிகள் தீரும்.

**யத்தியம்**: கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்

## 18 வித எலிகடிகளுக்கும் மருந்து

| | |
|---|---|
| வட்டக்கிலுகிலுப்பைவேர் | 1½ பலம் |
| வசம்பு | 1 பலம் |
| ஈரவெங்காயம் | 1 பலம் |
| பச்சைநெல் உமி | 1 பலம் |

இவைகளை ஒரு புதுச்சட்டியில் போட்டு 1 மரக்கால் தண்ணீர்விட்டு எட்டிலொரு பங்காக வற்றவைத்து, வட்டக் கிலுகிலுப்பைவேர் ஒரு பாக்கத்தனை அரைத்துப் போட்டு ஊறவைத்து 5 நாட்கள் கொடுக்கவும்.

எலிகடி விஷம் தீரும்.

## கிராணிக்கு மருந்து

| | |
|---|---|
| வட்டத்திருப்பிவேர் | மாதளங்காய் ஒன்று |
| சீரகம் | ஏலக்காய் |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| அபினி | பூண்டு |

மருந்து வகைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இடித்துக் கொண்டு, மாதளங்காயை அறுத்து, அதற்குள்ளே இவற்றை அடைத்துவைத்து, ஈரத்துணி சுற்றி, எருமைச சாணிகொண்டு அப்பிக்காயவைத்துப் புடம் போடவும். ஆறின பிறகு அரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உருண்டைபண்ணி எருமைத்தயிரில் கொடுக்கவும்.

கிராணிகள் (வயிற்றுப்போக்கு) தீரும்.

## வயிற்றுக்கட்டி, கெண்டை, நீராமைக்கு

| | |
|---|---|
| பிரண்டைச்சாறு | 1 நாழி |
| பேய்க்குமட்டிச்சாறு | 1 நாழி |
| சவுட்டுமண் | 1 சேர் |
| ஓமம் | 1 பலம் |
| பெருங்காயம் | 2 பலம் |
| சதகுப்பை | ½ பலம் |

கடைச்சரக்குகளை இடித்து, வடிகட்டிச் சாற்றுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி இறுகக் காய்ச்சவும். ஒரு நேரத்திற்கு 1 பாக்களவு கொடுக்கவும்.

குறிப்பு: கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## மூலத்திற்கு மேற்பூச்சி மருந்து

ஒரு கொம்புப் பாகற்காயைக்கீறி விதைகளை நீக்கி, அதற்குள்ளே வெள்ளைப் பாஷாணக்கட்டி, ஒன்றை வைத்து நூல்கொண்டு கட்டி, ஒரு சட்டியில் 1 படி தண்ணீர் வார்த்துஅதன் வாய்க்கு ஒரு வெள்ளைத்துணியினால் வேடுகட்டி அதன்மேல்வைத்து வேறொரு சட்டிகொண்டு மூடிச் சீலைமண் செய்து, அடுப்பின்மேல் வைத்து ஒரு நாழிகை எரிக்கவும். வெந்தபிறகு ஆறவைத்தெடுத்து கல்லுச் சுண்ணாம்புக்குள்ளே, அந்த வெள்ளைப்பாஷாணக்கட்டியை வைத்துப் பொட்டணமாகக்கட்டி வெந்நீரில் வைக்கப் புஷ்பம்போல் மலரும். அதையெடுத்துக் கல்வத்திலிட்டு அரைக்கவும். அதை எடுத்துக்கொண்டு மூலமுளைக்கு ஆமணக்கெண்ணெயிற் குழப்பிப் போடவும்.

## மூலத்திற்குப் பரங்கிப்பட்டைச் சூரணம்

| | |
|---|---|
| பரங்கிப்பட்டை | பலம் 10 |
| மிளகறணைவேர் | பலம் 5 |
| சிவனார்வேம்பு | பலம் 5 |
| சங்கம்பட்டை | பலம் 5 |
| வெள்ளறுகு | பலம் 5 |
| முக்காவேளை | பலம் 5 |
| சாரணைவேர் | பலம் 5 |
| சுக்கு | வராகனெடை 2 |
| திப்பிலி | வராகனெடை 2 |
| கருஞ்சீரகம் | வராகனெடை 2 |
| ஓமம் | வராகனெடை 2 |
| செஞ்சந்தனம் | வராகனெடை 2 |
| தேவதாரம் | வராகனெடை 2 |
| மரமஞ்சள் | வராகனெடை 2 |

| | |
|---|---|
| கஸ்தூரிமஞ்சள் | வராகனெடை 2 |
| காட்டுசீரகம் | வராகனெடை 2 |
| சீரகம் | வராகனெடை 2 |
| கொத்தமல்லி | வராகனெடை 2 |
| சிறுநாகப்பூ | வராகனெடை 2 |

இவைகள் எல்லாவற்றையும் காயப்போட்டுக் கல்லுரலில் இட்டிடித்துச் சூரணித்து, வஸ்திரகாயஞ் செய்து, தினம் வேளைக்கு ஒரு குத்தளவு எடுத்து வெந்நீருடன் உட்கொள்ளவும்.

**பத்தியம்**: கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## மூலம் பவுத்திரத்திற்குக் கஷாய வகைகள்

| | |
|---|---|
| நன்னாரிவேர் | விகுவிவேர் |
| முருவிலிவேர் | அவிரிவேர் |
| நிலக்கடம்பு | சிறுகுறிஞ்சாவேர் |
| பூவந்திவேர் | சிவகரந்தைவேர் |
| மிளகறணைவேர் | வெள்ளறுகு |
| செம்முள்ளிவேர் | விஷ்ணுக்ராந்தி |
| சங்கம்வேர் | பிரமியப்பூண்டு |
| கத்தாழைச்சரகு | கருவேலம்இலை |
| சாரணைவேர் | |

முதலான மருந்துச் சரக்குகளுடன்

| | |
|---|---|
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| பெருங்காயம் | வேப்பம்பிசின் |
| சதகுப்பை | குரோசானி ஓமம் |
| சிறுதேக்கு | வில்வப்பத்திரி |
| கடுக்காய்த்தோல் | பேய்ப்புடல் |
| நிலவேம்பு | கடுகுரோகிணி |
| வெங்காரம் | மிளகு |

| | |
|---|---|
| சுக்கு | வசம்பு |
| கருஞ்சீரகம் | பூண்டு |

இவைகளை வகையொன்றுக்கு ½ பலம் வீதமெடுத்து, முன் சரக்குகளும் ½ பலம் வீதமெடுத்து எல்லாவற்றையும் ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டித்தினம் 3 வேளை 1 அவுன்ஸ் வீதம் உட்கொள்ளவும்.

மூலம், பவுத்திரம் முதலான ரோகங்கள் தீரும். 20 நாட்கள் உபயோகிக்கவும்

| | |
|---|---|
| நன்னாரிவேர் | தூதுவேளைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | முன்னைவேர் |
| நிலக்குமிழ் வேர் | பெரியவாகைப்பட்டை |
| சிறுகாஞ்சோரிவேர் | பேராமுட்டிவேர் |
| பாதிரிவேர் | கோரைக்கிழங்கு |
| விஷ்ணுக்ராந்தி | திப்பிலி |
| திப்பிலிமூலம் | சித்தரத்தை |
| கடுகுரோகிணி | அதிமதுரம் |
| கருஞ்சீரகம் | கொத்தமல்லிவிதை |
| நிலவேம்பு | பேய்ப்புடல் |
| சுக்கு | |

இவைகள் வகைக்கு பலமெடுத்து ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது 1 பலம் தூள் எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிக்கட்டி தினம் 3 வேளை கொடுக்கவும். முன்சொன்ன நோய்கள் தீரும்.

| | |
|---|---|
| நன்னாரி வேர் | தூதுவேளைவேர் |
| கண்டங்கத்திரிவேர் | முன்னைவேர் |
| நிலக்குமிழ்வேர் | பெரியவாகைப்பட்டை |
| சிறுகாஞ்சோரிவேர் | பேராமுட்டிவேர் |
| குருவிச்சிவேர் | கோரைக்கிழங்கு |

| | |
|---|---|
| திப்பிலிமூலம் | சிறுதேக்கு |
| வாயுவிடங்கம் | கருஞ்சீரகம் |
| சித்தரத்தை | பேய்ப்புடல் |
| நிலவேம்பு | சுக்கு |

இவைகளை இடித்து வகைக்கு ½ பலம் வீதமெடுத்து இடித்து வைத்துக்கொண்டு, வேண்டும்போது சிறிதெடுத்து 8 மடங்கு ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி இறுத்து உட்கொள்ளவும்.

இதனை உட்கொள்ள பவுத்திரம், ஜ்வரம், மூலம், காசம் முதலானவைகள் தீரும்.

## சன்னி, மேகரோகங்களுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| சாறணைவேர் | சிவனார்வேம்பு |
| சிறுகுறட்டைக்கிழங்கு | பொடுதலை |
| மூக்கரட்டைவேர் | முடக்கொத்தான் |
| தழுதாழைவேர் | நொச்சியிலை |
| அவுரிவேர் | சங்கதாரிவேர் |
| சிறுகுறிஞ்சாவேர் | மண்புழு |
| பச்சைப்பாம்புஉப்புக்காண்டம் | முசுருமுட்டை |
| கோழிமுட்டை | மாடப்புறாஎச்சம் |
| குரங்குஎச்சம் | முதலைஎச்சம் |
| வெளவால்புழுக்கை | கருங்கம்பளிசுட்ட சாம்பல் |
| கோழியிறகுசுட்டசாம்பல் | |
| வெளவ்வால்காண்டம் | குப்பைமேனிவேர் |
| எருக்கம்வேர் | இந்துப்பு |
| பெருங்காயம் | பூதகரப்பான்பட்டை |
| செவ்வியம் | கடுகுரோகிணி |
| வாலுளுவையரிசி | கார்போகஅரிசி |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து நறுக்கி

நல்லெண்ணெய் 1 படி

வேப்பெண்ணெய் 1 படியுடன்

சேர்த்து எரிக்கவும்

இதனை உள்ளுக்கும் கொடுத்து (1 ஸ்பூன்) மேலுக்கும் பூசச் சன்னிகள், மேகரணம், புண்கள், வெட்டை முதலானவைகள் தீரும்.

கசப்புப் பண்டங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

**காசம், இருமல், வாந்திக்கு மருந்து**

| | |
|---|---|
| தூதுவேளையிலை | கண்டங்கத்திரிஇலை |
| சங்குஇலை | இண்டம்இலை |
| சித்தரத்தை | திப்பிலி |
| திப்பிலிமூலம் | அதிமதுரம் |
| வெளிச்சைப்பிசின் | |

இவைகளை இடித்து புட்டவித்து (வேட்டில் வேகவைத்து) சாறுபிழிந்துகொண்டு, கடைச்சரக்குகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். 1 சேர் தேனுடன் மேற்படி சாற்றைச்சேர்த்து, அடுப்பின் மேலேற்றி காய்ச்சி இறுகும்போது கடைச்சரக்குகளைச் சேர்த்துப்பாகு பதத்தில் இறக்கி உட்கொள்ளவும்.

தினம் 1 ஸ்பூனளவு 3 வேளை நக்கிவரக்காசம், சுவாசம் இருமல் முதலானவை தீரும்.

**விஷபாகம், மண்டைக்கரப்பானுக்குக் கஷாயம்**

| | |
|---|---|
| சங்கிலைச்சருகு | முறுவிலிச்சருகு |
| தூதுவேளைச்சருகு | அவரையிலைச்சருகு |

| | |
|---|---|
| தழுதாழைஇலைச்சருகு | த்ராய்கொடிச்சருகு |
| நாய்வேளைச்சருகு | சித்தாமுட்டிச்சருகு |
| பேராமுட்டிச்சருகு | விஷ்ணுக்ராந்தி |
| சங்கங்குப்பிச்சருகு | பிராய்ச்சருகு |
| கழற்சிக்கொடியிலேச்சருகு | புளியஞ்சருகு |
| அமுக்கிராயிலைச்சருகு | கருநொச்சிச்சருகு |
| முடக்கொத்தான்சருகு | முக்காவேளைச்சருகு |

பெருமருந்துச்சருகு, இவைகளுடன்

| | |
|---|---|
| ஓமம் | உள்ளிப்பூண்டு |
| கடுக்காய்த்தோல | |

இவைகளைச் சமமெடுத்து இடித்துப் பசுமாட்டு மூத்திரம் 8 மடங்குவிட்டு, நெல்லுமியும் கூட்டி அடுப்பின் மேலேற்றி எட்டிலொருபங்காக வற்றவைத்துக் குடிக்கவும்.

தினம் 3 வேளை 1 அவுன்ஸ் வீதம் உட்கொள்ள மேற்படி நோய்கள் தீரும்.

## சந்நி பதிமூன்றுக்கும் எண்ணெய்

| | |
|---|---|
| சிறுகுறிஞ்சாவேர் | தழுதாழை |
| நொச்சியிலை | சிறுகுறட்டைக்கிழங்கு |
| சத்திச்சாறணைக்கிழங்கு | வேலிப்பருத்திவேர் |
| சிவனார்வேம்பு | சங்கங்குப்பி |
| பெருஞ்செருப்படி | அவுரிவேர் |
| முறுவிலிவேர் | மாவிலை |
| நிலக்கடம்பு | செம்முள்ளி |
| வெள்ளறுகு | கொன்றைப்பட்டை |
| வாகைப்பட்டை | சிறுகிளா |
| சூரைவேர் | இலுப்பைப்பட்டை |
| வேப்பம்பட்டை | நரிவிளாம்பட்டை |

| | |
|---|---|
| கருங்கிளாப்பட்டை | நிலக்குமிழ்வேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | அமுக்கிராவேர் |
| ஆடாதோடைவேர் | எருக்கம்வேர் |
| மான்செவிக்கள்ளி | பொடுதலை |
| கரிசலாங்கண்ணி | பிரமி |
| பொன்முசுட்டை | முத்தெருக்கஞ்செவி |
| கோரைக்கிழங்கு | திருநாமத்துத்தி |
| முக்காவேளை | காவட்டம்புல் |
| ஆடுதீண்டாப்பாளை | முடக்கொத்தான் |
| கடலாத்திப்பட்டை | புங்கம்பட்டை |
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| கருஞ்சீரகம் | சித்தரத்தை |
| இந்துப்பு | பெருங்காயம் |
| ஓமம் | குரோசாணிஓமம் |
| செவ்வல்லிக்கொடி | மரமஞ்சள் |
| வலம்புரிக்காய் | வெளிச்சைப்பிசின் |
| கஸ்தூரிமஞ்சள் | தேவதாரம் |
| வெட்பாலையரிசி | காரபோகவரிசி |
| சீனாக்காரம் | வெங்காரம் |
| சதகுப்பை | பெருமரப்பட்டை |
| கற்கடசிருங்கி | சிறுதேக்கு |
| காந்தம் | கடுகுரோகிணி |
| வாயுவிடங்கம் | கொத்துமல்லி |
| நிலவேம்பு | |

இவைகள் எல்லாவற்றையும் வகைக்கு பலம் வீதமெடுத்து காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து ஒரு கல்வத்திலிட்டு ஆடாதோடையிலைச்சாறுவிட்டு நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் 2 படிவிட்டுப் பதத்தில் வடித்து இறக்கவும்.

ஒரு துட்டளவு உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் தடவவும்.

13 வித சந்நிகளும் தீரும்

## இருமல், மூச்சு, குன்மம், நெஞ்செரிச்சல், கிராணிக்கு எண்ணெய்

| | |
|---|---|
| கையாந்தகரை | தூதுவேளை |
| ஆடாதோடை | கண்டங்கத்திரி |
| தேள்கொடுக்கு | சாறணை |
| பொடுதலை | நொச்சி |
| கல்யாணமுருங்கை | கீழாநெல்லி |
| சங்கு | பெருமல்லிகை |
| சிறுமல்லிகை | செம்முள்ளி |
| துளசி | செருப்படி |
| மருக்காரை | பிரமி |
| வேலிப்பருத்தி | குப்பைமேனி |
| முசுமுசுக்கை | மணத்தக்காளி |

இவைகளின் சாறு ஒவ்வொன்றுக்கும் ஒரு நாழி கூட்டி அடுப்பின் மேலேற்றிக் குழம்பாக வற்றவைத்துக்கொள்ளவும். பின்னர்

| | |
|---|---|
| திப்பிலி | இந்துப்பு |
| வசம்பு | வெட்பாலையரிசி |
| கோஷ்டம் | சுக்கு |
| ஏலம் | அதிவிடையம் |
| செவ்வியம் | மிளகு |
| நற்சீரகம் | கஸ்தூரிமஞ்சள் |
| சிறுதேக்கு | ஓமம் |
| கருஞ்சீரகம் | பெருங்காயம் |
| கடுகுரோகிணி | விழலரிசி |
| பொன்னரிதாரம் | துரிசு |
| சாதிக்காய் | சதகுப்பை |
| கொடிவேலிவேர் | முத்தக்காசு (சோரை) |
| பெருங்குரும்பை (மருள்) | நன்னாரிவேர் |
| சிறுகாஞ்சோறிவேர் | பெருமரப்பட்டை |

| | |
|---|---|
| ஆவாரம்வேர் | தலைச்சுருளிவேர் |
| வில்வவேர் | (பெருமருந்து) |
| அமுக்குராவேர் | தூதுவேளைவேர் |
| பூவந்திப்பழம் | அப்பக்கோவைக்கிழங்கு |
| தேத்தாம்பழம் | |

இவை ஒரொன்று முக்கழஞ்சு கூட்டி முள்ளிப்பழம், குமிழம் பழம் இவைகளின் சாறு விட்டரைத்து, முன்னர் வற்ற வைத்த சாற்றுடன் கலந்து நல்லெண்ணெய் 3 படி விட்டு 3 நாள் சிறுகச்சிறுக எரித்துப் பதத்திலிறக்கவும். நன்கு வடிக்கட்டி ஆறியபின் தினம் ஒரு முட்டைக்கரண்டியளவு காலை மாலை கொடுக்கவும்.

ஐந்து விதமான இருமல், மேல்மூச்சு, மூக்குநீர்ப் பாய்ச்சல், உமிழ்நீர், கொழகொழத்தல், குன்மம், நெஞ்சு நோக்காடு, சூலை, மூலவியாதியும் பீனிஸம், வாந்தி வயிற்றுக்கிராணி, பெருவயிறு இவையெல்லாந் தீரும். கைகண்டது. கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

## பைத்தியத்திற்குக் "கரும்பு நெய்"

| | |
|---|---|
| பூசணிக்காய்ச்சாறு | 2 படி |
| பேய்ப்புடல்சாறு | 2 படி |
| கருப்பஞ்சாறு | 2 படி |
| சீந்தில்கொடிச்சாறு | 2 படி |
| செவ்விளநீர் | 2 படி |
| குழிமீட்டான் (நுத்தைச்சூரி)சாறு | 2 படி |
| முசுமுசுக்கைச்சாறு | 2 படி |
| பசுவின் பால் | 2 படி |
| தாமரையிலையின் உட்சுருள்சாறு | 2 படி |
| வாழைக்கிழங்குச்சாறு | 2 படி |
| நிலப்பனைக்கிழங்குச்சாறு | 2 படி |
| எலுமிச்சம்பழச்சாறு | 2 படி |

| | |
|---|---|
| நெல்லிக்காய்ச்சாறு | 2 படி |
| ஆடாதோடைச்சாறு | 2 படி |

இவைகளுடன், கழுதைப்பாலில் முசுரு முட்டையைப் போட்டுத் துவைத்துப் பிழிந்து மண்ணுண்ணிப் பாம்பும் சிறிதளவு போட்டு, ஒரு படி எடுத்துக்கொண்டு, மேற்படி சாறுகளை எல்லாம் ஒரு பெரும் பாத்திரத்திலிட்டுக் கெட்டிப்பாகு போல் காய்ச்சிக் கொள்ளவும்.

இதற்கு மேல் மருந்து:

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | கடுக்காய்த்தூள் |
| நெல்லிவற்றல் | தான்றித்தோல் |
| கஸ்தூரிமஞ்சளி | தேவதாரு |
| வாலுளுவை அரிசி | மரமஞ்சள் |
| கோஷ்டம் | மஞ்சிஷ்டா |
| சிறுநாகப்பூ | நாகப்பூ |
| கூகைநீர் | ஏலக்காய் |
| அதிமதுரம் | கிராம்பு |
| சீரகம் | கொத்துமல்லிவிதை |
| சதகுப்பை | திராக்ஷைப்பழம் |
| யானைத்திப்பிலி | அதிவிடயம் |
| கடுகுரோகிணி | திப்பிலி |
| இந்துப்பு | சீனாக்காரம் |
| கோஷ்டம் | செவ்வல்லிக்கொடி |
| சந்தனம் | வெட்டிவேர் |
| இலாமிச்சம்வேர் | பொன்னாங்காணிவேர் |
| நன்னாரிவேர் | தூதுவேளைவேர் |
| கோரைக்கிழங்கு | மாதளம்பழம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | கொட்டிக்கிழங்கு |
| ஓரிதழ்த்தாமரை | வெதுப்படக்கிவேர் |
| பூமிச்சக்கரக்கிழங்கு | அமுக்கிராவேர் |

இவைகள் வகையொன்றுக்கு முக்கழஞ்சு, கூட்டி முந்தின கஷாயத்தில் முந்திரிகைப்பழம் கலந்து நெய் பெரிய படி 2 விட்டு

மெழுகு பதத்தில் வடித்து இதில் சர்க்கரையும், சீரகமும் பொடித்துப் போட்டு வைத்துப் பத்திரப்படுத்தவும். தினமொன்றுக்கு 4 காசெடை நெய் குடிக்கவும்.

**தீரும் வியாதிகள்**: அறிவிழந்த பைத்தியம், அண்டவிருத்தி (Hydocele) கைகாலெரிச்சல், வயிறு எரிச்சல், தலைப்பித்த மயக்கம், உட்காங்கை, சோகை முதலான நோய்கள் தீரும்.

**பத்தியம்**: புளி நீக்கவும்.

## விஷகடிக்குக் "குழித்தைலம்"

உலர்ந்த கழுதை விட்டையை ஒரு ஓட்டைப்பானையிலிட்டுக் குழித்தைலமாக இறக்கி சிமிழியிலடைத்து, இத்தைலத்தில் நெல்லிக்காய்க் கெந்தகம் நுணுக்கிப்போட்டு நன்றாகக் கலக்கிப் புண்ணிலிட அவை ஆறும்.

## சூதிகாவாயுவிற்கு "வில்வாதிக் கஷாயம்" எண்ணெய்

வில்வப் பழம் ஒரு பலம் இடித்து, இளம் பதமாக வறுத்து ஒரு மாகாணி தண்ணீரில் (அதாவது வீசம்படி) போட்டு நன்றாய்க் காய்ச்சிப் பிழிந்து கொண்டு, ஒரு கையகலச் சீலை சுட்ட சாம்பல் போட்டு, ஒரு பெரும்பாக்களவு எருமை வெண்ணெயும் கூட்டிக் கொடுக்கவும். பிரஸவித்த ஸ்திரீகளுக்கு ஏற்படும் ஜ்வரம், கடுப்பு, தாகம் இவைகள் நிற்கும். கைகண்டது.

## கரப்பானுக்கு "உய்யக்கொண்டான் எண்ணெய்"

உய்யக்கொண்டான் இலை (இரண்டு) துவைத்துச் சாறு பிழிந்து, விளக்கெண்ணெய் நாழிகலந்து, பூண்டு, வசம்பு இரண்டும்

தட்டிப் போட்டுச் சூரிய புடம் வைத்து, இந்த எண்ணெயை உள்ளுக்குங் கொடுத்து கரப்பான் புண்களின் மேலும் பூச அவைகள் தீரும். உப்பு, புளிப்பு நீக்கவும். மேலும் வெடித்த புண், கடிகை (அரையாப்பு) துடைவாழை, குழிப்புண்கள் முதலியன ஆறும். கைகண்டது.

## சந்நி பதிமூன்றிற்கும் எண்ணெய்

| | |
|---|---|
| செங்கதாரி வேர் | சங்கம்வேர் |
| குமிழம்வேர் | கழற்சிவேர் |
| அறுகுவேர் | பெருமருந்துவேர் |
| கொடிவேலிவேர் | பெருங்குறும்பை (மருள்வேர்) |
| மிளகறணைவேர் | செம்முள்ளிவேர் |
| கறிமுள்ளிவேர் | மிளகறணைவேர் |
| மாவிலங்கைவேர் | நல்லவேளைவேர் |
| புங்கம்வேர் | நாயுருவிவேர் |
| பொன்முசுட்டைவேர் | இம்புரல்வேர் |
| தும்பைவேர் | கவுதும்பை (கழுதைத்தும்பை) வேர் |
| கருஞ்சூரைவேர் | |
| முடக்கத்தான்வேர் | வேலிப்பருத்திவேர் |
| மண்புழு | முசுறுமுட்டை |

இவைகளை வகைக்கு விராகனெடை 4 எடுத்து, இவற்றுடன்

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | வராகன் 4 |
| வசம்பு | வராகன் 4 |
| சித்தரத்தை | வராகன் 4 |
| பூண்டு | வராகன் 4 |
| மிளகு | வராகன் 4 |

இதுவெல்லாம் இடித்துச் சூரணித்து, வேப்பெண்ணெய் 2 படியுடன் போட்டுக் காய்ச்சிப் ப தத்தில் வடித்து, உள்ளுக்கும் கொடுத்து மேலும் போடவும். சன்னிகள் தீரும்.

**பத்தியம்**: கசப்பு, புளிப்புப் பதார்த்தங்களை நீக்கவும்.

**சலக்கழிச்சலுக்கு**

சீந்தில்தண்டு கோவைத்தண்டு

இவை இரண்டையும் சரிபாகமாகத் துவைத்துச் சர்க்கரை கூட்டித் துட்டத்தனைத் தேனுடன் உட்கொள்ளத் தீரும். கழிச்சல் நிற்கும்.

ஆவாரங்கொழுந்து ஒரு பிடி எடுத்துக்கொண்டு ஒரு பானையில் மோர் வார்த்து அதன் வாய்க்கு வேடுகட்டி வேட்டின்மேல் அந்த ஆவாரைக் கொழுந்தை ஒரே சீராகப் பரப்பி அதன்மேல் அடியிற்கண்ட கடைச்சரக்குகளைச் சூரணித்துப்போட்டு அதன்மேல் மறுபடியும் ஒரு படி ஆவாரையிலையைப் பரப்பிச் சட்டிகொண்டு மூடி வேகவைக்கவும். நன்றாக வெந்த பின்னர் இவைகளை எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்துத் துட்டளவு வில்லைகளாகச் செய்து, நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

கடைச்சரக்குகள்:

| | |
|---|---|
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| அதிவிடயம் | கிராம்பு |
| கல்நார் | கல்மதம் |
| சாஸ்திரவேதி | அபின் |

இவைகள் ஓரொன்று விராகன் ஒன்று எடுத்து இடித்துச் சூரணித்துக் கொள்ளவும்.

**அனுபானம்**: மோர், தயிரில் கொடுக்கவும்.

**பத்தியம்**: வாழைக்காய், வாழைப்பூ, முருங்கைக்காய், பால், தயிர், நெய், மோர் முதலியன. எப்பேர்ப்பட்ட கழிச்சலும் நிற்கும்.

## குன்மம், ஆமசூலை, குன்மசூலைக்குக் "குக்கிலாதிச் சூரணம்"

| | |
|---|---|
| சுத்திசெய்தகுக்கில் | பெருங்காயம் |
| ஓமம் | நவச்சாரம் |
| வெங்காரம் | சீனாக்காரம் |
| இந்துப்பு | கடுக்காய்த்தோல் |
| காந்தம் | கடுகு |
| நாய்க்கடுகு | கம்பிப்பிசின் |
| கார்போகவரிசி | சதகுப்பை |
| அதிவிடயம் | திப்பிலி |
| திப்பிலிமூலம் | சுக்கு |
| மிளகு | கோஷ்டம் |
| நாககேஸரம்(சிறுநாகப்பூ) | கொத்தமல்லிவிதை |
| பூண்டு | வசம்பு |
| கற்கடசிங்கி | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | சங்கம்வேர் |
| சாறணைவேர் | சிறுவழுதலைவேர் |
| எவச்சாரம் | சத்திச்சாரம் (கத்திரி) |

இவைகளை சமனாகக்கூட்டி (வகைக்கு 2 வராகனெடை வீதம் எடுத்து) வறுத்துப் பொடித்து வஸ்திரகாயம்பண்ணி வைத்துக்கொண்டு, இளவெந்நீரிலோ, தேனிலோ, இஞ்சிச் சாற்றிலோ ஒரு குத்தளவு உட்கொள்ளவும். வாயு, குன்மம், ஆமசூலை, குன்மசூலை, அசீரணம், கிராணிஇரைச்சசல், பொருமல் இவை தீரும்.

## கர்ப்பூராதிச் சூரணம்

| | |
|---|---|
| கர்ப்பூரம் | அரக்கு |
| கற்பூரசிலாசத்து | கோமூத்ரசிலாசத்து |
| செங்கழுநீர்க்கிழங்கு | கோஷ்டம் |

| | |
|---|---|
| இலவங்கம் (கிராம்பு) | மஞ்சள் |
| சடாமாஞ்சில் | சந்தனத்தூள் |
| அதிமதுரம் | சாதிக்காய் |
| குங்குமப்பூ | சீரகம் |
| கொத்துமல்லிவிதை | அமுக்கிராவேர் |
| சீந்தில்தண்டு | சிறுபூளைவேர் |
| பாலைவேர் | முந்திரிகைப்பழம் |
| நெருஞ்சிவேர் | நீர்முள்ளிவேர் |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| முள்ளிலவம்விதை | தண்டான்கோரைப்புல்கிழங்கு |
| ஆவாரம்பஞ்சாங்கம் | பேரீச்சம்பழம் |
| நாககேசரம் | செஞ்சந்தனம் |
| இலவம்பிசின் | பெருங்கோரைக்கிழங்கு |
| சிறுகோரைக்கிழங்கு | நாணல்வேர் |
| அத்திப்பட்டை | |

இவைகளைச் சரியெடை எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும். இதற்குச் சரியெடை சர்க்கரை கூட்டிக்கொள்ளவும்.

இதனைத் தேனிலோ, நெய்யிலோ, சம்பா அரிசிக் கழுநீரிலோ ஒரு குத்தளவு கொடுக்கவும்.

தீரும் வியாதிகள்: மூத்திரகிரிச்ரம், கல்லெரிப்பு, குன்மம், உதரவியாதிகள், 20 வகை பிரமேகம், ஸர்வாங்கவாதம், மேகரோகங்கள் முதலானவை தீரும். தேகம் புஷ்டியுண்டாகும்

**குறிப்பு:** ஆவாரையிலை, பூ, காய், வேர், தண்டு முதலியன

## ராஜப்பிளவைக்கு மருந்துகள்

கருநொச்சிச்சாறும் சங்குச் சுண்ணாம்பும் குழைத்துப்போட, பிளவை பழுக்கும்.

பூச்சி பிடித்தால் பேய்ப்பீர்க்கன் கூடு விரைபோக்கி, நன்றாகத் தட்டிப் புண்ணின்மேல் வைத்துக்கட்ட பூச்சிகள் செத்து விழும். அதன்பிறகு துவர எண்ணெய் போட ஆறும்.

கொல்லங்கோவைக்கிழங்கையரைத்து வீக்கத்தில் பூசவும்.

ஆத்தியிலையை வதக்கி வைத்துக் கட்டவும். ஆறும்.

| | |
|---|---|
| கொம்புப்பாகல் இலைச்சாறு | 1 குறுணி |
| கஸ்தூரிமஞ்சள் | கருஞ்சீரகம் |
| கடுகுரோகிணி | திப்பிலி |
| சிறுதேக்கு | சித்தரத்தை |
| சதகுப்பை | வெட்பாலையரிசி |
| விழலரிசி | வாலுளுவை |
| கிராம்பு | கார்போகஅரிசி |
| வாயுவிடங்கம் | இந்துப்பு |
| பெருங்காயம் | ஓமம் |
| பூதகரப்பான்பட்டை | மரமஞ்சள் |
| வசம்பு | உள்ளி |
| கடுக்காய்த்தோல் | தான்றித்தோல் |
| நெல்லிமுள்ளி | |

இவைகளையெல்லாம் வகைக்கு 3 கழஞ்சுகள் வீதம் எடுத்துச் சூரணித்து, வேலிப்பருத்திச்சாறுவிட்டுக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் பெரியபடி ஒன்று விட்டுப் பதத்தில் வடித்துக்கொண்டு 2 காசெடை உள்ளே கொடுக்கவும். மேலே நனைக்கவுந் தீரும்

மாம்பட்டையை (சுமார் 8 பலம்) வெட்டிக்கொண்டு வந்து உரலிலிட்டிடித்து, ஒரு மிடாவில் போட்டு நிரம்பத்தண்ணீர் விட்டு மிடாவிற்கு வேடுகட்டி, அதன்மேல் கறுங்குருவையரிசியை ஊறவைத்து, இடித்து, வேட்டின்மேல் வைத்துப் பிட்டாய்ச் சமைத்து, 3 நாட்கள் அந்தி சந்தி 2 நேரமும் உட்கொள்ளவும்.

**பத்தியம்**: கைப்பு, புளிப்புச்சுவையுள்ள பதார்த்தங்களைத் தவிர்க்கவும். ஒத்தடம் இடவும். பிளவைகள் தீரும்.

## அக்கரத்திற்கும் தேள்கொட்டிற்கும் மருந்து

பிலாமரத்துக் காளான் கொண்டுவந்து, இளவெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். (அக்கரகம் - வாயிலுண்டாகும் வெண்ணிறப் புண்) குணமாகும்.

தேள் கொட்டினால் கொட்டுவாயில் காளானை வெந்நீரில் உறைத்துப்போட வலி நிற்கும். நிற்காமல் போனால் மாறு (எதிர்ப்) பக்க நாசித்துவாரத்தில் நசியமிடவும்.

## மலட்டு வலிக்கு மருந்து

சுட்டகல்லுச் சுண்ணாம்பை, ஆறவிட்டு, எ டுத்து ஒரு படி தண்ணீரில் கரைத்து, உரல் வாய்க்கு வேடுகட்டிக் கரைத்த சுண்ணாம்பை அதிலூற்ற வெய்யிலிலே வைத்து ஒரு நேரத்திற்குப்பின் ஒரு உழக்குச் சுண்ணாம்பின் தெளிந்த தண்ணீரைக் கொடுக்கவும். 3 நாட்கள் கொடுக்கவும்.

கைகண்டது. காப்பு, புளிப்புத் தவிர்க்கவும். அடிவயிற்றுவலி நிற்கும்.

## ஆட்டுப்படுவன், மாட்டுப்படுவன், எலிப்படுவனுக்கு மருந்து

கொடிவேலிவேர் சிறுஉவாய்வேர்
முருங்கைவேர்

இம்மூன்று மருந்தையும் தேத்தாம் சாற்றில அரைத்து இளவெந்நீரில் கொடுக்கவும். அல்லது பசுவின் பாலில் கொடுக்கவும். 3 நாட்கள் உட்கொள்ளப் படுவன் வகைகள் தீரும். கைப்புப் புளிப்புத் தவிர்க்கவும்.

சூரையிலையையரைத்துப் பசுவின் பாலில் ஒரு விளாங்காயளவு கொடுக்கக் கழிச்சல் நிற்கும். படுவனுக்கும் நல்லது.

நாவல் இலை, கோவையிலைச்சமூலம் இவைகளைக் கொண்டுவந்து இடித்துச் சாறு பிழிந்து 6 படி எடுத்துக் கொள்ளவும். அதில்காட்டுச் சீரகம் 2 படி போட்டு ஊறவைத்து அ டுப்பின் மேலேற்றி சாறு வற்றின பிறகு, நிழலிலுலர்த்திப் பதினைந்து நாட்கள் அந்தி சந்தி ஒரு குத்தளவு வீதம் உட்கொள்ளவும். வண்டுகடிகள் தீரும். (தேமல் போன்றவை)

**பத்தியம்**: பாலும், சோறும் சாப்பிடவும். கைப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

### ஈளை, இருமலுக்கு "இலைக்கள்ளிச் சூரணம்"

இலைக்கள்ளிவேர்ப் பட்டையைத் தட்டிக்காய்ந்தபின் இடித்து வடிகட்டி வைத்துக் கொண்டு இந்தப் பொடியை ஒரு வெருகடி (குத்தளவு) தேனில் உட்கொள்ளவும். ஈளை, இருமல் தீரும். இந்தப் பொடியைப் பாலில் காய்ச்சியுட் கொள்ள மலடு நீங்கிப் பிள்ளையுண்டாகும்.

### பவுத்திரத்திற்குக் கட்ட மருந்து

அரளியிலை கொண்டுவந்து புட்டவியல் பண்ணி மூன்று நாட்கள் கட்டத் தீரும்.

## கல்லடைப்பிற்கு

செப்பு நெருஞ்சியும், கீழாநெல்லியும் சமனெடை எடுத்துப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும். நீரிலுண்டாகும் கற்கள் கரைந்து விழும்.

## மேல்மூச்சுக்கு பிரண்டை மருந்து

பிரண்டையைத் தகடாகத் தட்டி மேலும் கீழும் வரகு வைக்கோலிட்டு எரித்து அந்தப் பிரண்டை மஞ்சள் நிறமான பின்பு எடுத்துப் பிழிந்துகொண்டு, இந்தச் சாற்றிலே ஒரு காசிடை திப்பிலிப் பொடியைக் கூட்டி கொடுக்க, மேல்மூச்சு நிற்கும்.

## பறவை தோஷக் குறிகள்

குழந்தையின் உடல் மெலிந்து குடித்தபால் செரியாமல் வாந்தியாதல், மேல்முச்சு, தூக்கத்தில் தண்ணீர் கேட்டல் முதலியன.

## பறவை தோஷத்திற்கு யந்திரம்



### குளிதோஷக்குறிகள்

தாய்ப்பால் சிறிது குடிக்கும். உடனே அழும். பின்னர் பேதியாகும். உடம்பு மெலியும். தீட்டான ஸ்திரீ குளித்த பின் குடி

குளிதோஷத்திற்கு யந்திரம்



### இளைத்த பிள்ளைக்கு கட்ட குளிசம்:



**சீத ஜ்வரத்திற்கு இந்த யந்திரம் கட்டவும்:**




பெரும்பாடு - ஸ்திரீகளுக்குத் தீட்டு அதிகமாதல்

**பெரும்பாட்டிற்கு யந்திரம்:**

வெற்றிலையில் வரைந்து




உட்கொள்ளவும்

குறிப்பு: மேற்படி யந்திரங்களை ஒரு சதுரமான செப்புத்தகட்டில் ஒரு எழுத்தாணியினால் பொத்துவிடாமல் எழுதிச் சுருட்டி, ஒரு வெள்ளித்தாயத்துக்குள் வைத்து மூடித் தீப தூபங்கள் காட்டி, ஒரு பட்டுக் கயிற்றினால் கட்டிக்கொள்ளவும்.

### சுவாசகாசத்திற்குக் கெந்தகச் சுடர் தைலம்

| | |
|---|---|
| சுத்தியான கெந்தகம் | இரதம் |
| சுத்தியான மனோசிலை | கோஷ்டம் |
| தாமரைத்தாது | |

இவையோரொன்று ஒரு கழஞ்சுகொண்டு முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு, அரைத்துக் கஜ்ஜலி செய்து, பின் சரக்குகளைத் தனித்தனியே பொடித்துச்

| | |
|---|---|
| சங்கம் பழச்சாறு | கையாந்தகரைச்சாறு |

வார்த்து அரைத்து, வெள்ளைச் சீலையிலூட்டி நிழலில் உலர்த்தி வைத்துத் திரியாக உருட்டவும். திரியை நல்லெண்ணெயில் நனைத்துக் கொளுத்தி, அதில் நல்லெண்ணெய் சிறிது சிறிதாக விட்டுச் சுடர்தைலம் (திரியிலிருந்து சொட்டும் தைலம்) எடுக்கவும். இந்த எண்ணெயில் 3 சொட்டுகள் உள்ளங்கையிலெடுத்து நக்கச் சுவாசகாசந் தீரும். கைகண்டது.

### குன்மசூலை, வாதரோகத்திற்கு "உள்ளிக் கடுகு"

| | |
|---|---|
| கொன்றை | கழற்சிக்கொடி |
| முடக்கொற்றான் | புங்கு |

இவை ஓரொன்று எலுமிச்சங்காயளவு எடுத்தரைத்து இதில்

| | |
|---|---|
| இந்துப்பு | எவச்சாரம் |
| சத்திச்சாரம் | கறியுப்பு |

| | |
|---|---|
| காசலவணம்(வளையலுப்பு) | ஸௌவர்சலவணம் |
| கல்லுப்பு | (ஸூரக்ஷரியம்) |
| பெருங்காயம் | சுத்திசெய்தநேர்வாளம் |

இவை ஓரொன்று ஒரு கழஞ்சு (1 வராகன்) இவற்றுடன் பூண்டு 2 பலம் அரைத்து, எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து உழக்கு ஆமணக்கெண்ணெய் விட்டு அடுப்பின்மேல் ஏற்றி இறுகச்செய்து, வேளைக்கு கழஞ்சு உட்கொள்ளக் குன்மச்சூலை, குடல்வாதம், சூலை, பொருமல், வாதரோகம் முதலானவை தீரும்.

## பித்த சுரரோகக் கஷாயம்

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | பற்பாடகம் |
| கொத்தமல்லி | சந்தனம் |
| நெல்லிமுள்ளி | வெட்டிவேர் |

இவைகளைச் சரியளவுகொண்டு நறுக்கி இடித்து 8 மடங்கு தண்ணீர்விட்டு 1 பங்காகக் காய்ச்சி இறுத்துக்கொண்டு, சர்க்கரைபோட்டுத் தினம் 3 வேளை பருகிவரப் பித்தசுரம் தீரும்.

## பித்த சுரக் கஷாயம் (வேறு)

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | பொன்னாங்காணிவேர் |
| நெல்லிவற்றல் | சீந்தில்தண்டு |
| பொரி | இலாமிச்சம்வேர் |
| வெட்டிவேர் | நன்னாரிவேர் |
| கோரைக்கிழங்கு | சந்தனத்தூள் |

சரிகொண்டு இடித்து 8 மடங்கு ஜலம் விட்டு எட்டில் ஒன்றாகக்காய்ச்சி இறுத்துக்கொண்டு சர்க்கரை 3 கழஞ்சு போட்டுக்கொடுக்கவும். (தினம் 3 வேளை வீதம் பருகவும்.)

## மூக்கடைப்பிற்கு நஸ்யம்

ஏலம், அதிமதுரம், இவ்விரண்டையும் முலைப்பாலில் இழைத்து, சீலையிலூட்டி மூக்கில் நஸ்யம் செய்யவும்

## குமரி பஸ்பம் (சுயமக்கினி)

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | விராகன் 4 |
| மனோசிலை | விராகன் 1 |
| சுத்திசெய்த கெந்தகம் | விராகன் 8 |
| சுத்திசெய்த ஊசிக்காந்தம் | விராகன் 4 |
| சுத்திசெய்த அரப்பொடி | விராகன் 12 |
| சுத்திசெய்த வெங்காரம் | விராகன் 1 |

இவைகள் எல்லாவற்றையும் சோற்றுக்கற்றாழைச்சாறு விட்டரைத்து நித்தம் ஒரு ஜாமம் வீதம் 5 நாட்கள் அரைத்து அந்தக் கல்வத்தை அப்படியே வெய்யிலிலே வைக்கவும். ஒரு சாமத்திற்குப்பின் அதிலிருந்து புகை எழும்பும். அதை எடுத்துப் பொடிசெய்துத் தினம் ஒரு விராகன் தேனில் 2 குன்றியளவு வீதம் உட்கொள்ளத்தீரும். வியாதிகள், பீலிகை, குன்மம் வயிறுநோய்கள், வாயுகாமாலை, சோகை பித்தபாண்டு முதலியன.

## சங்கு பஸ்பம்

சங்கு 2 விராகன் சுட்டுப் பற்பமாக்கி உயிருள்ள நத்தாங்கூட்டிலுள்ள நீர் சேர்த்துக்கொடுக்கவும். அரையின்கீழ் அசந்தவாதம் (கால் துவளுதல்) இடுப்பு வாதம் (இடுப்பு வலி) முதலானவை நிற்கும். கைகண்டது.

## புண்ணுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| கருநொச்சிக்கொழுந்து | அவரையிலை |
| கழற்சிக்கொடி | முருக்கிலை |
| ஆடாதோடையிலை | தழுதாழையிலை |
| சாணாக்கியிலை | அவுரியிலை |
| கையாந்தகரையிலை | கொட்டைக்கரந்தையிலை |

இவைகளின் சாறு 1 உழக்கு, ஈரவெங்காயச்சாறு 3 உழக்கு

| | |
|---|---|
| சத்திச்சாறணை வேர் | புளிநரளைக்கிழங்கு |
| வெருகங்கிழங்கு | காட்டுக்கருணைக்கிழங்கு |
| கறிக்கருணைக்கிழங்கு | மருளங்கிழங்கு |
| கொழுஞ்சிவேர் | ஆணாவேர்(தண்டான்) |
| தூதுவேளைவேர் | பெருநரளைக்கிழங்கு |
| புலிதுடக்கி | வெள்ளறுகு |
| (ஆடுதீண்டாப்பாளைவேர்) | செங்கதாரிவேர் |
| நறுவிளாவேர் | காட்டுமல்லிகைவேர் |

இவைகள் வகைக்கு ½ பலம்

| | |
|---|---|
| கொத்துமல்லிவிதை | சதகுப்பை |
| பூதகரப்பான் பட்டை | கஸ்தூரிமஞ்சள் |
| சித்தரத்தை | கற்கடசிருங்கி |
| கருஞ்சீரகம் | வெளிச்சைப்பிசின் |

வகையொன்றுக்கு விராகன் 2

பரங்கிப்பட்டை பலம் ½

| | |
|---|---|
| வசம்பு | உள்ளிப்பூண்டு |

இவை விராகன் 2

முதலில் சாறுவகைகளை ஒன்றாகக்கலந்து, மற்ற சம்பைச் சரக்குகளையும், கடைச்சரக்குகளையும் வெட்டிக் கல்லுரலில் இட்டிடித்து மேற்படி சாறு விட்டரைத்து ஆமணக்கெண்ணெய் ஒருபடி (8 சேர்) விட்டுக்குழப்பி, அடுப்பின் மேலேற்றிப்

பக்குவமாக எரித்து வடிக்கவும். நேரத்திற்கு 1 வராகனெடை உட்கொள்ளவும். இப்படி 7 நாட்கள் அல்லது 5 நாட்கள் உட்கொள்ளப் புண்கள், கிரந்தி, மூலவாயு அழுகி ஒழுகும். கிரந்திகள், செங்கிரந்தி, சுழிகனை (பெருமூச்சு வாங்குதல்) மாந்தம் இவைகள் தீரும்.

**பத்தியம்**: உப்பு, புளி, கார்ப்பு ஆகாது.

## வஜ்ஜிரவல்லித் தைலம்

| | |
|---|---|
| பிரண்டைத்தைலம் | 2 மரக்கால் |
| நல்லெண்ணெய் | 1 படி |

தேங்காய் 2 துருவி, மஞ்சள் ½ பலம் பொடி செய்துபோட்டு பிழிந்தெடுத்த பால்

| | |
|---|---|
| நொச்சிவேர் | சாறணைவேர் |
| விழுவிவேர் | கழற்சிக்கொடிவேர் |
| முருங்கைவேர் | |

இவைகள் வகைக்கு ½ பலம்

| | |
|---|---|
| தேவதாரம் | சடாமாஞ்சில் |
| அதிமதுரம் | மஞ்சிஷ்டா |
| கடுகு | மஞ்சள் |
| அதிவிடயம் | அசமதாகம் (ஓமம்) |
| சிறுநாகப்பூ | வெள்ளிலோத்திரம் |
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | திப்பிலிமூலம் |
| செவ்வியம் | சதகுப்பை |
| பெருங்குரும்பை (மருள்) | ஏலம் |
| கிராம்பு | சித்தரத்தை |
| கோஷ்டம் | வாலுளுவையரிசி |
| இந்துப்பு | சாதிக்காய் |
| தக்கோலம் | சந்தனம் |

கஸ்தூரிமஞ்சள் கோரைக்கிழங்கு
வெட்டிவேர் இலாமிச்சைவேர்

முதலான சரக்குகள் வகைக்கு 2 வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தூளாக்கி மேற்படி சாறுகளுள் ஏதேனும் ஒரு சாறு வார்த்து அரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் கூட்டி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தை உள்ளுக்குக் காசெடை உட்கொண்டு, மேலும் பூச வாதம் 80. சன்னி 13, யானை குதிரைகளுக்கு ஏற்படும் வாதம், சர்வாங்க வாதம் முதலான நோய்கள் தீரும்.

## பித்தம், கழிச்சலுக்கு மருந்து

ஒரு பெரிய எலுமிச்சம்பழம் எடுத்து அதனை இரண்டாக அறுத்து, ஒரு கறிமிளகத்தனை வெந்தயம் அந்தப் பழத்திற்குள் திணித்து, ஒரு கிராம்பையும் கூடத்திணித்துச் சீலைமண் செய்து சுட்டு, அந்த வெந்த பழத்தை அரைத்து, எருமைத்தயிரில் கொடுக்கவும். கழிச்சல், பித்தம் தீரும். கைகண்டது.

## கொம்மட்டிக்காய்க் கடுகு

அலகைதின்னும் குமுட்டிக்காய்ச் சாறுநாழி
அதினளவு சம்பீரப் பழச்சாறுநாழி
குலவுசிறு கருநொச்சியிலைச் சாறுநாழி
கொள்ளவே வெள்ளுள்ளி யிஞ்சிச்சாறு
சலமறவே காய்ந்துவத்தி நாழியானால்
தன்னோடு சாதிலிங்கம் சூதம்காந்தம்
நலமுடைய வெங்காரம் சோமணுப்புக்
கடுகுரோ கிணியசம தாகம்கொள்ளே.

மிளகுமஞ்சள் குலவுநேர் வாளம்உள்ளி
உள்ளபடி நிறைமூன்று கழஞ்சரைத்து
ஒன்றுபட பாகுதனில்கலந்து போட்டு
மெள்ளவது பழம்புளிபோல் பதந்தானாகில்
குலவுமது தூதுவளங் காய்போலுண்ணு
உள்ளபடி குன்மமெட்டு வாயுபத்து
உதரமிகு தோஷமெல்லாம் உருகிப்போமே.

| | | |
|---|---|---|
| (இ-ள்.) | பேய்கொம்மட்டிக்காய்ச்சாறு | 1 படி |
| | எலுமிச்சம்பழச்சாறு | 1 படி |
| | கருநொச்சியிலைச்சாறு | 1 படி |
| | இஞ்சிச்சாறு | 1 படி |

ஆக இந்த ஐந்துவகைச் சாறுவகைகளையுங் கூட்டி அடுப்பின்மேலேற்றி நாழியளவாகக் காய்ச்சிக்கொள்ளவும்.

இதில் கூட்டுமருந்து:

| | |
|---|---|
| சுத்திசெய்த இரதம் | 3 விராகன் |
| சுத்திசெய்த லிங்கம் | 3 விராகன் |
| சுத்திசெய்த ஊசிக்காந்தம் | 3 விராகன் |
| பொரித்த இந்துப்பு | 3 விராகன் |
| பொரித்த வெங்காரம் | 3 விராகன் |
| கடுகுரோகிணி | 3 விராகன் |
| ஓமம் | 1 விராகன் |
| பூண்டு | 3 கழஞ்சு |
| மிளகு | 3 கழஞ்சு |
| மஞ்சள் | 3 கழஞ்சு |
| சுத்திசெய்த நேர்வாளம் | 3 விராகன் |

இந்த மருந்துகளையெல்லாம் கல்வத்திலிட்டு மேற்படி கஷாயம் விட்டு நேகவரைத்து முன் குறிப்பிட்டச் சாறு வகைகளுடன் கூட்டி, மறுபடியும் அடுப்பின் மேலேற்றிப் பழம்புளிபோல் இறுகவரைத்து இறக்கவும். இம்மருந்தைத் தூதுவளங்காய்ப் பிரமாணம் உட்கொள்ளவும். 4 தடவைகள் அல்லது 6 தடவைகள் வயிறு கழியும். வயிற்றுக் கட்டியும் கரையும்

வாயுச்சூலை, 8 வித குன்மங்கள், வீக்கம், 10 வகை வாயுக்கள், மலபந்தம், வயிற்று நோய்கள், சுவாசம் முதலான ரோகங்களுந் தீரும்.

## சர்வஜ்வராங்குச மாத்திரை

| | |
|---|---|
| சுத்திசெய்த ரஸம் | விராகன் 1 |
| சுத்திசெய்த கந்தகம் | விராகன் 1 |
| சுத்திசெய்த சாதிலிங்கம் | விராகன் 1 |
| சுத்திசெய்த நாபி | விராகன் 1 |
| சுத்திசெய்த நேர்வாளம் | விராகன் 1 |
| கடுகு | நெல்லிவற்றல் |
| தான்றித்தோல் | சுக்கு |
| திப்பிலி | கடுகு |
| சீரகம் | |

இவைகள் வகைக்கு 1 வராகனெடை

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு, நன்றாக கறுப்பாகும் வரை யரைத்துக் கஜ்ஜலி செய்து, பின்னர் மற்ற மருந்துகளையிட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு, நன்றாக ஒருநாள் முழுவதும், அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி பத்திரப் படுத்தி வைக்கவும்.

அனுபான பேதங்கள்:

சீத ஜ்வரத்திற்கு சர்க்கரையில் கொடுக்கவும். நீராம்பல் (வீக்கம்) பித்தத்திற்கு நெல்லிக்காய்ச் சாற்றில் கொடுக்கவும்.

உதிரம் விழுகிறதற்கு இஞ்சி சாற்றில் கொடுக்கவும். சேத்தும ஜ்வரத்திற்கு மிளகுப் பொடியில் கொடுக்கவும்.

வயிற்று சூலைக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். குன்மத்திற்கும், முட்டி வலிக்கும் யவச்சாரம் சேர்ந்த வெந்நீருடன் கொடுக்கவும்.

பயித்தியத்திற்கு முசுமுசுக்கையிலைச்சாறும், சர்க்கரையும் கூட்டிக் கொடுக்கவும்.

சகல வியாதிக்கும் நொச்சியிலைச் சாற்றில் கொடுக்கவும்.

மூல வ்யாதிக்குப் பிரண்டைச் சாறும் தேனும் கூட்டிக் கொடுக்கவும்.

## பேதி ஜ்வராங்குச மாத்திரை

| | |
|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | 1 வராகனெடை |
| சுத்திசெய்த கெந்தகம் | 2 வராகனெடை |
| சுத்திசெய்த நாபி | 1 வராகனெடை |
| பொரித்த வெங்காரம் | 2 வராகனெடை |
| கடுக்காய்த்தோல் | 2 வராகனெடை |
| சுத்திசெய்த சிவனத வேர் | 2 வராகனெடை |
| சுக்கு | 2 வராகனெடை |
| திப்பிலி | 2 வராகனெடை |
| மிளகு | 2 வராகனெடை |
| சுத்திசெய்த நேர்வாளம் | 4 வராகனெடை |
| கடுகுரோகிணி | 3 வராகனெடை |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜ்ஜல் செய்து, பின்னர் மற்ற சரக்குகளைப் போட்டு, கடைச்சரக்குகளை, இடித்த சூரணத்தைப் போட்டுச்சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டு (கடுக்காய்ச் சூரணத்துடன் சோற்றுக் கற்றாழையை அரிந்து ஊறவைத்துப் பிசைந்து சாறு எடுத்துக் கொள்ளவும்.) சிறு பயறுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதற்கு அனுபானம்:

வாதச்சுரத்திற்கு இஞ்சிச் சாற்றில் திப்பிலியும் ஒரு உருண்டையும் கூட்டிக் கொடுக்கவும். நாலுதரம் பேதியாகிச் சுரம் விட்டுவிடும். பித்தச்சுரத்திற்கு கடுகு ரோகிணியும், திப்பிலியும் மண்ணுண்ணிப் பாம்பையும் (வகைக்கு 1 வராகனெடை எடுத்து ஒரு சட்டியிலிட்டு வறுத்துச் சூரணித்துக் கொண்டு, அதனுடன் ஒரு மாத்திரையும், முலைப்பால் சிறிது கூட்டிக் கொடுக்கவும். சிலத்தும ஜ்வரத்திற்கு ஆடாதோடைச் சாற்றில திப்பிலியும், மிளகும் கூட்டி மாத்திரையுடன் கொடுக்கவும். தீரும்.

தாக ஜ்வரத்திற்கு சர்க்கரையில் கொடுக்கச் சுரம் தீரும். அசீர்ண ஜ்வரம், விஷ ஜ்வரம், ஒரு நாள் விட்டு வருகிற ஜ்வரம், காய்ச்சல் விட்டு உடம்பு குளிர்ந்திருக்கிறதும், விடியற்காலை வந்து, அந்தி வேளையில் விடுகிற ஜ்வரமும், இராத்திரியில் வந்து விடியற்காலை விடுகிறதும், நாலு நாளையில் மாறல் சுரம் போன்றவைகளும் தீரும்.

## நீரடைப்பிற்கு மருந்து

கோவைத்தண்டு வெட்டி வந்து இடித்துப் பசுவின் பால் வார்த்துப் பிழிந்துகொண்டு, அதனுடன்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஓமம் |
| பெருங்காயம் | |

இதுவெல்லாம் ஒரு நிறையாக (வகைக்கு ஒரு வராகன்) நுணுக்கிச் சாறுகலந்த பாலில் கலந்து, 3 நாட்கள் கொடுக்கவும். சிறுநீர் வெளியாகி அடைப்புத் தீரும்.

## சிரஸிலேற்படும் 96 வகை சந்நிகளும் அவைகள் நிற்கும் நிலையும்

மன்னிய கண்ணில்ஏழு வளர்திருமுகத்தில் பத்து
எண்ணிய நாடியெட்டு இனியநாக்கடியில் ஆறும்
மின்னிய மிடறிலஞ்சு மிகுசுழிப் பிடரியேழு
துன்னிய கழுத்திலஞ்சு சூழுச்சி மண்டை யெட்டு
பல்லடி மூன்றுபத்து பருவிய செவியிலாறு
துய்யதோர் நெற்றிநாலு துவக்கறாச்சன்னி நிற்கும்.

பொருள்:

| | |
|---|---|
| கண்களில் சன்னி | 7 |
| முகத்தில் உண்டாகும் சன்னி | 10 |
| நாடியில் ஏற்படும் சன்னி | 8 |
| நாக்கினடியில் உண்டாவது | 6 |
| தொண்டையில் சன்னிகள் | 5 |
| பிடரியில் ஏற்படும் சன்னி | 7 |
| கழுத்திலுண்டாகும் சன்னி | 5 |
| உச்சிமண்டையில் வரும் சன்னி | 8 |
| பற்களுக்கடியில் ஏற்படும் சன்னி | 30 |
| காதுகளில் உண்டாகும் சன்னி | 6 |
| நெற்றியில் ஏற்படும் சன்னி | 4 |
| ஆக சன்னி பெயர்கள் | 96 |

கண்டத்திற்கு மேலுண்டாவன

### சன்னி 96ன் பெயர்கள்

உச்சியில் வாதம் ஒருதலைநோக்காடு
மொச்சியில் பொடுகு முளைத்தெழுபுத்து

சூரியவாதம் கழல் புழுவெட்டு
பூரிருள் கடிவிஷம் வசந்தருளோகம்
தலை அழிசூலை, அந்திரவாதம்
தலைச் சிரோணிதம் சக்கிரவாதம்
சனிமு கத்திடிமன் சீறியிரைத்தல்
அத்தினப் பத்திக்கோபம் சீருதியிரைத்தல்
சேற்பமாந் தலைவலி கபாலகுட்டம்
கபாலசுரோணிதம் கன்னல் செவிடு
நாசிக்கிரகத்தில் நரம்புகள் புடைத்தல்
சந்திரரோகம் சோதி வயிரணம்
துட்டரோகம் தும்மல் முகவலி
சத்தியாம் விக்கல் தலைசொரிந்திடுதல்
செவிகுடைதல் எழுச்சி திமிரம்
இரைத்தல் குமுறுதல் மதுநீர்ப்பாய்ச்சல்
... ... ... ... ... ... ... ... ... ... அறுகுதல்
முகரோகம் முசுகு ரோணிதல்
அன்னகோபம் அதிசிலை யெரிதல்
கண்ணோக்காடு கண் கரித்தல்
புகைச்சல்சுத்திமை தடித்தல்துர் மாங்கிஷம்
புணர்வலி பில்லம் புழுவுடனழிகண்
பில்லஞ்செவ்வரி பிரிதல் சொறிதல்
குத்துநீர் தும்மல் குவளைப்பிரிதல்
கெந்தவெட்டி கெந்த தாளிப்
பல்பற் குத்துப் பல்லுளைச்சல்
நாடிநடுங்குதல் நல்வாய் தடித்தல்
நவ்வளையற்புதம் பின்னே விளக்கப்
பக்கல்சுழட்டிப் படர்கண்ட மாலை
சுட்டுப்புத்து தூர்ந்திடு படுவன்

தெண்டியவற்புத மதிகண்ட மாலை
கன்னக் கிரந்தி கண்டெழுஞாயிறு
உத்தம விதரு உதடுவெடித்தல்
பத்துளவியாதி வகைபல வுடனே
செப்பவறியவள் செய்த படிதனை
ஒப்புடன் யாவும் உரைக்கலுற்றேனே.

### குன்மத்திற்குப் "பஞ்சலவண வசடகம்"

| | |
|---|---|
| இந்துப்பு | பொட்டிலுப்பு |
| வளையலுப்பு | கல்லுப்பு |
| சோத்துப்பு | |

இவைகள் வகைக்குப் பலம் ஒன்று

| | |
|---|---|
| ஓமம் | பலம் 1 |
| நவச்சாரம் | பலம் 1½ |
| சோஷ்டம் | பலம் 1¼ |
| திப்பிலி | பலம் ½ |
| திப்பிலிமூலம் | பலம் ½ |
| உள்ளிப்பூண்டு | பலம் 2 |
| பெருங்காயம் | பலம் 1½ |
| பனைவெல்லம் | பலம் 10 |

சரக்குகள், உப்புகள் இவைகளெல்லாவற்றையும் முதலில் உரலிலிட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, பின்னர் பனைவெல்லத்தைச் சேர்த்திடித்துத் தேத்தாம் கொட்டைப் பிரமாணம் உருட்டுப் பத்திரப் படுத்தவும். தினம் 2 நேரமும் 10 நாட்கள் உட்கொள்ளவும், குன்மம், வயிற்று நோய்கள் இவை தீரும்.

### சன்னிக்கு வாதத்திற்கு விஷ முஷ்டித் தைலம்

| | |
|---|---|
| எட்டிப்பழச்சாறு | படி 1 |
| வேலிப்பருத்திச்சாறு | படி 1 |

| | |
|---|---|
| ஆடாதோடைச்சாறு | படி 1 |
| எருக்கிலைச்சாறு | படி 1 |
| அஞ்சிலை நொச்சிச்சாறு | படி 1 |
| எலுமிச்சம்பழச்சாறு | படி 1 |
| தழுதாழைச்சாறு | படி 1 |
| சிறுமுடக்கொத்தான்சாறு | படி 1 |
| நல்லெண்ணெய் | படி 8 |

இவைகளையொன்று கலந்து

| | |
|---|---|
| எட்டிவிதை | பலம் 1 |
| உள்ளி | பலம் 2 |
| சுக்கு | பலம் ½ |
| மிளகு | பலம் ½ |
| திப்பிலி | பலம் ½ |
| ஓமம் | பலம் ½ |
| வசம்பு | பலம் ½ |
| கடுக்காய்த்தோல் | பலம் ½ |
| தான்றித்தோல் | பலம் ½ |
| கோஷ்டம் | பலம் ½ |
| முருங்கைப்பட்டை | பலம் ½ |

இவைகளையெல்லாம் இடித்துச் சூரணித்து, எட்டிப்பழச்சாறு விட்டரைத்துச் சாறுகலந்த எண்ணெயுடன் சேர்த்து, அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி இறக்கவும். இந்த எண்ணெயில் உள்ளுக்கு ஒரு வராகனெடை கொடுக்கவும். 5, 7 அல்லது 10 நாட்கள் வியாதிக்குத் தக்கபடி கொடுக்கவும். உடம்பில் தேய்த்துப் பிடிக்கவும். 80 வித வாத நோய்கள், சன்னி 13, சூலைக்கட்டு முதலான வியாதிகளெல்லாந் தீரும். கடும் பத்தியமாயிருக்கவும் உப்பு, புளி, கசப்புப் பதார்த்தங்கள் ஆகாது.

## விப்புருதி - எழு வியாதிக்கு நெய்

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | அமுக்கிராவேர் |
| மிளகறணைவேர் | செங்கதாரிவேர் |
| சிறுஉகாவேர் | எருக்கம்வேர் |
| அழிஞ்சில்வேர் | மாவிலங்கைவேர் |
| முருங்கைவேர் | அவுரிவேர் |
| நெருஞ்சில்வேர் | நீர்முள்ளிவேர் |
| நல்லவேளைவேர் | வசம்பு |
| பூண்டு | மிளகு |
| கருஞ்சீரகம் | கஸ்தூரிமஞ்சள் |

இவைகள் வகைக்குப் பலம் எடுத்து, கல்லுரலிலிட்டு இடித்துப் பசுவின் பால்விட்டரைத்து, இக்கல்கத்தை, பசுவின் நெய் ஒரு படியுடன் (8 ஆழாக்கு) கலந்து ஒருநாள் வைத்து, மறுநாள் அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் எரித்து, வடிக்கட்டிக் கொள்ளவும். உள்ளுக்குக் காசெடை தினம் 2 வேளை கொடுக்கவும். மேலுக்கும் பூசவும்.

**பத்தியம்**: நல்லெண்ணெய் உப்பு, புளிப்பு ஆகாது.

எழுவியாதி - எழுநாயறு, கழுத்தின் வலப்புறத்தில் ஏற்படும் கட்டி.

## சாதிலிங்கப் புட்டு

| | |
|---|---|
| சாதிலிங்கம் | விராகன் ஒன்று |
| கருங்குறுவையரிசி | படி 1 |
| புளி நரளைக்கிழங்கு | பலம் 10 |

கிழங்கும், ஊறவைத்த அரிசியையும் கல்லுரலிலிட்டிடித்துச் சாதிலிங்கம் பொடிபண்ணிக் கூடப் போட்டுக் காயவைத்துக் கொள்ளவும். நேரத்திற்கு ஒரு விளாங்காயத்தனை மாவெடுத்து, வேட்டில் வைத்துப் புட்டவியலாகஅவித்துக் கொடுக்கவும். 3

நாட்கள் ஆறுவேளைகள் கொடுக்கவும். கைப்பு, புளிப்புப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும். விப்புருதிக் கட்டிகள் தீரும்.

## விப்புருதிக்குக் கட்டு

நெற்பயிரைப் பிடுங்கிவந்து அடியையும், நுனியையும் அரிந்து விட்டு, அப்பயிரின் நாட்களை நன்றாக மடக்கி 3 நாட்கள் விப்புருதியின்மேல் கட்டவும். விப்புருதிக்கட்டிகள் அமுங்கும். கைகண்டது.

விப்புருதி - சீழுள்ள கட்டி. இம்மருந்தைப் பழுப்பதற்கு முன்னர் கட்டவும்.

## கெந்தகமெழுகு

நெல்லிக்காய் கெந்தகம் 1½ சேர் கொண்டுவந்து ஒரு அகலச் செப்புப் பாத்திரத்தில் போட்டு, அது முழுகும் அளவு மணித்தக்காளிச்சாறு, எருமைத் தக்காளிச்சாறும் சரிசமனாய்விட்டு 3 நாட்கள், சூரியபுடம் வைக்கவும். பின்புகெந்தகத்தையெடுத்துப் புதுப் பானையிலிட்டு இருவகைச் சாறுகளையும் முன்போல் விட்டு ஒரு நாள் வைக்கவும். பிறகு சாறுகலந்த கெந்தகத்தை ஒரு மண் குடுவையில் வைத்து, மணித்தக்காளியிலை 4 அல்லது 5 இலை கொண்டு மூடி, அதன் வாய்க்குத் தக்க அகல் கொண்டு மூடி, 7 சீலைமண் செய்து அடுப்பின் மேலேற்றி ஒரு சாமம் கமலாக்னியாக எரிக்கவும். ஆறவிட்டெடுத்துக் கத்தி கொண்டு வழித்துக் கொள்ளவும்.

அனுபானம்:

சுக்கு, திப்பிலி, மிளகு, சர்க்கரை ஒரு நிறையாய் வறுத்துப் பொடி செய்து மெழுகில் 1 விராகனெடையும் கூட்டி, இரு நேரமும்

கொடுக்கவும். ரோகத்திற்குத் தக்கபடி 3, 5, 7 அல்லது 10 தினங்கள் கொடுக்கவும். புளி, புகையிலை தவிர்க்கவும். உப்பை வறுத்துக் கூட்டவும். பசுவின் பால் நெய் கூட்டவும். கைகண்டது.

**குறிப்பு**: குஷ்டம், சொறிசிரங்கு போன்ற சர்ம வியாதிகள் தீரும். இரத்த சுத்தியுண்டாகும்.

## பவுத்திரத்திற்கு ம ருந்து

ஒருசேர் நெல்லிக்காய் கெந்தகம் எடுத்துப் பசுவின் நெய்யில் ஒரு தரம் விளக்கெண்ணெயில் ஒரு தரம் பசுவின் பாலில் ஒருதரம் வீதம் மூன்று தடவைகள் கெந்தகத்தை உருக்கிச் சாய்க்க சுத்தியாகும். இதனை 40 நாட்கள் நேரத்திற்கு 2 பணவெடை வீதம் உட்கொண்டு வரவும். வெள்ளாட்டுப் பாலும் சோறும் உண்ணவும்.

**பத்தியம்**: உப்பு, புளிப்பு, கைப்புப் பதார்த்தங்கள் ஒன்றுமாகாது. ஸ்திரீபோகம் தவிர்க்கவும்.

**குறிப்பு**: சர்மரோகங்கள், அரிப்பு, மேகநோய்கள் தீரும். பவுத்திரமுந்தீரும்.

## விஷகடிக்கு எண்ணெய்

| | |
|---|---|
| அகத்தியிலைச்சாறு | காட்டுசெம்பைச்சாறு |
| நல்லெண்ணெய் | எருக்கம்பால் |

இவைகளைச் சமனளவெடுத்து, ஒன்றுகலந்து அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டி, விஷகடிப் புண்களில் போடவும். அதன் பிறகு துவரெண்ணெய் பண்ணிப்போடவும்.

## விஷத்திற்கும், பேய்க்கலிக்கம்

காயங்காய மரிதாரம் கனிவாயிரத மிந்துப்பு
பேய்ப்பீர்க்கன் சத்துடனே பேணியரைத்து உண்டைசெய்து
மாயம்போல விஷம் தீண்டில் மலிவார் கண்ணிலிடுவீராய்
பேயும்போகும் பிச்சும்போகும் பேணியறிந்து சொன்னோமே!

(இ-ள்) பெருங்காயம் — சுத்திசெய்த தாளகம்
சுத்திசெய்த பாதரஸம் — இந்துப்பு

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பேய்ப்பீர்க்கன் சாறுவிட்டு நன்றாகவரைத்து மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

விஷம் தீண்டினவர்களுக்கும் உட்கொண்டோர்களுக்கும், பேய் பிடித்தவர்களுக்கும் கண்களில் இம்மாத்திரையைத் தண்ணீரிலுரைத்துக் கலிக்கமாகப் போடவும்.

## நாசிரோகங்களுக்குப் புகை

சுத்திலிங்கம் — மஞ்சள்
ஏலக்காய் — கோஷ்டம்

இவைகள் வராகனெடை ஒன்று எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடிசெய்துகொள்ளவும். வேண்டும்போது சிறிது தூளெடுத்துக் காகிதத்தில் வைத்துத் திரிபோல் சுருட்டிக்கொளுத்தி, அணைத்துப் புகையை முகரவும். 4நாட்களுக்குப் பிடிக்கவும்.

முருங்கைக்காய், துவரை, முள்ளிக்கீரை, முளைக்கீரைத்தண்டு, முருங்கையிலை இவைகள் சேர்ந்த ஆகாரம் சாப்பிட்ட பின்னர், புகைபிடிக்கவும்.

பீனிஸம், நாசிநீர்ப்பாய்ச்சல், தும்மல், மூச்சுத்திணறல் முதலான நோய்கள் தீரும்.

## சுரத்திற்கு மேகநாதி உருண்டை

ஊமத்தைப்பிஞ்சு கொண்டுவந்து, சித்தாமணக்கிலையில் சுற்றி, உமிக்காந்தலில் புதைத்து வேகவைக்கவும். வெந்தபின் இதனையெடுத்துச் சிறுகீரைச்சாறு வார்த்து 4 சாமங்கள் அரைக்கவும். உளுந்துப்பிரமாணம் உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது சிறுகீரைவேர் ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து வெந்நீரில் கரைத்து, நன்றாகத் தெளிந்த பின்னர் வெந்நீரை இறுத்து ஒரு உருண்டை உரைத்துக் கொடுக்கவும். சுரம் நிற்கும். நன்கு பேதியாகும்.

## சந்நிக்கு கலிக்கம்

பச்சைப்பாம்பு உயிரோடே பிடித்துவந்து, அதன் தலையை நறுக்கி, அ தற்குச் சமனெடை புடைத்தமிளகு நிறுத்துக்கொண்டு, கல்வத்திலிட்டு, எலுமிச்சம்பழச்சாறு வார்த்து, 3 ஜாமங்களரைத்து, உருண்டைபண்ணி நிழலில் உலர்த்தி எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கண்களில் இடவும். சன்னிகள் தீரும். மூச்சு நின்றவனும் பிழைப்பான்.

## குரல் கம்மலுக்குச் "சீத கஷாயம்"

தேள் கொடுக்குயிலை, ஈரவெங்காயம் இரண்டும் சரி சமமாக எடுத்து இடித்து 2 படி தண்ணீர் விட்டு வெய்யிலில்வைத்து நன்றாக ஊறியபின் 3 நாட்கள் தினம் 3 வேளை கொடுக்கவும்.

பத்தியமாக இருக்கவும். குளிர்ச்சியான பதார்த்தங்களையும், நீருள்ள பண்டங்களையும் நீக்கவும். உள்வெட்கை, குரல்கம்மல் முதலானவை தீரும்.

### சயம், காசம், இருமலுக்குக் "கோரோசனை எண்ணெய்"

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | படி 2 |
| பொன்னாங்காணிச்சாறு | படி 1 |
| தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு | படி 1 |
| நிலப்பனங்கிழங்குச்சாறு | படி 1 |
| குத்துமல்லிகைச்சாறு | படி 1 |
| கொத்தான்சாறு | படி 1 |
| தேள்கொடுக்குச்சாறு | படி 1 |
| செப்புநெருஞ்சிச்சாறு | படி 1 |
| இளநீர் | படி 1 |
| பசுவின் பால் | படி 1 |
| வெங்காயச்சாறு | படி 1 |

இவைகளை யொன்று கலந்து,

| | | | |
|---|---|---|---|
| சாதிக்காய் | பலம் 1/4 | மாசிக்காய் | பலம் 1/4 |
| ஏலக்காய் | பலம் 1/4 | இலவங்கப்பத்திரி | பலம் 1/4 |
| கிராம்பு | பலம் 1/4 | சாதிப்பத்திரி | பலம் 1/4 |
| தாளீசபத்திரி | பலம் 1/4 | சடாமாஞ்சில் | பலம் 1/4 |
| குங்குமப்பூ | பலம் 1/4 | கோரோசனை | பலம் 1/4 |
| வெட்டிவேர் | பலம் 1/8 | அதிமதுரம் | பலம் 3/4 |
| இலாம்பிச்சை | பலம் 1/8 | செவ்வல்லிக்கொடி | பலம் 3/4 |
| வாய்விடங்கம் | பலம் 1/8 | சித்தரத்தை | பலம் 3/4 |
| வால்மிளகு | பலம் 1/8 | கோஷ்டம் | பலம் 3/4 |
| வலம்புரிக்காய் | பலம் 1/8 | | |

இக்கடைச்சரக்குகளுடன்,

| | |
|---|---|
| புளிநரளைக்கிழங்கு | குத்துமல்லிகைவேர் |
| நன்னாரிவேர் | அமுக்கிராவேர் |
| சீந்தில்கொடி | இண்டம்வேர் |
| செங்கதாரிவேர் | அப்பக்கோவைக்கிழங்கு |
| வாழைக்கிழங்கு | மருளங்கிழங்கு |
| முதியார்கூந்தல்வேர் | முள்ளிவேர் |
| செம்முள்ளிவேர் | மஞ்சிட்டிக்கிழங்கு |

இவைகள் வகைக்கு 8 பலம்

| | |
|---|---|
| ஒதியம்பட்டை | கருவேலம்பட்டை |
| மருதம்பட்டை | இலந்தைப்பட்டை |
| அத்திப்பட்டை | வன்னிமரப்பட்டை |
| கிளுவைப்பட்டை | தாமரைவளையம் |

இவைகளையெல்லாம் பலம் ½ எடுத்து எல்லாவற்றையும் இடித்து 8 படி தண்ணீர்விட்டு2 படியாக வற்றவைத்து இறுந்துக் கொள்ளவும். பின்னர் கடைச்சரக்குகளை சாறுவிட்டு அரைத்து விழுதாக்கி எண்ணெயில் போட்டுக்குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் கஷாயத்தையும் விட்டுப் பதத்தில் வடிக்கவும்

இது ஒரு துட்டளவு எண்ணெய் காலையில் கொடுக்கவும். கத்தாழைச்சோறு, கடுகரோகிணி கூட்டவும்..

**பத்தியம்**: கசப்பு, புளிப்புப் பதார்த்தங்களை நீக்கவும்.

**குறிப்பு**: குங்குமப்பூ, கோரோசனை இவ்விரண்டையும் கடைசியில் எண்ணெய் காய்ச்சியபின் ஆறவைத்து, நுணுக்கிப் போடவும்.

**சன்னி 13க்கும், 8 வித இசிவிற்கும் "சுடர் தைலம்"**

| | |
|---|---|
| அரிதாரம் | விராகன் 5 |
| மனோசிலை | விராகன் 5 |
| நெல்லிக்காயக்கெந்தகம் | விராகன் 5 |

| | |
|---|---|
| சாதிலிங்கம் | விராகன் 5 |
| மிருதார்சிங்கி | விராகன் 5 |

இந்த 5 மருந்துகளையும் தனித்தனி நுணுக்கி வைத்துக்கொண்டு, ஒரு வெள்ளைத் துணியைச் சதுரமாகக் கிழித்து வேப்பெண்ணெயில் தோய்த்து விரித்து இந்த சீலையில் மேற்சொன்ன மருந்துகளைப் பரப்பி, நூல்கொண்டு தைத்து விளக்கேற்றிக் கொளுத்தி ஒருபடி வேப்பெண்ணெயையும் வார்த்துச் சுடர் தைலமாக எடுத்துக் கொள்ளவும். நேரத்திற்கு 1 கரண்டி வீதம் கொடுத்து வரவும். சன்னிகள், இசிவுகள் நிற்கும். மேலுக்கும் உபயோகிக்கவும்.

## இசிவிற்கு "ஒத்தடம்"

கார்த்திகைக்கிழங்கு (கலப்பைக்கிழங்கு) கொண்டு வந்து, இடித்து வேப்பெண்ணெய் விட்டு, ஒரு வாணலியில் வறுத்துப் பொட்டணம் கட்டி ஒத்தடம் கொடுக்கவும். இசிவு நிற்கும். பல் கிட்டியதும் நிற்கும். 3 நாட்கள் இவ்வாறு ஒத்தடமிடவும்.

## விப்புருதிக்குக் "கெந்தக எண்ணெய்"

நெல்லிக்காய் கெந்தகம் 1 பலம் அரைத்துச் சத்திச் சாரணை சமூலமும் கொண்டுவந்து இடித்துச் சாறுபிழிந்து 1 படி எடுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| சதுரக்கள்ளிப்பால் | 1 உழக்கு |
| ஆமணக்கெண்ணெய் | 1 படி |
| வேப்பெண்ணெய் | 1 படி |

இவற்றை ஒன்று கலந்து மெழுகு பதத்தில் வடிக்கவும்.

ஒரு துட்டெடை வீதம் ஏழு நாட்கள் அந்திசந்தி கொடுக்கவும். விப்புருதிப் புரையிலும் விட்டு ஊதவும்.

**பத்தியம்**: ஒரு படி உப்பிற்கு ஒரு படி பசுவின் பால் விட்டு வறுத்து வைத்துக்கொண்டு,இதனைக் கஞ்சிக்கு உபயோகிக்கவும். துவரம்பருப்பு, முளைக்கீரை, முருங்கைப் பிஞ்சு கூட்டிக் கொள்ளவும்.

புற்று, அரையாப்பு, கன்னப்புற்று, ஓடு விப்புருதி எல்லாந் தீரும்.

**சுழி கணத்திற்குக் "கோரோசனை எண்ணெய்."**

| | |
|---|---|
| வசம்பு | வராகன் 6 |
| கடுகுரோகிணி | வராகன் 2 |
| அமுக்கிராக்கிழங்கு | வராகன் 5 |
| சித்தரத்தை | வராகன் 5 |
| கோரோசனை | வராகன் 2 |
| பூண்டு | வராகன் 6 |
| ஓமம் | வராகன் 5 |
| சிவதைவேர் | வராகன் 5 |
| கோஷ்டம் | வராகன் 5 |

இவைகளுடன்

| | |
|---|---|
| சிறுபுள்ளடி | பலம் 1/2 |
| காட்டெருமைப்பால் (கூகைநீர்) | கழஞ்சு 2 |
| சித்தாமுட்டி | பேராமுட்டி |
| கண்டங்கத்திரி | வீழிவேர் |
| செருப்படிவேர் | தாமரைவளையம் |
| சங்கன்வேர் | சங்கங்குப்பிவேர் |
| மிளகு | |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துத் துண்டுகளாக நறுக்கி ஒரு சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்துச் சூரணித்து ஆமணக்கெண்ணெய் படி 1 விட்டு, ஒன்று கலந்து

மணித்தக்காளி இலை
கிலுகிலுப்பையிலை
கொழுஞ்சியிலை
வேலிப்பருத்தியிலை
சிறுபுள்ளடியிலை
பிரமிப்பூண்டு
பொடுதலை
உகாய் இலை
சங்கிலை

இவைகளை வகைக்கு 1 பிடி போட்டுப் பதத்தில் எண்ணெய் வடித்து இறக்கவும்.

காசளவு எண்ணெயும் காசளவு முலைப்பாலும் சேர்த்துக் குலுக்கிக் கொடுக்கவும்.

ஊதுமாந்தம் (வீக்கம் அதிகமாக உள்ள) மாந்தம் தீரும்.

சுழிகணை ஏற்பட்டால் ஆமணக்கெண்ணெய்க்குப் பதிலாக வேப்பெண்ணெயில் எரிக்கவும்.

## பிள்ளைப்பிணிக் கஷாயம்

வட்டத்திருப்பி வேர்
பாவட்டைவேர்
பாவட்டைக்கொழுந்து
ஓதியங்கொழுந்து
நாவல்துளிர்
ஆலம்முகிள்(மொட்டு)
அகத்திப்பழுப்பு
வட்டத்திருப்பிக்கொழுந்து

இம்மருந்துகள் வகைக்கு 1 பிடி எடுத்து ஒரு சட்டியைக் காய்வைத்து அதிலிட்டு வதக்கி, ஒரு படி தண்ணீர்விட்டுக் கால் படியாக வற்ற வைத்து இறுத்துக் கொள்ளவும். இதனுடன் அதிவிடயம் வெதுப்பிப் பொடி செய்து 3 நேரமும் கொடுக்கவும். குழந்தைகளுக்கு ஏற்படும் கழிச்சல், கிராணி, செரியாமை, அஜீர்ணபேதி இவைகள் தீரும்

## மாந்தத்திற்கு எண்ணெய்

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| சாதிக்காய் | செண்பகப்பூ |
| அதிமதுரம் | கருஞ்சீரகம் |
| சித்தரத்தை | திப்பிலி |
| கடுக்காய்த்தூள் | பூண்டு |
| வசம்பு | தான்றித்தோல் |

இவைகளை (வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து, ஆமணக்கெண்ணெய் 1 சேர் விட்டுச் சிவக்கக் காய்ச்சி, இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

அனுபானம்:

| | |
|---|---|
| கணப்பூண்டு | அப்பக்கோவைக்கிழங்கு |
| சித்தாமுட்டி | பேராமுட்டி |
| காட்டுமல்லிகையிலை | வரட்பூலாக்கொழுந்து |
| அம்மான் பச்சரிசி | நரிப்பயறு |

இவைகளை நசுக்கிக் கஷாயம் வைத்து மேற்படி எண்ணெய் ஒரு ஸ்பூன் விட்டு உட்கொள்ளவும்.

மாந்தக்குறிகள்:

நெஞ்சில், மார்பில், கோழைக்கட்டு, மூச்சுவிடத் திணறுதல், அடிக்கடி பேதி, வாந்தி இவைகளுடன் மயங்கிக் கிடக்கும். குழந்தைகளுக்கு 1 வயது முதல் 3 வயது வரை வரும் நோய்.

## மாந்த வலிப்பிற்கு

| | |
|---|---|
| பேய்மிரட்டியிலை | பீர்க்கம் இலை |
| அவரையிலை | அத்தியிலை |
| பூண்டு | வசம்பு |

வைகளை நசுக்கிக் கஷாயம் வைத்து இறுத்து உள்ளுக்கும் காடுத்து மேலுக்கும் துவளையிடவும்.

வலிப்புடன் கூடிய மாந்த நோய் தீரும்.

**கழிச்சலுக்கு கருக்குக் கஷாயம்**

| | |
|---|---|
| ஆலாட்டுப் புழுங்கலரிசி (நெல்வகை) | வசம்பு |
| சிறுபுள்ளடி | வில்வஇலை |
| பழம்பாசி | முடக்கொத்தான் இலை |
| இண்டன் இலை | கருவேலங்கொழுந்து |
| விடத்தேரி இலை | குட்டிவிளா இலை |
| கேழ்வரகு | கருவேப்பிலை ஈர்க்கு |
| தகரைவேர் | சுக்கு |
| ஓமம் | |

இவைகளை சரி எடையாகப் போட்டுச் சட்டியிலிட்டு நன்றாகக் கறுக்கித் தண்ணீர்விட்டுக் குடிநீர் வைத்துக் கொடுக்கவும்.

எவ்வித வயிற்றுக் கழிச்சலும் நிற்கும்.

**மாந்தத்திற்குக் "கத்தாழை யெண்ணெய்"**

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | படி 1 |
| கற்றாழஞ்சோற்றில் கடுக்காய்த்தூள் போட்டுப் | |
| பிசறி ஊறவைத்தெடுத்த சாறு | படி½ |
| வட்டத்திருப்பி வேர் | துண்டு 2 |
| எலுமிச்சம்பழச்சாறு | படி ¼ |
| எலுமிச்சை வேர் | பலம் ¼ |
| இலவம்பட்டை | பலம் 1 |

| | |
|---|---|
| கோஷ்டம் | சீரகம் |
| வெந்தயம் | கருஞ்சீரகம் |
| வெளிச்சைப்பிசினி | கொத்தமல்லிவிதை |
| கடுகுரோகிணி | திப்பிலி |
| நன்னாரி வேர் | திப்பிலிமூலம் |
| அதிமதுரம் | |

இவைகளைக் கால் பலம் வீதமெடுத்துச் சாறுவிட்டரைத்து, எண்ணெயுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதமாய் எரித்து, வடிகட்டிப் பத்திரப்படுத்தவும். இதனை 5 மாதக் குழந்தைகளுக்கு 5 நாட்களும், 7 மாதக் குழந்தைகளுக்கு 7 நாட்களும், 9 மாதக் குழந்தைகளுக்கு 9 நாட்களும் 1 கரண்டி எண்ணெய் கொடுக்கவேண்டியது.

**தாய்க்குப் பத்தியம்**: உப்புப் புளி ஆகாது. மறு பத்தியத்தில் உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ளவும்.

### வயிறு பேதியாக "இலுப்பைப் பட்டை வடகம்"

| | |
|---|---|
| இலுப்பைப்பட்டை | பலம் 1 |
| கடுகுரோகிணி | பலம் 1 |
| சுத்திசெய்த நேர்வாளம் | பலம் 1 |

இவைகளைச் சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டரைத்துச் சுண்டைக்காயளவு உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

1 உருண்டை வெந்நீரில் கொடுக்க நன்றாக வயிறு கழியும்.

## மாந்தம், காய்ச்சல், அஜீர்ணத்திற்கு "வெங்காய எண்ணெய்"

| | |
|---|---|
| விளக்கெண்ணெய் | படி 1/4 |
| ஈரவெங்காயச்சாறு | படி 1/4 |

இவ்விரண்டையும் கலந்து, அடுப்பின் மேலேற்றி நீர்வற்றக் காய்ச்சி, இறக்குந் தருணத்தில் குரிஞ்சாயிலை ஒருபிடி போட்டு முறுகக் காய்ச்சி (ஒரு முட்டைக் கரண்டியளவு) உட்கொள்ளக் கொடுக்கவும். குழந்தைகளின் மாந்தம், காய்ச்சல், மலச்சிக்கல், அசீர்ணம் இவை தீரும்.

இதற்குக் குடிநீர்:

| | |
|---|---|
| அதிமதுரம் | விராகன் 1 |
| சாறணைவேர் | விராகன் 1 |

எடுத்து நறுக்கிப்போட்டு நாழித்தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## கண்ணோய், அமரத்திற்கு மருந்து

| | |
|---|---|
| பொரித்த துத்தம் | விராகன் 5 |
| பொரித்த துருசு | விராகன் 5 |

இரண்டும் பொடி செய்து, கலத்தின் புறத்திலே வைத்து;

| | |
|---|---|
| மணத்தக்காளி இலை | கையாந்தகரை இலை |
| முடக்கொற்றான் இலை | வேலிப்பருத்தி இலை |
| சாறணை இலை | |

இவைகளை வகைக்கு ஒரு பிடி எடுத்துச் சிற்றாமணக்கம் இலையிலே சுருட்டி அனலிலே வெதுப்புக் கசக்கிச் சாறு எடுத்து, அந்தச் சாற்றினால் கலத்தின் புறத்திலுள்ள மருந்தில் விட்டு வேறொரு செப்புக் காசிச் செம்பினால் நன்றாக ஒரு நாள் முழுதும்

அரைத்து, ஒரு பலம் பசுவின் வெண்ணெய் சேர்த்து, அஞ்சனமாகச் செய்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தவும். 1 மாதம் சென்றபின் ஒரு பயறளவு கண்களிலிடவும். கண்வலி, கண்சிவப்பு (அமரம் - கண் புகைச்சல்) முதலானவை தீரும்.

### மாந்தம், கணச்சூட்டுக்கு எண்ணெய்

| | |
|---|---|
| நீர்ப்பூலா வேர் | நரிவிளாவேர் |
| குட்டிவிளாவேர் | சிறுகீரைவேர் |
| பழம்பாசிவேர் | முசுமுசுக்கைவேர் |
| வட்டக்கிலுகிலுப்பைவேர் | நரிப்பயற்தம்வேர் |
| சவுரிவேர்(கொத்தான்) | கணப்பூண்டு |
| ஈரவெங்காயம் | சீரகம் |
| கருஞ்சீரகம் | கஸ்தூரிமஞ்சள் |
| சித்தரத்தை | இலவங்கம்பட்டை |
| ஏலரிசி | கிராம்பு |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை எடுத்து, நன்றாக இடித்து ஆமணக்கெண்ணெய் ஒரு சேருடன் சேர்த்து எரித்து வைத்துக் கொண்டு தினம் 1 கரண்டி வீதம் கொடுக்கவும்.

இதற்குக் கஷாயம்:

| | |
|---|---|
| வரப்பூலாவேர் | சுக்கு |
| வெந்தயம் | ஓமம் |
| பூண்டு | வசம்பு |

வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து வைத்துக்கொண்டு இரண்டு படி தண்ணீர் விட்டு 7 படியாகச் சுண்ட வைத்து 3 வேளை கொடுக்கவும். மாந்தம், கணைச்சூடு (தேக காங்கை) முதலியன தீரும்.

## தலைவாதம், தலைவலிக்கு "ப்ருங்கராஜ தைலம்"

கரிசலாங்கண்ணிச்சாறு
குழிமீட்டான் (நத்தைச்சூரி)ச் சாறு
நொச்சியிலைச்சாறு

இவைகளை வகைக்கு ஒரு படி எடுத்து ஒன்று கலந்து, இவற்றுடன்

| | |
|---|---|
| சித்தாமுட்டிவேர் | பெருமருந்து வேர் |
| விலாமிச்சம்வேர் | வாகைவேர் |
| வெட்டிவேர் | கோரைக்கிழங்கு |

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து மேற்படி சாறு விட்டு அரைத்து,

| | |
|---|---|
| நல்லெண்ணெய்ப | படி |
| பசுவின் பால் | 2 படியுடன் |

சேர்த்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதத்தில் வடித்து இறக்கிக்கொள்ளவும். இத்தைலத்தைத் தினம் தலைக்குத் தேய்த்துவரத் தீராத்தலைவலி நிற்கும். வாத நோய்களுக்கு நல்லது.

## முகமும், தலையும், வீங்கின கரப்பான் நோய்க்கு மருந்து

| | |
|---|---|
| இண்டம் இலைச்சாறு | கோழியாவாரையிலைச்சாறு |
| குட்டித்தக்காளிச்சாறு | சின்னியிலைச்சாறு |
| தழுதாழைச்சாறு | கழுதைலெத்திச்சாறு |
| கற்றாழைச்சாறு | ஈரவெங்காயச்சாறு |

இவைகளை வகைக்கு ஒரு நாழி வீதம் எடுத்து ஒன்று கலந்து

| | | |
|---|---|---|
| கடுக்காய் | 10 | வெளிச்சைப்பிசின்1 வராகனெடை |
| கருஞ்சீரகம் 1 வராகன் | மிளகு | 1 வராகனெடை |

இவைகளை இடித்து

நல்லெண்ணெய் 1 நாழி கூட்டி, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து, உள்ளுக்கும் கொடுத்து, மேலும் பூசவும். வீங்கு கரப்பான் தீரும்.

## விஷகடிக்கு மருந்து

திமுத்துமகிழ் தன்னுட னழிஞ்சில் நேர்வாளமும்
வளமான வெண்குன்றியும்
வகைநாலு வித்துடன் பொன்மெழுகு தில்லையின்
பாலுமணி யுழக்குகௌரி
முத்தவரி தாரமுடன் நிர்விஷம் நவச்சாரம்
திரிகடுகு முத்தபச்சை
நாவியுடன் மனோசிலை சாதிலிங் கமுடன்
உயர்ந்தசீ னாக்காரமும்
ஒத்த சமபாகமாய் வங்காளப் பச்சையும்
உகந்தகெந் தகமும்தாரம்
ஒன்று மூன்றாயெலு மிச்சம்பழச் சாற்றில்
ஓரைந்து நாளரைத்து
பத்தும்வெயி லதனிலே வாய்குவிந்த பீங்கானில்
வளமாக வேயடைத்து
வருந்துபதி னெட்டுவிஷ மும்தலை மேல்கொண்டு
மயக்கமுட பிரமையும்
உத்திடும் நாளிலே நித்தமொரு பணவெடை
வெற்றிலையி லேதின்னவே
நீங்காத செவ்வட்டைக் கடியுடன் குட்டமும்
நில்லாது வோடிவிடுமே
முத்துவிரியன்கடி யரணைமூஞ் சோறுபேய்
நாய்மூன்று விப்புருதியுடன்
எலிகடிகள் சகலவிஷ மெல்லாமு றிந்தோடும்
... ... ... ...
கொத்தியே முதலைகடி யாடுமகா தேவனார்
குருபரரு ரைத்தபடியே

(இ-ள்.) மகிழம்வித்து அழிஞ்சில்விதை
நேர்வாளப்பருப்பு வெண்குன்றிவிதை
பொன்மெழுகு

இவைகளை வகைக்கு 1 வராகன் எடுத்துக்கொண்டு தில்லம் பால் உழக்குக் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் இதனுடன்

| | |
|---|---|
| கௌரீபாஷாணம் | தாளகம் |
| நிர்விஷம் | நவச்சாரம் |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | வச்சநாபி |
| மனோசிலை | சாதிலிங்கம |
| சீனாக்காரம் | வங்காளப்பச்சை |
| கெந்தகம் | வெள்ளிப்பொடி |

இவைகளையும் வகைக்கு 1 வராகன் கூட்டித்தூள் செய்து தினம் 3 எலுமிச்சம்பழங்கள் வீதம் எடுத்துச் சாறுபிழிந்து கொண்டு, எல்லா மருந்துகளையும் ஒன்று சேர்த்து 5நாட்கள் அரைத்தெடுத்துக் கொள்ளவும். இவ்விழுதை ஒரு வாய்குவிந்த பீங்கானில் அடைத்துக்கொண்டு கடும் வெய்யிலிலே வைக்கவும்.மெழுகுபதமாகும்.

இதனை ஒரு பணவெடையெடுத்து (3 குன்றியளவு) வெத்திலையிலே வைத்து உட்கொள்ளவும்.

18 வித தாவர விஷங்களையுமுட்கொண்டு மயங்கி விழுந்தவர்களுக்கும், செவ்வட்டைக்கடியினால் அவஸ்தைப் படுபவனுக்கும், குஷ்டரோகிகளுக்கும், விப்புருதி ரோகிகளுக்கும் கொடுக்கவும்.

இதையன்றி முத்துவிரியன் பாம்புக்கடி, அரணை, மூஞ்சூறு, பேய்நாய்கடி, எலிகடி, முதலைகடி முதலான பலவித விஷஜெந்துக்களின் கடிகளுக்கும் இதனை உபயோகிக்கவும்.

## குன்மத்திற்கும், சயத்திற்கும் "பேரண்ட பற்பம்"

நாய் மண்டையோட்டைப் பொடித்துக் கல்வத்தில் இட்டுப் பசுமஞ்சள் சாறு விட்டரைத்து, வில்லைகளாகத் தட்டிக்காய வைத்துப் புடம் போடவும். இந்த பற்பத்தில் நேரத்திற்கு ஒரு வராகனெடை வீதம் பசுமஞ்சள் சாற்றிலேயே கொடுக்கவும். 3 நாட்கள் கொடுக்கவும்.

குன்மம் க்ஷயரோகங்கள் தீரும். கசப்புப் பதார்த்தங்களையும் புளிப்புள்ளபதார்த்தங்களையும் நீக்கிப் பத்தியம் இருக்கவும்.

## வெள்ளோக் காளத்திற்கு மருந்து

| | |
|---|---|
| இந்துப்பு | கடுக்காய்த்தோல் |
| நெல்லிமுள்ளி | மிளகு |
| சுக்கு | கடுகு |

இவைகளைச் சமனெடுத்து, இடித்துச் சூரணித்துக்கொள்ளவும்.

ஒரு மண் ஓட்டிலே புளியஞ்சிராய் கொண்டுவந்து, தணலாக்கி அதன் நடுவிலே முன்சொன்ன சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போடக் கருகிவிடும். பின்னர் நெருப்பைத் தள்ளிவிட்டு மருந்தையெடுத்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ளவும். இதனைத்தேனில் குழைத்து விழுங்கவும். இதற்குமேல் கொடுக்கும் மருந்தாவது.

ஒருபிடி வெற்றிலையை நறுக்கி எருமைமோர் ½ படியில் பிசைந்து, பிழிந்து, சர்க்கரை கூட்டிக்கொடுக்கவும்.

வெள்ளோக்காளம், விக்கல், சத்தி (வாந்தி) முதலான நோய்கள் தீரும்.

## விக்கலுக்குப் பகை

உலர்ந்த நண்டு, கச்சைக்கருவாடு, மயிலிறகு சுட்ட சாம்பல் இவைகளை நெருப்பில் தூவிப்புகையை முகர விக்கல் தீரும்.

2. மனோசிலை — திப்பிலி
மிளகு — குன்றிவேர் (அதிமதுரம்)
நெற்பொரி

இவைகளை (வகைக்கு 1 வராகன் எடுத்து) பொடிசெய்து விளா இலைச்சாற்றிலே கூட்டி அரைத்துச் சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகளாக உருட்டிக் கொள்ளவும். வேண்டும்போது 1 உருண்டை தேனில் குழைத்து விழுங்கவும். விக்கல் தீரும்.

3. குங்கிலியம் — சுக்கு
மிளகு — வரளிமஞ்சள்

இவைகளைச் சரியெடை எடுத்துப் பொடிசெய்து ஒரு சீலையில் ஒரே சீராகப் பரப்பித் திரியாகச்செய்து, விளக்கில் கொளுத்தி, அணைத்து விட்டுப் புகையைப் பிடிக்கவும். விக்கல் தீரும்.

## புண்ணுக்குப் புகை மருந்து

| | |
|---|---|
| ரசம் | 4 வராகனெடை |
| காரீயம் | 3 வராகனெடை |
| வெள்ளைப்பாஷாணம் | 1¼ வராகனெடை |
| துரிசு | 1¼ வராகனெடை |
| கடுகு | 1½ வராகனெடை |
| மிளகு | 1½ வராகனெடை |
| கருங்குங்கிலியம் | 1½ வராகனெடை |
| எருக்கங்கரி | 1½ வராகனெடை |
| அரிதாரம் | 2 வராகனெடை |

முதலில் காரீயத்தை உருக்கி, இரஸத்தையிட்டுத் தொந்தித்துத் தரையிலே விடவும். ஆறியவுடன் மற்ற மருந்துகளைச் சட்டியிலிட்டு வறுத்து நுணுக்கிக் குழியம்மியில் (கல்வத்தில்) போட்டுப் பருத்தியிலைச் சாறுவிட்டு நன்றாக மசிய அரைத்துக்கொள்ளவும். பின்னர் இதனைப்பாக்களவுள்ளபடி 9 உருண்டைகளாக உருட்டிக் காயவைத்துக் கொள்ளவும்.

அழுகிச்சொட்டும் தோல்வியாதி உள்ளவர்களுக்கும், உடம்பு முழுவதும் புண் உள்ளவர்களுக்கும் புளியஞ்சிராய் தணலை ஒரு ஓட்டிலே வாரி எடுத்துக்கொண்டு, நேரத்திற்கு ஒரு உருண்டை தணலிலே போட்டுப் புகை எழும்பும் போது ஒரு போர்வையினால் சிரஸைத்தவிர்த்து, உடம்பு முழுவதும் போற்றிக்கொள்ளவும். புகை உடம்பில் நன்கு பட வேண்டும். மறுநாளும் ஒரு உருண்டை புகைக்கவும். பின்னர் ஏழு நாட்கள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். தினம் ஒரு வேளை கழுத்தளவு தண்ணீரிலே இருக்கவும்.

**பத்தியம்**: பாலும் சோறும் மாத்திரமே உண்ணவும். வாய் கட்டினால் வாய்வேக்காளம் ஏற்பட்டால் கருவேலம் பட்டை, மகிழம்பட்டை இரண்டையும் நசுக்கிக் கஷாயம் வைத்துக் கொப்பளிக்கவும்.

நல்லெண்ணெய், கத்தரிக்காய், பாகற்காய், மூன்றும் ஒரு மாதத்திற்கு ஆகாது. புண்கள் ஆறும்.

குறிப்பு: சரபேந்திர வைத்திய முறைகள் (விரணரோக சிகித்ஸை) 81 வது முறையைப்பார்க்கவும்.

## வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | பலம் ½ | நற்சீரகம் | பலம் ¼ |
| திப்பிலி | பலம் ½ | கிராம்பு | பலம் ¼ |

| | | | |
|---|---|---|---|
| தி | பலம் ½ | நாரத்தைவேர் | பலம் ¼ |
| சபத்திரி | பலம் ½ | எலுமிச்சம்வேர் | பலம் ¼ |
| வம் | பலம் ½ | நன்னாரிவேர் | பலம் ¼ |
| ர்க்கரை | பலம் 2 | | |

இவற்றையெல்லாம் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து, இளம் வறுவலாக வறுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். பின்னர், ஒரு சட்டியில் தண்ணீர் சேர்த்த பசுவின் பால் விட்டு, வேடுகட்டி, அதன் மேல் மேற்படி சூரணத்தை வைத்து, மேலே வேறுசட்டி கொண்டு மூடிப் புட்டவியலாக அவித்து வைத்துக்கொண்டு நேரத்திற்கு ஒரு கொட்டைப்பாக்களவு கொடுக்கவும். இப்படி 3 நாட்கள் அல்லது 5 நாட்கள் கொடுக்கவும். வயறுகடுப்புத் தீரும்.

**பத்தியம்:** புளி, புகையிலை தவிர்க்கவும்.

### காது வலிக்கு, சீழ் வருதலுக்கு மருந்து

நொச்சியிலைச்சாறு, வெள்ளைக்கத்திரி இலை இவ்விரண்டையும் சரியெடுத்து, இடித்த சாற்றை 3 நாட்கள் காதில் பிழியவும். சீழ், காதுவலி முதலானவை நிற்கும்.

### புண்கள்,சொறி இவற்றிற்கு முழுக எண்ணெய்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | படி 1 |
| கெந்தகம் | பலம் 1 |
| சேங்கொட்டை | பலம் 2½ |
| அதிமதுரம் | பலம் 1 |

| | |
|---|---|
| மனோசிலை | விராகன் 2 |

இவைகளைப் பொடி செய்து, எண்ணெயில் போட்டுப் பதமாகக் கொதிக்கவைத்து, 3 நாள் உடம்பில் தேய்த்து,ஊறவைத்து அரப்பு தேய்த்துக் குளிக்கவும். தயிர் சாதம் சாப்பிடவும்.

## சுவாச காசம், உளமாந்தை, இரத்த விப்புருதிக்கு மருந்து - நெய்

| | |
|---|---|
| கொடுவேலி வேர் | முக்காவேளை வேர் |
| வட்டத்திருப்பிவேர் | சாரணைவேர் |
| புங்கம்வேர் | |

இவை ஒரொன்றும் வகைக்கு 5 வராகனெடை வீதமெடுத்துப் பொடிசெய்து எருமை மோரில் பிசறி, 3 நாட்கள் வெய்யிலில் வைக்கவும். பின்னர் நெய் உழக்கு நல்லெண்ணெய் உழக்கு விட்டுக் கடுகு பதமாக இறுகவைத்து இறக்கவும். தினம் ஒரு குத்தளவெடுத்து உட்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**: காசச்சுவாசம், உளமாந்தை, சேத்துமம், கிரந்தி, விப்புருதி, குவளை விப்புருதி, குன்மம் முதலியன.

## கெந்தக ரஸாயணம்

நெல்லிக்காய் கெந்தகம் பலம் 3 கொண்டுவந்து, ஆதண்டை வேர்ப்பட்டையை இடித்துத் தூள் செய்து ஒருபானையில் போட்டு, அது முழுகும்வரை தண்ணீர்விட்டு டோலாயந்திரமாகக் கந்தகத்தைக்கட்டி எரிக்கவும். மறுபடி கத்தாழை கொண்டுவந்து இடித்துப் போட்டு தண்ணீர் முன்போல்விட்டு டோலாயந்திரமாக ஒருஜாமம் எரிக்கவும்.

பின்னர், கெந்தகத்தை எடுத்து ஒரு கரண்டியில் நெய் விட்டு உருக்கிப் பசுவின் பாலில் சாய்க்கவும். கெந்தகம் சுத்தியாகும்.

இதைப்பொடி செய்து வைத்துக்கொண்டு இதனுடன்,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | சிறுதேக்கு |
| வாயுவிடங்கம் | கோஷ்டம் |
| திப்பிலிமூலம் | கொத்தமல்லி |

இவைகளை வகைக்கு பலம் வீதமெடுத்துச் சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும்.

நேரத்திற்கு சூரணம் 1 விராகனெடையும், முற்கூறியபடி சுத்தி செய்த கெந்தகம் 3 குன்றியளவும் சேர்த்துக் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்:** 24 வகை மேகங்களும் (தோல் வியாதி) வகைகளும்.

**நீராமை வரளாமைக்கு மருந்து**

3 ஆமைகளைப் பிடித்துவந்து அதன்வயிற்றிலே சிவப்புக் குண்டுமணிப்பருப்பு 1 சேர், சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு 1 சேர், சுத்தியானரசம் 3 வராகனெடை இவைகள் எல்லாவற்றையும், ஆமைகளின் வயிற்றில் அடைத்து ஒரு பானையில் போட்டுக் கள்ளிப்பால் 1 சேர்விட்டு சட்டிகொண்டு மூடிச் சீலைமண்செய்து 3 நாட்கள் பூமிக்குள் புதைத்து வைத்து 4வது நாளெடுத்து,

மருந்துகளையரைத்து நாளொன்றுக்கு 2 விராகன் காலையில் கொடுக்கவும். இப்படிப் பதிமூன்று நாட்கள் உட்கொள்ளவும்.

இதற்குக் குடிநீர்:

| | |
|---|---|
| மாவிலங்கைவேர் | கொடிவேலிவேர் |
| வரப்பூலாவேர் | அப்பக்கோவைக்கிழங்கு |

சமன்கொண்டு, கஷாயம் வைத்து இரவில் கொடுக்கவும்.

நீராமை (உடல் வீக்கம்) தீரும். வரளாமைக்கும் (தனிப்பட்ட இடத்தில் உண்டாகும் வீக்கம்) இது நல்லது. நன்கு பேதியாகும்.

**கபால வலியின் குணமும், சம்பீரத் தைலமும்.**

கண்டந்தன்னில் மேல் முன்னும்
அரிக்கும் மண்டை வறட்சிதன்னில்
துண்டப்புருவந் தனில் குத்தும்
அழியக் கண்ணில் குத்துண்டாம்
மண்டுந் துயரமென வெய்து
மலைபோல் கண்ணந் திறவாது
மண்டை முழுதும் பரந்துகுத்தும்
மதிக்கும் கபால வலியாமே.

(இ-ள்.) கழுத்திற்குமேல் தலையில் அரிப்பு உண்டாகும். முன்மண்டை வறட்சியாகும். புருவத்தில் குத்துவலி ஏற்படும். கண்ணிலும் குத்துவலி உண்டாகும். கண்களைத் திறக்க முடியாது. பொதுவாக தலை முழுவதும் பரவலாகக் குத்துவலி ஏற்படும்.

இதற்கு மருந்து:

| | |
|---|---|
| எலுமிச்சம்பழச்சாறு | 1 நாழி |
| தேங்காய்ப்பால் | 2 நாழி |
| நல்லெண்ணெய் | 1 நாழி |

இவைகளை ஒன்று கலந்து,

| | |
|---|---|
| சித்தரத்தை | செண்பகப்பூ |
| அதிமதுரம் | செங்கழுநீர்க்கிழங்கு |
| கோஷ்டம் | சதகுப்பை |
| ஏலக்காய் | சீரகம் |

இவைகளை வகையொன்றுக்கு 1 கழஞ்சு (2 வராகன்) எடுத்து, நன்றாக இடித்துச் சூரணித்துச் சாறுவிட்டு அரைத்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்றிப் பதமாக எரித்து கல்கம் மெழுகு பதமான பின்பு இறக்கவும். இத்தைலத்தைத் தேய்த்துவரக் கபால வியாதிகள் அனைத்துந் தீரும்.

## இலைக்கள்ளி வேர் கல்பம்

இலைக்கள்ளி வேர்ப்பட்டை வேண்டிய அளவு கொண்டுவந்து நிழலுலர்த்தலாக உலர்த்திப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும்.

இந்தப்பொடியை, ஒரு பாக்களவு வெள்ளாட்டு நெய்யில் குழைத்து விழுங்கப் பித்தமும், வெப்புந் தீரும்.

வெள்ளாட்டு மூத்திரத்தில் கொடுக்க அகுவை, நீராமை, பாண்டுரோகம், பெருவயிறு முதலான வியாதிகள் தீரும்.

இந்தப் பொடியுடன் கழற்சிக் கொடிப் பருப்புச் சேர்த்து இளவெந்நீரில் அரைத்துக் குடிக்க அதிமூத்திரம் நிற்கும்.

இந்தப் பொடியை முலைப்பாலுடன் சேர்த்துக் கொடுக்கக் காமாலை தீரும்.

## தேற்றான் கற்பம்

தேத்தான் மரத்தின் பட்டையைக் கொண்டுவந்து நிழலுலர்த்தி, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இந்தப் பொடியை ஒரு குத்தளவெடுத்து நல்லெண்ணெய்ஒரு நாழியுடன் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்க இருமல், தலைநோக்காசு, கிராணி, மூலம் இவைகள் தீரும்.

மோரில் இதனைச் சேர்த்துக் குடிக்க பெருவயிறு, தாவர விஷம் முதலானவை தீரும்.

இச்சூரணத்தைப் பசுமஞ்சள் சாற்றில் குடிக்க, மூல வியாதி தீரும்.

இப்பொடியுடன் மஞ்சளும், திப்பிலியும் வகைக்கு 1 விராகனெடை கூட்டியரைத்துச் சிற்றாமணக்கெண்ணெயுடன் கொடுக்க மூலம் தீரும்.

இந்தப்பொடியும் வேப்பெண்ணெயும் கலந்து தலையிலும் சரீரத்திலும் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்ய வெதுப்புத் (சரீர எரிச்சல்) தீரும். சரீர உஷ்ணமுந் தீரும்.

இந்தப் பொடியுடன் பொன்னாங்காணிவேர் வாய் பேசாமல், பிடுங்கிவந்து, பசுவின்பாலில் அரைத்துக் கொடுக்க வெதுப்புந் தீரும்.

தீராத நோய்க்கு, தேத்தாங்காய், தேத்தாம்வேர்த்தோலும், தேத்தாம்பழமும், இதனுடன் பசுவின் நெய் 1 படி கூட்டித் துத்தம் ஒரு கழஞ்சு, துருசு ஒரு கழஞ்சு பொடி பண்ணிச்சேர்த்துக் காய்ச்சிப்

பரத்தில் வடிக்கட்டி, இந்தப் பொடியில் ஒரு வெருகடிப் பிரமாணம் கூடக் கலந்து கொடுக்கவும். பற்பல வியாதிகளுந் தீரும்.

இந்தப் பொடியில் ஒரு குத்தளவெடுத்து மோருடன் உட்கொள்ளப் பெருவயிறு தீரும்.

இந்தப் பொடியும் சமுத்திரப்பழமும் சேர்த்து, இளவெந்நீரில் குடிக்கப் பெருவயிறு அகுவை (அரையாப்புக்) கட்டிகள் தீரும்.

இந்தப் பொடியும் சுத்தி செய்த நேர்வாளம் கழஞ்சும் கூட்டி வைத்துப் பனைவெல்லம் சேர்த்திடித்து ஒருசுண்டைக்காயளவு உட்கொள்ளவும். கவுசை (வயிற்று வியாதி) மீளும். நன்கு பேதியாகும்.

இந்தப் பொடியைக் குளவிந்த மஞ்சடீர் சாற்றில் கொடுக்கப் படர்தாமரை தீரும்.

**பத்தியம்**: பாலுஞ் சோறு தவிர வேரொன்றுமாகாது.

## நீராமைக்கு "கூஷ்மாண்டக் கிருதம்"

குணம்:-

உடம்பெங்கும் வீங்கும். உதிரம் வாயாலே விழும் எரிச்சலுடன் வாந்தியெடுக்கும். வயிறு கழியாது. நடுக்கலுண்டாகும் உடம்புக் கடுப்பும் உண்டாகும். கைகால் ஓய்ந்து வரும்.

இதற்கு மருந்து:

| | |
|---|---|
| பசுவின் நெய் | 4 படி |
| வெண்பூசணிக்காய்ச்சாறு | 8 படி |
| இந்துப்பு | 1 படி |

இவைகளை ஒன்று கலந்து எரித்துப் பதத்தில் இறக்கவும். இதில் தினம 1 ஸ்பூனளவெடுத்துப் பசுவின் பாலுடன் இரு வேளைகளுருண்ணவும்.

## பிளவைக்குத் "திருகுக்கள்ளி களி"

திருகுக்கள்ளிக் கிழங்கு வெட்டி வந்து, மேல்தோல் சீவி, அம்மிதனில் வைத்துத் தண்ணீர் விட்டு, விழுதாக அரைத்து ஒரு எலுமிச்சையளவு எடுத்துக்கொண்டு, அதற்குச் சரியளவு கறுங்குருவையரிசி மாவுடன் இடித்துக் களி கிண்டித் தின்னவும். இப்படி 3 நாட்கள் உட்கொள்ளப் பிளவைகள் போம்.

## மலட்டுநோய்க்கு மருந்து

கண்ணுப் பீளையிலை (சிறுபீளை) ஒரு பிடி பறித்துவந்து அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழைத்துக்கொடுக்கவும். பிள்ளையுண்டு. இது கைகண்டது.

**குறிப்பு:** பூலாவில் ஒரு பேதமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## பிள்ளை பிறக்க மருந்துகள்

கீழாநெல்லி வேர் ஞா.யிற்றுக்கிழமை நாள் ( எலுமிச்சம் பழம்) பலி கொடுத்துப் பிடுங்கி வந்துக் குளிசமாடி கால் பெருவிரலில் கட்டப் பிள்ளை பிறக்கும். இது கைகண்டது.

ஆமணக்கம் வேர், உத்தாமணி வேர் இந்த இரண்டு வேரும் குளிசமாடிக் கையில் கட்டக் குழந்தை பிறக்கும்.

## ஏலாதித் தைலம்

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| பூலாங்கிழங்கு | பேய்ப்புடல் |
| விளாவேர் | கற்றாழைச்சார் |
| ஆலம்பட்டை | அத்திப்பட்டை |
| கொடிவேலிவேர் | அழிஞ்சில்வேர் |
| நிலக்கடம்பு | மாம்பழக்கொன்னை வேர் |
| வேப்பம்வேர் | கொல்லங்கோவைக்கிழங்கு |
| மருதம் வேர் | இலந்தைவேர் |
| சீந்தில்தண்டு | இத்திவேர் |
| அமுக்கிராவேர் | இலாமிச்சம் வேர் |
| நிலஆவாரைவேர் | துடரிவேர் |
| கோரைக்கிழங்கு | நெல்லிமுள்ளி |
| எட்டிவிதை | தான்றித்தோல் |

இவைகள் வகையொன்றுக்கு 1 பலம் வீதமெடுத்துக் காயவைத்து இடித்து, மரக்கால் தண்ணீர்விட்டு 1 மரக்கால் ஆகக்காய்ச்சவும். ஒரு கெட்டிச்சீலையில் கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளவும். இதனுடன்,

| | |
|---|---|
| ஏலம் | கிராம்பு |
| அதிமதுரம் | மருள் |
| வேப்பம்பிசின் | புலிநகம் (கடைச்சரக்கு) |
| தேவதாரம் | அழிஞ்சில் விதை |
| அத்திவேர் | இத்திவேர் |
| ஆலம்வேர் | அரசம்வேர் |
| புளியந்துளிர் | கர்ப்பூரம் |
| பொதிச்சம்வேர் | கடுக்காய்ப்பிசின் |
| சிறுநெரிஞ்சில் | கல்மதம் |
| நன்னாரிவேர் | தாமரைக்கிழங்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | நெய்தல் கிழங்கு |
| வசம்பு | பூலாங்கிழங்கு |
| மாம்பிசின் | கொடிவேலிவேர் |

வகைக்கு ஒரு பலம் எடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்துத் தூள் செய்துகொண்டு, முன்சொன்ன கஷாயம் விட்டு நன்றாக அரைத்துப்

| | |
|---|---|
| பசுவின் பால் | 1 மரக்கால் |
| நல்லெண்ணெய் | 2 மரக்கால் |

முன் கஷாயத்துடன் கூட்டி, அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும். இத்தைலத்தைச் சந்நிக்குத் தேய்த்து உடனே அரப்புத்தேய்த்து முழுகவும். வெந்நீர் உபயோகிக்கவும். உள்ளுக்கும் கொடுக்கவும். சரீரம் பொன் நிறமாகும். கன்னச்சூலை, வாதசூலை, நீரடைப்பு, துர்மாம்ஸம், தேகத்தில் வாதக்கடுப்பு, உளமாந்தை, சொறி, குஷ்டம், காதில் தண்ணீரடைப்பு, காணாக்கடி, பிரமியம், இரத்தப்பிரமியம், சன்னிக்குத்து, ஒருத்தலைவலி, முறைக்காய்ச்சல், எலும்பு உருக்கி, கபாலவாதம் இன்னும் பற்பல ரோகங்களும் தீரும்.

**பத்தியம்**: உப்பு, புளி ஆகாது. மாமிசம் உதவாது. பருப்பு, மிளகு கூட்டவும்.

## வண்டுகடிக்குப் பூச்சு மருந்து

நரிக்கொன்னைப் பட்டையும், உள்ளி வசம்புங் கூட்டி,எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்துப் பூசவும்.

நேர்வாளப்பருப்பைத் தேட்கொடுக்கிலைச்சாறு விட்டு அரைத்துப் பூசப் படைகள், வண்டுகடி முதலானவை தீரும். (கைகண்டது.)

## பல்வலிக்கு

செவ்வாய்க்கிழமையன்று வியாதிக்காரன் பேரைக்கேட்டு, ஆவாரைச்செடியைப்பிடுங்கி எறியவும்.

## பவுத்திரம், மேகவெட்டைக்குக் " காடிக்கார மாத்திரை"

| | |
|---|---|
| காடிக்காரம் | சவர்க்காரம் |
| சீனாக்காரம் | வெங்காரம் |
| பஞ்சலவணம் | பெருங்காயம் |
| இலவங்கப்பட்டை | ஏலரிசி |
| கடுகரோகிணி | சுத்திசெய்த நேர்வாளம் |

இவைகளெல்லாம் வகைக்கு 2 வராகன் எடுத்துக் கல்வத்திலிட்டு 2 இளநீர் விட்டு 3 நாட்கள் அரைத்துக் குன்றிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுர்த்திக்கொண்டு, நேரத்திற்கு ஒரு உருண்டை தேனில் உட்கொள்ளவும்.

தீரும் வியாதிகள்: பவுத்திரம், மேகவெட்டை, இரத்தப்போக்கு, நீர்க்கட்டு இவைகளெல்லாம் தீரும்.

**பத்தியம்**: புளி, புகையிலை தவிர்க்கவும்.

பஞ்சவலணமாவன: கறியுப்பு, வெடியுப்பு, வளையல் உப்பு, கல்லுப்பு, இந்துப்பு என்பன.

## மருந்தீட்டிற்கு

| | |
|---|---|
| உப்பிலி இலை | 2 விராகன் |
| அரப்பொடி | 1 விராகன் |

வாழைப்பழச்சாறு விட்டரைத்து (உமியுடன் கலந்து பிழியவும்.) 5, 7 நாட்கள் தினம் இரு நேரமும் கொடுக்கவும் வாந்தி, பிராந்தி காணும். மருந்தீடுபோம். உப்பு, புளி தவிர்க்கவும்.

உப்பிலி - இண்டு

## சோகை, பாண்டு, காமாலைக்குப் "பெருமருந்துக் கல்கம்"

பெருமருந்து வேர், இலை இவ்விரண்டுடன் முட்டை கொல்லிபூடு துவைத்துச் சாறுவிட்டரைத்துக் கழற்சிப் பிரமாணம் மிளகு, உள்ளி கூட்டிக் குழப்பிக் கொடுக்கவும்.

## ஆயில்யப்பட்டை எண்ணெய்

| | |
|---|---|
| ஆயில்யப்பட்டை | 30 பலம் |
| ஆதண்டையிலை | 30 பலம் |
| கருநொச்சியிலை | 30 பலம் |
| கையாந்தகரையிலை | 30 பலம் |
| அஞ்சிலைநொச்சி (வெளுப்பு) | 30 பலம் |
| காட்டுக்குறிஞ்சா | 30 பலம் |
| வெண்ணொச்சியிலை | 30 பலம் |
| ஆடாதோண்டையிலை | 30 பலம் |
| தழுதாழையிலை | 30 பலம் |
| பசுமஞ்சள் | 30 பலம் |

இவைகள் எல்லாவற்றையும் இடித்து, ஒரு முடாவிலிட்டு 20 படி (10 மரக்கால்) நீர்விட்டு, ஒரு மரக்காலாகும் வரை காய்ச்சி வடித்துக்கொண்டு

மிளகு பலம் 4 சீரகம் பலம் 4

அரைத்துப் போட்டு நல்லெண்ணெய் 1 குறுணி (1 மரக்கால்) விட்டு, அடுப்பின் மேலேற்றி, மெழுகு பதமாக இறக்கவும். இத்தைலத்தைத் தலைக்குத் தேய்த்துக்கொண்டு நன்றாக ஊறியபின்னர் சீயக்காய் பொடியிட்டு, வெந்நீரில் முழுகவும்.

தலைக்குத்து, மயக்கம், கபாலசூலை முதலானவை தீரும்.

**பத்தியம்:** புளி, புகையிலை தவிர்க்கவும்.

## தாமிர பற்பம்

களிமண் குகையொன்று நீண்டதாக எடுத்து அதனுள் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு 10 விராகனெடை இட்டு, அதன்மேல் சுத்திசெய்த செப்புத்தகட்டை (காசு) வைத்து, அதன்மேலே மறுபடியும் நேர்வாளப்பருப்பைப் போட்டு, அமுக்கிக் குகையின் வாய்க்குச் சில்லிட்டு சீலைமண் 3 தடவை செய்துக் காய்ந்தபின், ஒரு குழிவெட்டி அதற்குள் 10 விராட்டிகளுக்கிடையில் குகையை வைத்துத் தீப்போடவும். வெந்து ஆறியபின், இதனை எடுத்துப் பார்க்கத் திருநீறு போல் தாமிர பற்பம் கிடைக்கும்.

மேகநீர் சம்பந்தப்பட்ட வியாதி, தோல் வியாதிகள் முதலானவைகளுக்குக் கொடுக்கவும். பத்தியமாக இருக்கவும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

## தாமிரச்செந்தூரம்

தாமிரத்தைச் சுத்திசெய்து ஈசலிறகுபோல் தட்டிக் கத்தரித்துக்கொண்டு, நிலப்பனைக் கிழங்குச் சாறுவிட்டு 2 நாட்கள் அரைத்து, 3 புடம் போடவும். பின்னர் எருக்கம் பாலில் ஒரு புடம் போடவும். மருதம்பட்டைச் சாற்றில் 2 புடம் இடவும். செந்தூரிக்கும்.

நேரத்திற்கு ¼ வராகனெடை கொடுக்கவும். ரெத்த காசத்திற்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். மந்தார காசத்திற்குச் சிற்றரத்தைப் பாலில் இழைத்து அதனுடன் கொடுக்கவும். 7 நாட்கள் கொடுக்கவும். கைப்பு, புளிப்புத் தவிர்க்கவும். முருங்கைப்பிஞ்சு, துவரம் பருப்பு, பசுவின் நெய் வேண்டிய அளவு கூட்டிக்கொள்ளவும்.

அதிசாரக் கழிச்சலுக்கு எருமைச்சாணம் கொண்டுவந்து குறுணித் தண்ணீரில் போட்டுக் கரைத்துத் தெளியவைத்து அந்தத்

தண்ணீரை இறுத்து, அந்தத் தண்ணீரில் ஒரு சிரங்கை நற்சீரகம் போட்டு, வேகவைத்து இறுத்து அதில் செந்தூரம் கால் வராகனெடை கொடுக்கவும்.

## அப்பிரகச் செந்தூரம்

அப்பிரகம் வேண்டிய அளவு (2 சேர்) கொண்டுவந்து சதுரக்கள்ளிப் பெருமரமாகக் கொண்டுவந்து ஒரு முழத்துண்டுகளாக நறுக்கி அதனுள்ளிருக்கும் சோற்றை எடுத்து விட்டு, அதற்குள் அப்பிரகத்தை அடைத்து, இந்தச்சோறு கொண்டு மூடிச்சீலைமண் செய்து, ஒரு ஆள் உயரம் காட்டு விராட்டி அடுக்கிப் புடம் போடவும்.

3 நாட்கள் சென்று ஆறவிட்டெடுத்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாக அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டில் வைத்து மூன்று முழம் நீளம் உயரமுள்ள புடம் போடவும். ஆறவைத்து எடுத்து மறுபடியும் முத்தெருக்கன் செவிச்சாறுவிட்டு அரைத்து, வில்லைகளாகச் செய்துகாயவைத்து, 2 முழப்புடம் இடவும். நன்றாக ஆறியபின் திருகுக்கள்ளிப்பால் விட்டரைத்து, வில்லைகளாக்கி, ஓட்டில் வைத்து ஒருமுழ நீள அகலமுள்ளப் புடம் போடவும். குளிர்ந்து நன்றாக ஆறியபின்பெடுத்து, மறுநாள் புரசம் பட்டைச்சாறுவிட்டு அரைத்து, வில்லைதட்டி 1 முழப்புடம் போடவும். மருக்காரைச் சாறுவிட்டு ஒரு புடமும், எருக்கம் பழுப்புச்சாறு விட்டு ஒரு புடமும் போடச் செந்தூரமாகும். கடைசியாக ஆலம் விழுதுச்சாறுவிட்டு நன்றாக அரைத்துச் சிறு சிறு வில்லைகளாகத்தட்டிப் புதுக் கலசத்தில் வைத்து மேல் ஓடு போட்டுக் கவிழ்த்து ஒரு முழக்குழியில் போட்டு ஒரு வாரம் புதைக்கவும். (பூ புடம்) பின்னர் இம்மருந்தை, எடுத்துக்கொண்டு நுணுக்கி ஒரு குப்பியில் பத்திரப்படுத்தவும்.

## தீரும் வியாதிகளும் அனுபானமும்

ஆதண்டைச்சாற்றில் ½ பணவெடை (1½ குன்றி) கொடுக்க 18 வித எலிகடிகளும் தீரும். மூன்று நாட்களுக்கு அந்தி சந்தி கொடுக்கவும். கசப்புப் புளிப்புப் பண்டங்களைத் தவிர்க்கவும்.

மந்தாரகாசம், ஈளை, இளைப்பிற்குத் தேனில் கொடுக்கவும்.

பயித்திய காசத்திற்குப் பாசிப்பயற்றங் கஞ்சியில் கொடுக்கவும்.

சன்னிவாத ஜ்வரத்திற்குச் சாமையரிசிக் கஞ்சியில் ½ பணவிடை மருந்தையிட்டு, 3 நாட்கள் உட்கொள்ளவும்.

மகோதரத்திற்குக் கற்றாழைச்சரகு சாம்பல் சுட்டு ஒரு படி எடுத்துக்கொள்ளவும். இதனுடன் ஒரு படி கல்லுச் சுண்ணாம்பு இவ்விரண்டையும் ஒரு பானையில் போட்டு ஒரு மரக்கால் சுத்தஜலம் விட்டு நன்றாகக் கலக்கித் தெளிய வைத்துக்கொண்டு, ஒரு நேரத்திற்கு ½ படி தண்ணீர் எடுத்துக்கொள்ளவும். அதனுடன் சிறிது சீரகத்தை நுணுக்கிப் போட்டுக் கொண்டு, செந்தூரத்தில் ஒரு பணவெடை போட்டுப் பருகவும். பெருவயிறு, மகோதரங்கள் தீரும்.

## சூலைக்குக் "கெந்தக பற்பம்"

கெந்தகம் 1 சேர் கொண்டுவந்து, ஒரு கலசத்தில் குப்பைமேனிச்சாறு 2 படி விட்டுச் சுண்ணாம்புக்கல் படி கூடப் போட்டுத் தெளியவைத்து,இறுத்துத் தண்ணீரைச் சட்டியில் ஊற்றிப் பசளையிலை கொண்டுவந்து நசுக்கி அதனுடன் கலந்து மேற்படி கெந்தகத்தையும் போட்டு மேலும் பசளையிலையைக் கொண்டு மூடி, வாய்க்குத் தக்கதொரு ஓட்டைக் கவிழ்த்துச் சீலைமண்

செய்து, 3 நாழிகை எரிக்கவும். நன்றாக ஆறவைத்தெடுக்கத் துல்யமான பற்பம் கிடைக்கும். 7 நாட்களுக்குத் தினம் ஒரு வராகனெடை வீதம் உட்கொள்ளவும். சூலை நோய் (வயிற்று வலி, முட்டி வீக்கம்) முதலானவை தீரும்.

**பத்தியம்**: கசப்புப் பதார்த்தங்களையும், புளிப்புப் பதார்த்தங்களையும் நீக்கவும்.

### ஈளை, இருமலுக்கு "அரிதார பற்பம்"

வேண்டிய அளவு அரிதாரம் (தாளகம்) கொண்டுவந்து தும்பைச்சாறு விட்டு நன்றாகவரைத்து வில்லை தட்டிக் காயவைத்து, ஒரு ஓட்டில் வைத்து மற்றொரு மடக்கு கொண்டு மூடிச் சீலைமண் செய்து ஒரு சாண் நீள, அகலம், உயரமுள்ளதாகக் காட்டு வராட்டியில் (தானாகவே உலர்ந்த சாணி) புடம் போடவும். வெள்ளையான பற்பம் கிடைக்கும்.

### காரீய பற்பம் (கருவங்க பற்பம்)
### (மேகம் இருபதற்கும்)

காரீயம் பலம் ஒன்று எடுத்து உருக்கி மோரிலே சாய்க்கவும். அதேபோல் மறுதடவை உருக்கு காடியிலும், பசுவின் மூத்திரத்திலும் ஒரு தரமும் சாய்த்துச் சுத்தியான பின்னர், அதை எடுத்துத் தகடாகத் தட்டி கிண்ணி பண்ணி, அதன் வாய்க்குத் தக்கபடி ஒரு மூடியும் செய்துகொள்ளவும். அந்தக் கிண்ணியில் அரைகுறையாக நசுக்கிய நேர்வாளப்பருப்பும் போட்டுத் தகடு கொண்டு மூடி, அதற்குமேல் ஒரு பூசணிக்காய் பருமன் துணி சுற்றவும்.

ஒரு கெஜம் நீள, அகல, உயரமுள்ள குழிவெட்டி, அக்குழிக்குள்ளே ஒரு சாண் உயரம் புளியம்புராணியை ஒரே சீராகப் போட்டு, அதன்மேல் விராட்டிகளைப் பரப்பி, அந்த மூட்டையை நடுவில் வைத்துச் சுற்றிலும் 1 முழ உயரம் விராட்டி அடுக்கித் தீயிடவும். சாம்பிராணித் தூபம் கொடுத்து, விநாயக பூஜை செய்து, கோமியத்தைத் தெளித்த பிறகு தீயைப் போடவும். மறுநாள் புடத்தை ஆறவிட்டு எடுத்துப் பார்க்கப் பற்பமாகும். இதில் ஒரு பணவெடை வீதம் நேரத்திற்குக் கொடுக்கவும். மேகநோய்கள் தீரும்.

அனுபானம்: வாழைப்பழத்தில் கொடுக்கவும்.

இரத்த வாந்திக்குச் சங்கம் வேர்க் கஷாயத்தில் 3 நாட்கள் கொடுக்கவும்.

ஈளை, இருமலுக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

21 மேக வியாதிகளுந் தீரும். (தோல் நோய்கள்) கசப்புப் பதார்த்தங்கள், புளிப்புப் பதார்த்தங்கள், மாம்ஸம் இவைகளை நீக்கிப் பத்தியம் இருக்கவும்.

## பிரிந்த ஸ்திரீயுடன் சேரக் "களி"

புதிதாக(முதன் முதலாக) முட்டையிட்ட கோழியின், அடையில், பழுப்புப் புழுங்கலரிசி, பருத்தி விதை, வெட்பாலையரிசி இம்மூன்றையும் சமனாக எடுத்து, கோழி முட்டைப் பிரமாணம் இருக்கும்படி ஒரு துணியில் முடிந்து, அதனை முட்டைகளுக்கிடையில் வைத்து அடைகாக்கச் செய்து, ஒரு குஞ்சு பொரித்தவுடன் அம்மூட்டையை எடுத்துச் சரக்குகளை மாவாக்கிக் களி கிண்டிக் கொடுக்கவும். புருஷன் கோழிபோலக் காத்துக் கிடப்பான். (வீரியம் உண்டாகும்.) இவ்வாறு 1 வாரம் சாப்பிடவும்.

## நீரிழிவிற்கு "மருந்து, கோவா"

பசுவின் பால் குறுணி கொண்டுவந்து ஒரு சட்டியில் விட்டு நாலிலொன்றாகக் காய்ச்சி

விட்டுச் சிவக்கக் காய்ச்சவும். கொதி வருகையில் சாணாக்கிக் கீரைச்சாறு (துட்டெடை, கருநொச்சிச்சாறு) துட்டெடை துத்திச்சாறு 2 துட்டெடையும் கூடவிட்டு, துத்துவேரினால் நன்றாகக் கிண்டி வரவும். கெட்டியான பதத்தில்

| | |
|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | வராகன் 7 |
| சுத்திசெய்த ஊசிக்காந்தம் | வராகன் 5 |
| நீரடிமுத்துவிதை(எண்ணிக்கையில்) | 2 |
| முருங்கைப்பட்டை | பலம் ½ |
| பெருமரப்பட்டை | பலம் ½ |
| உவாய்ப்பட்டை | பலம் ½ |
| சடாமாஞ்சில் | விராகனெடை 3 |
| திப்பிலி | விராகனெடை 9 |
| கருஞ்சீரகம் | விராகனெடை 7 |
| மிருதார்சிங்கி | விராகனெடை 3 |
| கஸ்தூரி மஞ்சள் | விராகனெடை 2 |
| மரமஞ்சள் | விராகனெடை 2 |
| கருங்குங்கிலியம் | விராகனெடை 10 |
| கார்போகவரிசி | விராகனெடை 5 |

இவைகளெல்லாவற்றையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து இறுகிய பாலுடன் கூட்டி மணல் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் வீதம் 40 நாட்கள் உட்கொள்ளவும்.

**பத்தியம்**: புகையிலை நீக்கவும்.

## ரஸபற்பம் செய்யும் முறை

சுத்திசெய்த இரஸம் வேண்டிய அளவு கொண்டுவந்து கல்வத்திலிட்டுப் பனைமட்டைச்சாறு விட்டரைத்து, பச்சைப் பனையோலைக்குள்ளே வைத்துச் சீலைமண் செய்து, நன்கு காய்ந்த பின்னர் ஒரு சாண் நீள, அகல, உயரமுள்ள புடம் இடவும்.புடத்தை ஆறவிட்டு எடுக்கத், திருநீறு போல வெண்ணிறமான பற்பம் கிடைக்கும்.

## பித்தவெட்டைக்கு நெய்

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | ஏலக்காய் |
| கிராம்பு | இலவங்கப்பட்டை |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| வாயுவிடங்கம் | சின்னஇலவங்கப்பட்டை |
| சித்தரத்தை | சிறுநாகப்பூ |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| தேவதாரு | கொத்துமல்லிவிதை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| பரங்கிப்பட்டை | |

இவைகள் வகையொன்றுக்கு விராகன் 3 எடுத்து நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்

| | |
|---|---|
| நன்னாரிவேர் | தூதுவேளைவேர் |
| நெருஞ்சிவேர் | நீர்முள்ளிவேர் |
| செம்முள்ளிவேர் | நிலப்பனங்கிழங்கு |
| தண்ணீர்விட்டான்கிழங்குகொட்டிக்கிழங்கு | |
| வாளழக்கிழங்கு | |

இவைகளை வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து 8 படி தண்ணீர் விட்டு, எட்டிலொன்றாகக் காய்ச்சி இறுத்துக்கொள்ளவும். இதனுடன்

பசுவின் நெய் 1படி விட்டு, சூரணத்தையும் கலந்து அடுப்பில் மேலேற்றிப் பதமாக எரித்து, இறக்கி வடிக்கட்டிக்கொள்ளவும் நன்றாக ஆறியபின்

சீனிச்சர்க்கரை
ராயபுரிச்சர்க்கரை (பூராசீனி)
கல்கண்டு

இவைகளை வகைக்கு ¾ பலம் வீதமெடுத்து நன்றாக இடித்து, நெய்யுடன் குழப்பி வைத்துக்கொள்ளவும்.

இந்நெய்யில் தினம் 2 வேளை ஒரு ஸ்பூனளவெடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொண்டுவரப் பித்தவெட்டை தீரும்.

**காய்ச்சலுடன் கூடிய கழிச்சலுக்கு மருந்துகள்**

| | |
|---|---|
| மாதளை இலை | மாவிலை |
| வில்வ இலை | விளா இலை |
| நாவல் இலை | சுக்கு 2 தேறு (துண்டுகள்) |

இந்த ஐந்து வகை இலைகளையும் சமனெடுத்து இடித்து, ஒரு பானையில் போட்டு, சுக்குத் துண்டுகளையும் இட்டு 2 நாழி தண்ணீர் விட்டு 1 ஆழாக்காகக் காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி 2 நேரமும் 3 நாட்கள் கொடுக்கவும்.

| | |
|---|---|
| நற்சீரகம் | நெல்லிமுள்ளி |
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | |

இவைகளைச் சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்துப் பொடிசெய்து, கருப்புட்டி (பனைவெல்லம்) கூட்டிப் பசுவின் வெண்ணெயுடன் கொடுக்கவும்.

இதற்குப் பித்தக்கழிச்சல், காய்ச்சல்மேல் கழிச்சல் இவைகள் தீரும்.

## வயிற்றுக்கழிச்சலுக்கு மருந்து

அரசம் பட்டை வெட்டிவந்து வைத்துச் சட்டியிலிட்டு 8 மடங்கு ஜலம் விட்டு பங்காகக் கஷாயம் வைத்துக் கண்டத்திப்பிலி (1 வராகன்) முடிந்துபோட்டு வேகவைத்து அரைத்து, 3 நாட்கள் கொடுக்கவும்.

வயிற்றுக்கடுப்பு, சீதக்கடுப்பு முதலானவை தீரும்.

## கண்ரோகங்களுக்குச் சங்காதி மாத்திரை

| | |
|---|---|
| சங்கு | திப்பிலி |
| மனோசிலை | அதிமதுரம் |
| அரிதாரம் | சுக்கு |
| மிளகு | துருசு |
| பீதரோகிணி | |

இவைகளைச் சமனெடுத்து, இடித்துக் கல்வத்திலிட்டு, நந்தியாவட்டை புஷ்பச்சாறு விட்டு, 2 நாட்கள் கைவிடாமலரைத்து மெழுகு பதமானபின், நீண்ட மாத்திரைகளாகத் திரட்டி, நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். 2 மாதங்கள் சென்று முலைப்பாலிலிழைத்துக் கண்களிலிடக் கண் ரோகங்கள் தீரும்.

## வயிற்றுக்கடுப்பிற்கு மருந்து

| | |
|---|---|
| சுண்டையிலை | கிராம்பு |
| கருவேலம்பட்டை | நெல்உமி |
| அப்பக்கோவைக்கிழங்கு | தண்ணீர்விட்டான்கிழங்கு |
| வெங்காயம் | |

இவைகளைச் சமனெடுத்து ஊறவைத்துக் கஷாயம் வைத்து அதனுடன் மாசிக்காய், ஜாதிக்காய் இரண்டும் கூட்டிக் கொடுக்கவும்.

இரத்தக்கழிச்சல், கடுப்பு நிற்கும்

கருவேலம்பட்டை வில்வப்பட்டை
கிளுவைப்பட்டை சிறுதேள்கொடுக்கு
அப்பக்கோவைக்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு
தண்ணீர்விட்டான்கிழங்கு

இவைகளைச் சமனெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து 8 மடங்கு ஜலம் சேர்த்து 1 பங்காக வற்றவைத்துத் தினம் 3 வேளை பருகவும்.

கழிச்சல் நிற்கும்.

## விரியன் பாம்பு கடிக்கு மருந்தும், பூச்சும்

கொல்லங்கோவைக்கிழங்கு பூண்டு
வசம்பு

இவைகளை இழைத்துக் கடிவாயில் பூசவும்.

அப்பங்கோவைக்கிழங்கு
கொல்லங்கோவைக்கிழங்கு
பெருந்தும்பைவேர்

இவைகளைச் சமனெடுத்து நிழலில் உலர்த்தி இடித்து, இளவெந்நீரில் ஒரு வெருகடி (குத்தளவு) தூள் கொடுக்கவும். எவ்விதமான விஷகடிகளுந் தீரும்.

## விரியன் கடிக்கு மருந்து

பங்கம்பாளை புங்கம்வேர் பருத்தசாரணை பழுபாகல்
சிங்கப்பெருமாள் நாயுருவி சீவியசுக்குக் குரிஞ்சாவேர்

அங்கத்துடனே நீர்வார்த்து அரைத்துப்பூச வல்லீராய்
சங்கக்கணபதி தன்னாணை சாகார் விரியன் கடித்தோரே.

(இ-ள்.) ஆடுதீண்டாப்பாளைவேர் புங்கம்வேர்
சாரணைவேர் பழுபாகல்வேர்

நரசிம்மப்பெருமாள் கோவிலில் முளைத்திருக்கும் நாயுருவி வேர்

சிறுகுறிஞ்சா வேர் சீவியகக்கு

இவைகளைச் சமனெடுத்து சுத்தஜலம் விட்டு நன்றாக அரைத்து விரியன் கடிவாயில் பூசவும்.

விரியன் கடிகள் தீரும். (இம்மருந்துகளை நிழலிலுலர்த்தி அரைத்து உருண்டைகளாகச் செய்தும் உபயோகிக்கலாம்).

குறிப்பு: சிங்கப்பெருமாள் நாயுருவி வகையாகவும் இருக்கலாம் எனத்தோன்றுகிறது.

## பூப்பட்ட (பூவிழுந்த) கண்களுக்கும், அக்கரக் காய்ச்சலுக்கும் மருந்து

சிறுபீளையிலையைக் கசக்கிக் கண்களில் பிழியவும். கண்களிலேற்படும் பூ விழுதல் கரையும்.

பிலா மரத்துக் காளான் கொண்டுவந்து ஆழாக்கு இளவெந்நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இந்த மருந்தை தேள் கொட்டினாலும் கொட்டுவாயில் இடவும். கடுப்பு நிற்கும்

அக்கரக்காய்ச்சல் - வாய்ப்புண்களுடன் கூடிய ஜ்வரம்

## மேகவெட்டைக்குப் "பஞ்ச கவ்ய நெய்"

| | |
|---|---|
| பசுவின் நெய் | படி ஒன்று |
| பசுவின் பால் | படி ஒன்று |
| பசுவின் தயிர் | படி ஒன்று |
| சாணிப்பால் | படி ஒன்று |
| மூத்திரம் | படி ஒன்று |

இவைகளையொன்று கூட்டி, அடுப்பின் மேல் ஏற்றி நன்றாகச் சுண்டவைத்து, மெழுகு பதத்தில் வடித்து இறக்கவும். 5 நாள், 7 நாள், 10 நாட்கள் தினம் ஒரு துட்டளவு காலை, மாலை சாப்பிடவும்.

| | |
|---|---|
| நற்சீரகம் | ஏலக்காய் |
| ஜாதிக்காய் | மாசிக்காய் |
| ஈரவெங்காயம் | |

இவைகளைச் சரி எடுத்து, நசுக்கிக் கஷாயம் வைத்துக் கஷாயத்தில் கோரோசனை கூட்டிக்கொள்ளவும். வெட்டை நோய்கள் தீரும்.

## புரையோடும் புண்ணிற்குக் கட்டுமருந்து

புரை விழுந்த புண்ணில் விளக்கெண்ணெய் தடவி பேய் முசுட்டையிலை வைத்துக் கட்டவும்.

## சுரத்திற்குத் தாளகபற்ப மாத்திரை

| | |
|---|---|
| சுத்தி செய்த பொன் அரிதாரம் | 4 விராகனெடை |
| பொரித்த சீனாக்காரம் | 8 விராகனெடை |

இவ்விரண்டையும் செப்பிலடைத்து (குப்பி) 7 சீலை மண் செய்து 2 முழ நீளம் 2 முழ அகல் ஒரு முழ உயர எருமுட்டை அடுக்கி அதன் நடுவில் குப்பியை வைத்துத் தீயிடவும். பற்பமாகும்.

அந்தப் பற்பத்தை எடுத்துச் சுக்குத் திப்பிலி சமனாய்க் கூட்டிக் குப்பைமேனிச் சாறு விட்டு, மிளகுப் பிரமாணம் உருண்டைகள் செய்து நிழலிலுலர்த்திக் குடுக்கையிலடைக்கவும்.

**அனுபானம்**: தாபச்சுரம், பித்த ஜ்வரத்திற்குச் சுக்குக் கஷாயத்தில் உட்கொள்ளவும்.

கபச்சுரத்திற்கு சிற்றரத்தைப் பாலில் சாப்பிடவும்.

### *சீத ஜ்வரத்திற்கும், வாத ஜ்வரத்திற்கும் சீத கஷாயம்*

| | |
|---|---|
| சித்திரமூலம் | வேலிப்பருத்திவேர் |
| எருக்கம்வேர் | முருங்கைப்பட்டை |
| மாவலிங்கப்பட்டை | நிலஉவாய் வேர் |
| சித்தாமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |

இவை வகைக்கு வராகன் ஒன்று எடுத்துத் தண்ணீர்விட்டுப் பச்சையாயரைத்து வடிகட்டிக் கொண்டுச் சுரத்திற்குத் தக்கபடித் தினம் 2 மாத்திரைகள் வீதம் காலை மாலை 3 நாட்கள் 5 நேரம் சாப்பிடவும்.

புளி, புகையிலை நீக்கவும்.

### *வாத ராட்சஸன்*

சாதிலிங்கம் வராகன், சதுரக்கள்ளிப்பால் வராகன் 4 விட்டு, ரு நாள் நிழலிலே வைத்து மறுநாள் வெயிலிலேவைத்து, 3

நாட்கள் கல்வத்திலிட்டுக் கையோயாமல் அரைத்து மிளகுப் பிராமாணம் உருண்டைகள் பண்ணி, நிழலில் காய வைக்கவும்.

ஜ்வரத்திற்கு இஞ்சிச்சாறு, சுக்குக்கஷாயம் ஏதேனுமொன்றுடன் உட்கொள்ளவும். பேதியாகிச் சுரம் நிற்கும்.

## லோகச் செந்தூரம்

| | |
|---|---|
| சுத்திசெய்த அரப்பொடி. | வராகன் 12 |
| சுத்திசெய்த ரஸம் | வராகன் 10 |
| சுத்திசெய்த கெந்தகம் | வராகன் 10 |
| வெங்காரம் பொரித்தது | வராகன் 4 |

இவைகளையெல்லாம் எடுத்து, முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் அரைத்துக் கஜ்ஜலி செய்து, மற்ற சரக்குகளைப் போட்டு 4 ஜாமங்கள் கையாந்தகரைச்சாறு விட்டரைத்துக் கம்பளி நிறமாக வந்தபின், சிறுசிறு வில்லைகளைக் தட்டி, நிழலில் உலர்த்திக் காய்ந்தபின் ஒரு சட்டியில் ஒன்றன் மேல் ஒன்றுபடாமல் தனித்தனியே வைத்துச் சட்டியின் வாய்க்குத்தக்கபடி ஒரு அகலினால் மூடிச் சீலைமண் செய்து, ஒரு முழ நீள, அகல உயரமுள்ளபடி, விராட்டியடுக்கி அதன் நடுவில் சட்டியை வைத்துப் புடமிடவும்.

லோகச்செந்தூரம் கிடைக்கும். இதனைத் தினம் ஒரு அரிசி எடை தேனில் குழைத்துச் சாப்பிடப் பாண்டு, சோகை இவைகள் தீரும்.

## மூலக்கடுப்பிற்குக் கபாட மாத்திரை

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| சண்பகப்பூ | சாதிக்காய் |
| சுத்திசெய்த இரஸம் | அபின் |
| சுத்திசெய்த மனோசிலை | |

இவைகள் எல்லாவற்றையும் சமனெடுத்துக் கல்வத்தில் இட்டுக் குப்பைமேனிச்சாறு விட்டரைத்துத் தேத்தாங் கொட்டைப்பிரமாணம் உருண்டைகள் செய்து, நிழலிலுலர்த்தலாக உலர்த்தி வைத்துக்கொண்டு பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது வடிக்கட்டிய தயிர் ஆடையுடன், ஒரு உருண்டையும், நல்லெண்ணெய் 4 சொட்டுக்களும் விட்டு அரைத்துக் குழப்பிக் கொடுக்க, வயிற்றுக்கடுப்புத் தீரும். கைகண்டது.

**பத்தியம்**: அத்திக்காய், வாழைக்கச்சல், அரைக்கீரை, முருங்கைப்பிஞ்சு, வாழைப்பூ, தூதுவளங்காய் வத்தல் இவைகளைக் கூட்டவும்.

### நீர்க்கட்டுக்குத் தைலம்

| | |
|---|---|
| மாவிலங்கைவேர் | 1 பலம் |
| நிலப்பனைவேர் | 1 பலம் |
| கொடிவேலிவேர் | 1 பலம் |
| பூண்டு | 1 பலம் |
| மிளகு | 1 பலம் |
| வெல்லம் | 1 பலம் |

இவைகளைக் கல்வத்திலிட்டு இடித்து, முடக்கொத்தான் சாறுவிட்டு நன்றாக அரைத்து, நல்லெண்ணெய் 1 படியுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி, மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும்.

தினம் இவ்வெண்ணெயைக் கடுகுடனே வண்டலுடன் ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ளவும். ஏழு நாட்களில் நீர்கட்டு நீங்கும். உப்பு, புளி ஆகாது. கைகண்டது.

| | |
|---|---|
| பொரித்த வெங்காரம் | விராகன் 2 |
| சுத்திசெய்த சாதிலிங்கம் | விராகன் 2 |

| | |
|---|---|
| திப்பிலி | விராகன் 2 |
| மிளகு | விராகன் 2 |

இவைகளைப் பொடித்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு, 3 நாட்கள் விடாமல்அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டைகள் செய்து, நிழலில் உலர்த்தவும். தக்க அனுபானத்திலிட நீர்க்கட்டு நீங்கும்.

### 13 வித சன்னிக்கும் மாத்திரை

| | |
|---|---|
| சுத்திசெய்த கெந்தகம் | வராகன் 2 |
| சுத்திசெய்த அரிதாரம் | வராகன் 2 |
| சுத்திசெய்த ரஸம் | வராகன் 2 |
| சுத்திசெய்த நாபி | வராகன் 2 |
| சுத்திசெய்த மனோசிலை | வராகன் 3 |
| சுத்திசெய்த சாதிலிங்கம் | வராகன் 10 |
| பொரித்த வெங்காரம் | வராகன் 3 |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு, நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து, பின்பு மற்ற மருந்துகளைத் தூளாக்கிக்கொண்டு, எலுமிச்சம்பழச்சாறு விட்டு 3 நாட்கள் அரைக்கவும். பின்னர், இஞ்சிச்சாறுவிட்டு 3 நாட்கள் அரைத்துக் குண்டுமணிப் பிரமாணமுள்ள உருண்டைகளாக உருட்டு நிழலிலுலர்த்திக்கொள்ளவும். சன்னி 13 க்கும் இஞ்சிச் சாற்றில் 2 மாத்திரைகள் கொடுக்கவும். வாதநோய்களும் தீரும். பத்தியமாக இருக்கவும்.

### சயம், இருமல், சுவாசத்திற்குத் "திப்பிலிச் சூரணம்"

| | |
|---|---|
| திப்பிலி | கிராம்பு |

இவ்விரண்டையும் சமனெடையெடுத்து தேன்விட்டு அந்தி சந்தி 3 நாட்கள் கொடுக்கவும். பசுவின் பால், நெய் கூட்டவும். பருப்புக்கீரை கூட்டவும். கைகண்டது.

காசத்திற்குப் பொடுதலைச் சாற்றில் கொடுக்கவும்.

### வயிற்றுக் கடுப்பிற்கு, வாதத்திற்குக் கல்கம்

| | |
|---|---|
| சித்தாமணக்கங்கொழுந்து | ஏழு |
| சுண்ணாம்பு | ஒரு பாக்களவு |

இவ்விரண்டையும் அரைத்து எருமைத்தயிரில் 3 நாட்களோ அல்லது 5 நாட்களோ கொடுக்கவும்.

**பத்தியம்**: உப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

### இளம்பிள்ளை வாதத்திற்கு எருக்கந்தைலம்

| | |
|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் | 1 படி |
| புளிஇலைச்சாறு | 1 படி |
| ஈருக்கம்பால் | 1 படி |

இம்மூன்றையும் ஒரு பாத்திரத்திலிட்டு, மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும். சீம்பியகாலுக்கு பூசுகையில் 3 துளி வேலிப்பருத்திச்சாறுவிட்டுக் குழைத்துப் பூசவும்.

### கழிச்சல், உழலைக்குக் கஷாயம்

| | |
|---|---|
| ஆடுதீண்டாப்பாளைவேர் | புங்கம்வேர் |
| கொடிவேலிவேர் | கருவேப்பிலைஈர்க்கு |
| முக்காவேளைவேர் | வில்வவேர் |
| ஆயில்யபட்டை | சுக்கு |
| திப்பிலி | கடுக்காய்த்தோல் |
| செவ்வியம் | |

இவைகள் வகையொன்றுக்கு 1 பலம் வீதமெடுத்து, நிழலுலர்த்தலாக உலர்த்திக் காயவைத்து இடித்து வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது 2 குத்தளவெடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 பங்கு ஜலம் சேர்த்து ஒரு பங்காக வற்றவைத்து, தினம் 3 வேளைக்குப் பருகவும்.

கழிச்சல், உழலை நிற்கும்.

### சன்னியில் வியர்வை கண்டால் "பூச்சு" மருந்து

| | |
|---|---|
| தைவேளைவேர் | மாவிலங்கைவேர்ப்பட்டை |
| முருவிலிவேர்ப்பட்டை | வசம்பு |
| பூண்டு | |

இவைகளெல்லாம் சரியெடையெடுத்து நன்றாக அரைத்துக் கொதிக்கவைத்துப் பத்தாகப்போடவும். சதகுப்பையும் கூட்டிக்கொள்ளலாம். வியர்வை நிற்கும்.

### வலிப்பிற்குக் குளிசம்

| | |
|---|---|
| அத்திவேர் | ஆலம்வேர் |
| அரசம்வேர் | |

இவைகளின் வடக்கு நோக்கிப் போகும் சல்லிவேரைக் கெல்லி எடுத்துச் சாம்பிராணிப்புகை காட்டி,, மூன்றையும் சரிநீளமாக எடுத்து, முறுக்கி, இடுப்பில் கட்ட வலிப்புத் தீரும்.

### நீரடைப்பிற்கு மருந்து

| | |
|---|---|
| ஈர வெங்காயம் | ½ பலம் |
| கோதுநீக்கிய பழம்புளி | ½ பலம் |

இரண்டையும் நன்றாக அரைத்து, ஆமணக்கெண்ணெய் ½ சேர் விட்டுக் குழப்பிக் கொடுக்க, நன்கு பேதியாகிச் சிறு நீர் இறங்கும். மூத்திரப் பையிலுள்ள கல்லும் தெரித்து விழும்.

### வங்க பற்பம்

சுத்திசெய்த காரீயத்தைத் தகடாய்த்தட்டிஅகத்தியிலை போலே கத்தரித்துக் கொள்ளவும். ஒரு கோணிச்சாக்கைச் சதுரமாக நறுக்கி எடுத்துக்கொண்டு, அதன்மேலே வேப்பிலையைப் பரப்பி

அதன்பேரில் கத்தரித்த ஈயத்தகடுகளைப் பரப்பி, மேலும் மீவப்பிலையை ஒரே சீராகப் பரப்பி அதன் மேலே மறுபடியும் ஈயத்தகடுகளைப் பரப்பவும். இவ்வாறு நாலு முறை அல்லது ஆறு முறை ஒன்றன் மேலொன்றாக அடுக்கவும். கூடியவரை அடுக்குகள் கலையாமல் அந்தக்கோணியைச் சுருட்டி, நூல் சுத்தி நன்றாகக் கட்டிச் சீலைமண் செய்து, காயவைத்து, ஒரு குழியை வெட்டி அதில் எருமுட்டையை அடுக்கிக் கஜபுடம் போடவும். ஆறவிட்டு, எடுத்துப் பார்க்கத் திருநீறுபோல் பற்பம் கிடைக்கும். ஒரு புடத்தில் பற்பமாகாவிடில் மறுபுடம் இவ்வாறு போடவும். மேக நோய்கள், குஷ்டம், தோல் வியாதிகள் தீரும்.

## பவுத்திரத்திற்கு மருந்து

பசுவின் வெண்ணெய் வெங்கலத் தாளத்தின் பின்புறத்தில் போட்டுக் கோவையிலைச் சாறு பிழிந்து, கழற்சிப் பருப்பும் சேர்த்து, செப்புக் குழவியினால் களிம்பாகும்வரை கையோயாமல் அரைக்கவும். இந்தக்களிம்பை வழித்து, ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு குன்றிப் பிரமாணம் 3 நாட்கள் உள்ளுக்குக் கொடுத்து புண்ணிலும் போடவும். சீழ் வெளியாகும். பவுத்திரம், புரையோடும் புண் முதலியவை தீரும்.

## பித்தவெட்டைக்கு வெங்காய ஓமக்கஷாயம்

| | |
|---|---|
| ஈர வெங்காயம் | 1 பலம் |
| குரோசாணி ஓமம் | ½ பலம் |

இவ்விரண்டையும் கஷாயம் வைத்து 3 நாட்கள் கொடுக்கவும். வெங்காரமும் பொரித்துக் கொடுக்கவும்.

வெள்ளை, வெட்டைகள் தீரும்.

## சுரத்திற்கு நாபிக்குளிகை

பச்சைநாபி வேண்டிய அளவு கொண்டுவந்து, வெள்ளாட்டுக் கோமியத்தில் (மூத்திரத்தில்) ஊறப்போட்டு மறுநாளெடுத்துக் கல்வத்திலிட்டு, அரைத்து உளுந்துப் பிரமாணம், உருண்டைகள் செய்து, நிழலிலே உலர்த்தித் தக்க அனுபானத்தில் கொடுக்கச் சுரம் நிற்கும்.

**குறிப்பு:** நாபிக்கிழங்கு விஷமுள்ள சரக்காகும். சாக்கிரதையாக உபயோகிக்கவும்.

## சந்நி 13க்கும் "நிர்முண்டத் தைலம்"

| | |
|---|---|
| அஞ்சலைநொச்சிச்சாறு | ½ படி |
| சங்கிலைச்சாறு | ½ படி. |
| சாறணைச்சாறு | ½ படி |
| குப்பைமேனிச்சாறு | ½ படி |
| வேலிப்பருத்திச்சாறு | ½ படி |
| எட்டிப்பழச்சாறு | ½ படி |
| சங்கங்குப்பிச்சாறு | ½ படி |
| கழற்சிக்கொடிச்சாறு | ½ படி |
| மலைவேப்பிலைச்சாறு | ½ படி |
| எருக்கிலைச்சாறு | ½ படி |
| நரிக்கொன்றைச்சாறு | ½ படி |

இவைகளை ஒன்றுகலந்து, வேப்பெண்ணெய் 2 படியுடன் கூட்டி,

| | |
|---|---|
| திப்பிலி | விராகன் 2 |
| வசம்பு | விராகன் 2 |
| மரமஞ்சள் | விராகன் 2 |
| கண்டத்திப்பிலி | விராகன் 2 |
| பூண்டு | விராகன் 1 |

இவைகளை இடித்துச் சாற்றுடன் அரைத்துக் குழப்பி, அடுப்பின் மேலேற்ற எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இத்தைலத்தில் ஒரு துட்டளவு உள்ளுக்கும் கொடுத்து பூசவும்.

சன்னி பதிமூன்றும் தீரும்.

### சூலைக்கட்டிற்கு, புண்ணிற்குக் கள்ளிப்பால் எண்ணெய்

| | |
|---|---|
| திருகுக்கள்ளிப்பால் | ½ படி |
| நல்லெண்ணெய் | ¼ படி |

இவ்விரண்டையும் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் வடிக்கவும்.

7 நாட்களுக்குத் தினம் ஒரு துட்டளவு உள்ளுக்குக் கொடுத்துப் புண்ணிலும் போடவும்.

**பத்தியம்**: உப்பு, புளிப்புத் தவிர்க்கவும்.

### மருந்தீட்டிற்கும், ஸ்திரீ வச்யத்திற்கும்

கழல் வண்டுடன், நன்னாரிவேர், சமன்கூட்டி அரைத்து உருண்டை பண்ணிக் கொடுக்க ஸ்திரீ வசமாவாள்.

**முறிவு மருந்து**: தேங்காய்ப்பால் கொடுக்கத் தீரும்.

### எலிகடி, ஈளை, இருமலுக்குப் புகை

ஊமத்தைச் செடியைச் சமூலமாக்கிப் பிடுங்கிகாயப்போட்டு சிறு சிறுதுண்டுகளாக நறுக்கி ஒரு பானையில் போட்டு, ஒரு குழி வெட்டிக் குழிக்குள் அப்பானையை வைத்துக் கழுத்தளவு மூடி

அனலிலிட்டுப் புகைக்கவும். (அதாவது உடலில் மட்டும் ஊமத்தம் புகை படும்படி ஒருதுப்பட்டியினால் மூடிக்கொள்ளவும் ) இவ்வாறு 4 அல்லது 5முறை செய்யவும்,

எலிகடி விஷங்கள் தீரும். மோறுஞ்சோறு கொடுக்கவும்.

## இரத்த பித்தம், இரத்தக் கழிச்சலுக்குச் "சாதீபலாதி சூரணம்"

| | | |
|---|---|---|
| தாமரைவளையம் | | பலம் 1 |
| விளாமிச்சம்வேர் | | பலம் 2 |
| சாதிப்பத்திரி | | வராகன் 2 |
| ஏலக்காய் | | வராகன் 1 |
| சண்பகப்பூ | | பலம் 1 |
| சிறுநாகப்பூ | | பலம் 1 |
| அதிமதுரம் | | வராகன் 2 |
| சந்தனத்தூள் | | பலம் 1 |
| கடுக்காய் | (எண்ணிக்கையில்) | 20 |
| கற்கடகசிசங்கி | | வராகன் 8 |
| கஸ்தூரி மஞ்சள் | | வராகன் 8 |
| ஓமம் | | வராகன் 10 |
| வெட்டிவேர் | | பலம் 1 |
| சாதிக்காய் | | பலம் 3 |
| கிராம்பு | | வராகன் 4 |
| லவங்கப்பட்டை | | பலம் 1 |
| கோஷ்டம் | | பலம் |
| பெருங்காயம் | | வராகன் 5 |
| பூலாங்கிழங்கு | | வராகன் 8 |
| கோரோசனை | | வராகன் 2 |
| தான்றிக்காய் | (எண்ணிக்கையில்) | 20 |

| | |
|---|---|
| திருதேக்கு | வராகன் 8 |
| திப்பிலி | வராகன் 8 |
| நற்சீரகம் | வராகன் 10 |
| வாயுவிடங்கம் | வராகன் 10 |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு ஒரு குந்தளவெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

இரத்தக்கழிச்சல் நிற்கும். தினம் 3வேளையுட்கொள்ளவும்.

### விஷத்திற்கு "ரஸமெழுகு"

| | |
|---|---|
| சுத்திசெய்த ரஸம் | வராகன் 2 |
| சுத்திசெய்த தாளகம் | வராகன் 2 |
| சங்கன் கரி | வராகன் 2 |
| பொரித்த துரிசு | வராகன் 2 |
| சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் | வராகன் 2 |

இவைகளைக் கல்வத்திலிட்டு, நுணுக்கி வேப்பெண்ணெய் வேண்டிய அளவு வார்த்து 1 நாள் நன்றாக அரைத்துக் கொண்டு சிமிழில் பத்திரப்படுத்தவும். மெழுகு பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

விஷத்திற்கு உளுந்தளவு கொடுக்கவும்.

குறிப்பு: சங்கன் - ஆடுதீண்டாப்பாளையின் கரி.

### வலிப்பிற்கு மருந்து

நீர்ப்பாம்புத் தலையும், சாரைப்பாம்புத் தலையும் நல்லபாம்புத் தலையும் (இம்மூன்றுவகைப் பாம்புகளின் பற்களைப் பிடுங்கிவிட்டு) வெய்யிலிலே நன்றாக உலர்த்தவும். கல்லுரலிலிலே சரிசமனாகத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும். வலிப்பு வந்தால் சிறிது தூளெடுத்துத் தணலிலிட்டுமுகத்தில் படும்படி புகைக்கவும். இப்படி 3 முறை புகைக்க வலிப்பு நிற்கும். சிறிதளவு தூளேஉபயோகிக்க வேண்டும்.

## கண்டமாலை, பவுத்திரத்திற்குச் "சித்திரமூல எண்ணெய்"

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | நாயுருவிவேர் |
| பருத்திவேர் | குப்பைமேனிவேர் |

இவைகள் வகைக்கு 2 வராகன்

| | |
|---|---|
| பூண்டு | வசம்பு |

இவைகளையும் 2 வராகனெடை எடுத்து இடித்து

| | |
|---|---|
| ஊமத்தையிலைச்சாறு | படி |
| வேப்பெண்ணெய் | படி |

இவைகளுடனிட்டு எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த எண்ணெயைப் புண், புரைகளிலிடவும்.

உயர்ந்த பெருங்காயம் வராகன் 4 கூடப்போட்டு உபயோகிக்கலாம்.

பெருமருந்து இலை, ஈரவெங்காயம் இவ்விரண்டையும் இடித்து 3 நாட்கள் பவுத்திரப் புண்ணில் வைத்துக்கட்டி அவிழ்த்துவிட்டும் இந்த எண்ணெயைப் போடவும். ஆறிப்போகும்.

## தாமிர பற்பம்

சுத்திசெய்த தாமிரத்தைத் தகடாகத் தட்டிக் கெந்தகத்தை எருக்கிலைச் சாற்றிலரைத்து விழுதாக்கி, அதற்குள் தாமிரத்தகட்டை பொதிந்து காயவைக்கவும். ஒரு பானையினடியில் 7 எருக்கிலைகளை வைத்துப் பானை வாய்க்கேற்ற மடக்கினால் மூடிச்சீலைமண் செய்து 1 கஜம் நீள, அகல, உயரம் இருக்கும்படி எருவடுக்கி அதன் மத்தியில் வைத்துப் புடம் போடவும். பற்பமாகும்.

மேகம், தோல் வியாதி, க்ஷயம் முதலானவைகளுக்கு நல்லது. குன்றியளவு தேனில் உட்கொள்ளவும்.

## சன்னி வலிப்பு, புறவீச்சு, உள்வீச்சுக்குக் "குறட்டைத் தைலம்"

| | |
|---|---|
| சிறுகுறட்டைக்கிழங்கு | பலம் 1 |
| நல்லவேளை வேர் | பலம் 1 |
| சீந்தில்வேர் | பலம் 1 |
| பூண்டு (எண்ணிக்கையில்) | 1 |

இவைகளையெல்லாம் நறுக்கி அரைத்து, வேப்பெண்ணெய் 1 சேர் விட்டுப் பதத்தில் வடித்து உள்ளுக்கும் கொடுத்து, மேலும் பூசவும், பத்தியமாக இருக்கவும்.

**குறிப்பு:** புறவீச்சு, உள்வீச்சு இரண்டும் சன்னி வகைகளைச் சேர்ந்தவை.

## பேதிக்கு மருந்து (கடுகுரோகிணி கல்கம்)

| | |
|---|---|
| கடுகுரோகிணி | சுக்கு |
| இந்துப்பு | கல்மதம் |

இவைகளை வகைக்கு 1 வராகன் எடுத்து, ஆட்டு மூத்திரம் விட்டரைத்துக் கொடுக்கப் பேதியாகும். வயிற்றுக்கோளாறுகள் தீரும்.

## சன்னி, இசிவிற்குச் "சித்திரமூலக் கஷாயம்"

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | மாவிலங்கைவேர் |
| முருங்கைவேர் | சிறு உவாய்வேர் |
| பெருஉவாய் (உகா வேர்) | வேலிப்பருத்திவேர் |
| எருக்கம்வேர் | நல்லவேளை வேர் |
| சங்கம்வேர் | |

இவைகள் வகையொன்றுக்கு எலுமிச்சையளவு அரைத்துக் கொண்டு, அதனுடன்

வசம்பு 2 வராகனும் சித்தரத்தை 2 வராகனும் கூட்டியரைத்துக்கொண்டு, ஒரு சட்டியை காயவைத்து அதில்

மேற்சொன்ன மருந்துகளையெல்லாம் தண்ணீரில் கலந்து கொதிக்கவைத்துப் பிறகு இறக்கவும். இதனுடன் கண்டத்திப்பிலி வராகன் 2 வறுத்துப் பொடி பண்ணி உள்ளி வராகன் 5 சேர்த்து அரைத்து, கஷாயத்துடன் சேர்த்து, 3 நாட்கள் தினம் 2 வேளை கொடுக்கவும்.

சன்னி, இசிவு முதலானவை தீரும்.

| | |
|---|---|
| கொடிவேலிவேர் | மாவலிங்கைவேர் |
| வேலிப்பருத்திவேர் | பெருஉவாய்வேர் |
| சிறுஉகாவேர் | சங்கங்குப்பிவேர் (நீலம்) |
| சங்கம்வேர் | அஞ்சிலைநொச்சிவேர் |
| கருநொச்சிவேர் | வெள்ளைக்காக்கணம் வேர் |
| வேளைவேர் | அவுரிவேர் |

இவைகள் வகையொன்றுக்குப் பலம் 5 எடுத்து இடித்துத் தண்ணீர் விட்டரைத்து, விழுதாக்கி, இந்துப்பு 2 விராகன் போட்டுத் தண்ணீர் 8 மடங்கு விட்டு, ஒரு பங்காக வற்ற வைத்து, இறுத்து உள்ளுக்குங் கொடுத்து மேலும் பூசவும். சன்னிகள் பதிமூன்றுந் தீரும்.

**குறிப்பு**: இது நமச்சிவாயம் பிள்ளை சொன்ன மருந்தாகும்.

## பவுத்திரத்திற்கு உள்ளுக்கு "இலுப்பைப் புண்ணாக்குக் கல்கம்'

இலுப்பைப் புண்ணாக்கு கொட்டைப் பாக்களவு எடுத்துத் தண்ணீர் விட்டு, நேகவரைத்துத் தவிட்டில் புரட்டி மூன்று நாட்களுக்கு விழுங்கவும்.

மேலுக்குப்போடச் சங்குச் சுண்ணாம்பு, அரப்பு (இலுப்பைப் புண்ணாக்கு) வெந்த மனிதன் எலும்பு இம்மூன்றையும் உரைத்துப் புண்ணில் போடவும்.

## சுரத்திற்குக் "குன்றிக்குளிகை"

வெள்ளைக் குண்டுமணியைத் தண்ணீரில் ஊறப்போட்டு

எடுத்துக்கொண்டு அதனுடன் நாய்வேளைச் சாறு விட்டரைத்து, மிளகுப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தித் தக்க அனுபானத்தில் கொடுக்கவும். புளி, புகையிலை தவிர்க்கவும்.

## காதுவலி, மண்டைக்குத்தலுக்கு "வலம்புரிக்காய்த் தைலம்"

| | |
|---|---|
| வலம்புரிக்காய் | விராகன் 4 |
| இந்துப்பு | விராகன் 10 |
| அகில்கட்டை | விராகன் 10 |
| தேவதாரம் | விராகன் 10 |
| கொத்துமல்லிவிதை | விராகன் 10 |
| மரமஞ்சள் | விராகன் 10 |
| சுக்கு | விராகன் 10 |
| மிளகு | விராகன் 10 |
| குரோசானிஓமம் | விராகன் 10 |
| சிறுநாகப்பூ | விராகன் 10 |

இந்த மருந்துகளையெல்லாம் இடித்து அம்மியிலிட்டுப் பசுவின் பால் 1 படியும், இளநீர் 1 படியும் சேர்ந்த கலவையை விட்டரைத்து, நல்லெண்ணெய் 1 படியும் விட்டு 7 நாட்களுக்கு வைக்கவும். பின்னர் அடுப்பின் மேலேற்றி மெழுகு பதத்தில் காய்ச்சி இறக்கவும்.

இதனை தலைக்குத் தேய்த்துக்கொண்டு, அரப்பு அல்லது பாசிப்பயறு அரைத்துத் தேய்த்துக்கொண்டு முழுகவும். புளி, புகையிலை நீக்கவும்.

தலைநோய், தீராத மண்டைக்குத்தல், காதுவலி, இவைகள் தீரும்.

## சுயமக்கினிச் செந்தூரம்

நாலுகழஞ்சு அரப்பொடியும் நலமாங்காந்த மைங்கழஞ்சு

சாலச்சூதம் அதற்குரெட்டி நெல்லிக்கெந்த மதற்குரெட்டி
ஏலங்குமரிப்பால்வார்த்து யிருந்தங்கரைத்து அடையாக்கித்
தாலந்தன்னில் தப்பிவைக்கத் தணலாயெரியுங் கண்டாயே. (க)

கண்டங்குன்மம் பெருவயிறு கவுசைகெண்டை நீராமை
உணடதருத புளித்தேப்பம் ஊத்தைக்கிராணி யுள்மூலம்
உன்றவாதம் விரைவாதம் உலத்துஞ்சன்னி யதிசாரம்
இன்ரேயோடும் பணவெடைதான் விரைந்து யிஞ்சிச்சாற்றிலிடே..

| | |
|---|---|
| (இ-ள்.) சுத்திசெய்த அரப்பொடி (இரும்புத்தூள்) | 4 கழஞ்சு |
| சுத்திசெய்த காந்தம் | 5 கழஞ்சு |
| சுத்திசெய்த பாதரஸம் | 10 கழஞ்சு |
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | 20 கழஞ்சு |

இவைகளுள் முதலில் இரஸத்தையும், கெந்தகத்தையும், கல்வத்திலிட்டு, அரைத்து கஜ்ஜலியாகச்செய்து, பின்னர் மற்ற இரு மருந்துகளையும் போட்டு நன்றாகக் கற்றாழைச் சாறுவிட்டு 2 நாட்கள், கையோயாமலரைத்து, அடையாகத் தட்டி ஒரு தாளத்திலப்பி, வெய்யிலில் வைக்கவும். நன்றாகச் சூடாகிப் புகைச்சலுடன் செந்தூரமாகும்.

இச்செந்தூரத்தில் ஒரு பணவெடை (3 குன்றி) எடுத்து இஞ்சிச் சாற்றில் கொடுக்கக் குன்மம், பெருவயிறு, வயிற்று நோய், நீராமை, சாப்பாடு சீரணிக்காமல் உண்டாகும் புளித்தேப்பம், வயிறு பேதி, உள்மூலம், விரைவாதம், வாதரோகங்கள், சன்னி, அதிஸாரம் முதலானவைகள் அனைத்துந் தீரும்.

முற்றிற்று.

# "வைந்தியத்திரட்டு" என்ற இந்நூலிலுள்ள மருந்துகளின் அகராதி அட்டவணை

(பிறைக்குறிக்குள் காணப்படும் மருந்துகள், அவைகளின் முதல் மருந்துச் சரக்கைக் குறிப்பன)


| நெ. | மருந்துகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | (அகத்தியிலை)ச் சாறு எண்ணெய் (விஷகடிக்கு) | 116 |
| 2. | அக்கினிகுமாரன் (பக்கசூலை, பாண்டு ரோகத்திற்கு) | 21 |
| 3. | அக்கினி மந்தம், மூலவாயுச் சூலையின் குணம் | 63 |
| 4. | அட்டுப்படுவன் எலிப்படுவனுக்கு (குளப்பாலைவேர் மருந்து) | 71 |
| 5. | அதிவிடயத்தயிர் மருந்து (வயிற்றுக்கடுப்பிற்கு) | 32 |
| 6. | அதிமதுர வெண்ணெய் (தலைநோய், ஒருத்தலைவலிக்கு) | 49 |
| 7. | (அத்திவேர்) குளிசம் (வலிப்பிற்கு) | 164 |
| 8. | (அப்பக்கோவையாதி)ச் சூரணம் (விரியன் கடிக்கு) | 156 |
| 9. | அப்பிரகச் செந்தூரம் (இருதய நோய்க்கு) | 148 |
| 10. | அப்பிரகச் செந்தூரத்தினால் தீரும் வியாதிகளும் அனுபானமும் | 149 |
| 11. | அமுக்குரா எண்ணெய் (காதில் ஈ புகுந்தால்) | 18 |
| 12. | அயக்காந்தச் செந்தூரம் (பாண்டு, சோகைக்கு) | 74 |
| 13. | அயக்காந்தக் கடுகு (சோகை, காமாலைக்கு) | 8 |
| 14. | (அரசம்பட்டைக்) கஷாயம் (வயிற்றுக் கடுப்பிற்கு) | 155 |

15. அரளியிலைக்கட்டு மருந்து பவுத்திரத்திற்கு) 96
16. அரிதார பற்பம் (ஈளை, இருமலுக்கு) 150
17. ஆடுதீண்டாப்பாளை எண்ணெய்
(அஸ்தி காங்கைக்கு) 33
18. (ஆடுதீண்டாப்பாளைவேர்) (பூச்சு மருந்து)
விரியன் கடிக்கு 156
19. (ஆடுதீண்டாப்பாளை வேராதி)க் கஷாயம்
(கழிச்சல் உழலைக்கு) 163
20. ஆயில்யப்பட்டையெண்ணெய்
(தலைக்குத்து மயக்கத்திற்கு) 146
21. (ஆவாரையுருண்டை) சலக்கழிச்சலுக்கு 91
22. இச்சாபேதி ரஸ வடகம் (குன்ம ஜ்வரத்திற்கு) 40
23. இண்டந்தைலம் (முகமும் தலையும் வீங்கின கரப்பான்
நோய்க்கு 129
24. இரஸ கர்ப்பூர மருந்து (நீர்க்கட்டு, கல்லடைப்பு, இரத்தப்
பிரமேகம், மலச்சிக்கல், வயிற்றுவலிக்கு) 26
25. இரஸ கர்ப்பூர வடகம் (கிரந்திப்புண், சூலை
வெடித்த புண்ணிற்கு) 75
26. இரஸ கர்ப்பூர பதங்கம் (புண்கள், சலரோகம் 20,
வாதசூலைக்கு) 14
27. இரஸ பற்பம் செய்யும் முறை 153
28. இரஸ பதங்கம் செய்யும் முறை 20
29. இரஸ மெழுகு (விஷத்திற்கு) 169
30. இரஸம் முறிய (பருத்திக்காயெண்ணெய்) 8
31. (இரஸவங்கப்) புகை (புண்ணுக்கு) 139
32. இரஸ தாளகச் செந்தூரம் (மந்தார காசம், சுவாச காசம்
பீனஸ காசத்திற்கு) 77
33. இரஸாதி உருண்டை (அக்கினி மந்தம், சூலை
வாயுவிற்கு) 63

34. இரஸாதிப்புகை (தலைநோய், கண்ணோய் தீர) 54

35. இராஜப் பிளவைக்கு (நண்டுச்சாறு மருந்து) 72

36. இராஜப்பிளவைக்கு மருந்துகள் 93

37. இலைக்கள்ளி வேர் கல்பம் 139

38. இலைக்கள்ளிச் சூரணம் (ஈளை இருமலுக்கு) 96

39. இலுப்பைப்பட்டை வடகம் (வயிறு கழிய) 126

40. இலுப்பைப் புண்ணாக்குக் கல்கம் பவுத்திரத்திற்கு உள்ளுக்கு) 172

41. (இலுப்பைப்பூக்) கஷாயம்) (பித்த சுரத்திற்கு) 101

42. இளைத்த பிள்ளைகளுக்குக் கட்ட யந்திரம் 98

43. (ஈர வெங்காயக் கல்கம்) நீரடைப்பிற்கு 164

44. ஈர வெங்காய எண்ணெய் (பிள்ளைப் பிணிக்கும் காதில் சீழ் வருகிறதற்கும்) 27

45. உய்யகுண்டான் எண்ணெய் (கரப்பானுக்கு) 89

46. உள்ளிக்கடுகு (குன்ம சூலை, வாத சூலைக்கு) 100

47. ஊமத்தைப்புகை, (எலிகடி, ஈளை இருமலுக்கு) 167

48. எருக்கிலை ஓமக்கடுகு (வாயு குன்மத்திற்கு) 18

49. எருக்கம்பால் மருந்து 10

50. எருக்கந்தைலம் (இளம்பிள்ளை வாதத்திற்கு) 163

51. எலிகடிக்கு மருந்துகள் 15

52. எலிகடிக்கு (18 வித எலிகடிகளுக்கும் பொதுவானது 18

53. எலிகடிக்குப் (பொதுவான மருந்து) வேறு 18

54. (எலுமிச்சம்பழக்) கல்கம் (பித்தம், கழிச்சலுக்கு) 105

55. (எலும்புக்) களிம்பு (கட்டி முதலியவைகளுக்கு)

56. எல்லாவித விஷ கடிக்கும் (சாறு மருந்து) 72

57.ஏலாதி எண்ணெய் (மாந்தத்திற்கு) 124

58. ஏலாதி தைலம் (பல ரோகங்ளுக்கும் மூழ்க 143

59. ஏலாதி மாத்திரை (கண் வியாதிகளுக்கும்.) 54

60. கண்டாமலக லேகியம் (பாண்டு காமாலைக்கு) 42

61. கண்டூஷம் (மறுக்காரை) நேத்திர ரோகத்திற்கு 55

62. கண்டூஷ மாத்திரை (நேத்ர ரோகங்களுக்கு) 53

63. கடுகுரோகிணி கல்கம் (பேதிக்கு) 171

4. சுதகாதிக்குளிகை (கண்ணோய்களுக்கு) 51

65. கத்தாழை எண்ணெய் (மாந்தத்திற்கு) 125

66. கபால வலியின் குணமும் சம்பீரத்தைலமும் 138

67. கபாட மாத்திரை (மூலக்கடுப்பிற்கு) 160

68. கரிசாலை எண்ணெய் (நேத்ரவாயுவிற்கு) 48

69. கருங்கோழிச் சூரணம் (விப்புருதி,
பெருவியாதிக்கு) 23

70. கருவங்க பற்பம் (ஈளை, இருமலுக்கு) 150

71. கரும்பு நெய் (பைத்தியத்திற்கு) 87

72. கர்ப்பூராதிச் சூரணம் (பிரமேகம்,
வாதரோகத்திற்கு) 92

73. (கலப்பைக்கிழங்கு) ஒத்த'_ம் (இசிவிற்கு) 121

74. கல்லடைத்த பேருக்கு மருந்துகள் 60

75. கல்லுச் சுண்ணாம்புத்தெளிநீர் மருந்து
(மலட்டு வலிக்கு) 95

76. கழற்சிப்பருப்பு, உறைமருந்து (ஆறாதபுண்,
புரை, விப்புருதிக்கு) 20

77. கழுதை விட்டைக் குழித்தைலம் (விஷக் கடிக்கு
மேலுக்கு) 89

78. களி (பிரிந்த ஸ்திரீயுடன் சேர) 151

79. கள்ளிப்பாலெண்ணெய் (சூலைக்கட்டு,
புண்ணிற்கு) 167

80. (கஸ்தூரி) நஸ்யம் (பீனிஸத்திற்கு) 65

81. காக்கண மாத்திரை (இரண சுக்ரனுக்கு) 47

82. காடிக்காரக மாத்திரை (பவுத்திரம், மூலவெட்டைக்கு) 145

83. காந்த ரஸ உருண்டை (வெண் குஷ்டத்திற்கு) 25

84. காய்ச்சலுடன் கூடிய கழிச்சலுக்கு மருந்துகள் 154

85. காரீயசெந்தூரம் (நீரடைப்பு, சதையடைப்பிற்கு) 46

86. காரீய பற்பம் (கருவங்க பற்பம்) ஈளை, இருமலுக்கு) 150

87. காரீய பற்பம் (வேறு) (மேகம் இருபதற்கும்) 150

88. கீழாநெல்லித் தைலம் (பீனஸத்திற்கு) 65

89. குக்கிலாதிச் சூரணம் (குன்மம், ஆமசூலை குன்மசூலைக்கு) 92

90. குண்டலாதி லேகியம் 45

91. குமரி பற்பம் (சுயமாக்கினி) 102

92. குழையடி மந்த்ரம் (சில்விஷத்திற்கும் வீக்கம் முதலதான வியாதிகட்கும்) 68

93. குளப்பரளைவேர் மருந்து (அட்டுப்படுவன், எலிப் படுவன், வெடிக்கரகப்பானுக்கு) 71

94. குளிர் தாமரைக்கல்கம் (ஸ்திரீகளின் குருவி தோஷத்திற்கு) 27

95. குளிதோஷக்குறிகள் 98

96. குளிதோஷத்திற்கு யந்த்ரம் 98

97. குறட்டைத்தைலம், (சன்னி வலிப்பு, புரவீச்சு உள்வீச்சுக்கு 171

98. குன்றிக்குளிகை (ஜ்வரத்திற்கு) 172

99. குன்றிக் கல்கமும், கஷாயமும் (நீராமை வளராமைக்கு) 127

100 கூஷ்மாண்டக் கிருதம் (நீராமைக்கு) 141

101. (கெந்தகாதிச்) சூரணம்
(புண்ணிற்குப் பொடி) 31
102. (கெந்தகாதி) மாத்திரை (12 சன்னிக்கும்) 162
103. கெந்தக பற்பம் (சூலைக்கு) 149
104. கெந்தக எண்ணெய் (விப்புருதிக்கு) 121
105. கெந்தகச்சுடர் தைலம் (சுவாசகாசத்திற்கு 100
106. கெந்தக மருந்து (பவுத்திரத்திற்கு) 116
107. கெந்தக மெழுகு (குஷ்டம், சொறிசிரங்கு) 115
108. கையாந்தகரை (எண்ணெய்) இருமல், மூச்சு, குன்மம்
நெஞ்செரிச்சல், கிராணிக்கு) 86
109. கொடிவேலிச் சூரணம் (சூலை, குன்மம்,
வெப்புப்பாவைக்கு) 1
110. கொடிவேலி மருந்து (ஆட்டுப்படுவன்,
மாட்டுப்படுவன், எலிப்படுவனுக்கு) 95
111. (கொடிவேலி மருந்து) நெய் (சுவாசகாசம், உளமாந்தை
கிரந்தி, விப்புருதி, குன்மத்திற்கு 136
112. (கொடிவேலி வேர்) எண்ணெய் (வீங்கு கரப்பான்
வெடிகரப்பானுக்கு) 26
113. கொடிவேலி நெய் (விப்புருதி, எழுநாயிறுக்கு) 114
114. கொழுஞ்சி நஸ்யம் (கண்புகைச்சலுக்கு) 53
115. கொல்லங்கோவை பூச்சு (விரியன் கடிக்கு) 156
116. கொம்மட்டிக் கடுகு (குழம்பு, வயிற்றுக்கட்டி
குன்மம், மலபந்தம் சுவாசத்திற்கு) 105
117. கோதுமை வடகம் (அஸ்தி காங்கைக்கு) 33
118. கோரோசனை எண்ணெய் (சயம், காசம்
இருமலுக்கு) 110
119. கோரோசனை எண்ணெய் (சுழிகணத்திற்கு) 122

120. (கோரைக்கிழங்கு) கஷாயம் (பித்த ஜ்வரத்திற்கு) 101

121. (கோவையிலைச்சாறு வெண்ணெய்ப்) பூச்சு (பவுத்திரத்திற்கு) 165

122. (கோவைத்தண்டுப்) பால் மருந்து (நீரடைப்பிற்கு) 109

123. (சங்கம்பழ) லேபனம் (தாதுபுஷ்டிக்கு மேல்பூச்சு) 47

124. சங்காதி மாத்திரை (கண் வியாதி 96க்கும்) 56

125. சங்காதி மாத்திரை (காசம், படலத்திற்கு) 58

126. சங்காதி மாத்திரை (கண் ரோகங்களுக்கு) 155

127. சங்காதி மாத்திரை (கண் வாத ரோகத்திற்குக் கண்ணிலிடு மருந்து) 53

128. சங்கு பற்பம் 102

129. சந்தனாதி உருண்டை (கண்ணோய்க்குப் பூச்சு) 57

130. சந்திரப்பிரபா குளிகை (எலும்புருக்கிக்கு) 38

131. சந்நிக்கு மருந்துகள் (ஜ்வரத்திலுண்டாகும்) 71

132. சந்நி தொண்ணூற்றாறின் பெயர்கள் 110

133. சமரோசன்க் குளிகை 41

134. சமுத்திராப்பழக் கல்பம் 61

135. சம்பீரத்தைலமும் கபால வலியின் குணமும்) 138

136. (சரகுக்) கஷாயம் (விஷபாகம், மண்டைக் கரப்பானுக்கு) 83

137. சவுட்டுமண் மருந்து (வயிற்றுக் கட்டி, கெண்டை, நீராமைக்கு) 78

138. சாதிலிங்க வெண்ணெய் (காயத்திற்கு) 34

139. சாதிலிங்கப்புகை (நாசிரோகங்களுக்கு) 117

140. சாதிலிங்கப்புட்டு (விப்புருதிக்கு) 114

141. சாதீபலாதி சூரணம் (இரத்தப் பித்தம் இரத்தக் கழிச்சலுக்கு) 168

142. சாம்பிராணிப் பூச்சு (மருந்து) 3

143. (சாறணையாதி) எண்ணெய் (சன்னி மேக ரோகங்களுக்கு) 82

144. சாறணை உருண்டை (கண்ணோய்களுக்கு) 52

145. சாறணை எண்ணெய் (பவுத்திரத்திற்கு) 35

146. (சிஞ்சாதி) வடகம் (பித்த காசத்திற்கும் ரத்த காசத்திற்கும்) 32

147. சித்ரமூலக் கஷாயம் (சன்னி, இசிவிற்கு) 171
148. (சித்ரமூலாதி) சீத கஷாயம் (சீத ஜ்வரத்திற்கும்
வாதஜ்வரத்திற்கும்) 159
149. சித்ரமூல எண்ணெய் (கண்டமாலை,
பவுத்திரத்திற்கு) 170
150. சிரஸிலேற்படும் 96 வகை சந்நிகளும்
அவைகள் நிற்கும் நிலையும்) 110
151. சிறுகுறிஞ்சான் எண்ணெய் (சந்நி 13க்கும்) 84
152. (சிறுபூளைச்சாறு) மருந்து (பூவிழுந்த
கண்ணிற்கு) 157
153. (சிற்றாமணக்கங் கொழுந்து) கல்கம்
(வயிற்றுக் கடுப்பு, வாதத்திற்கு) 163
154. சீத கஷாயம் (குரல் கம்மலுக்கு) 118
155. சீத ஜ்வரத்திற்குக் கட்ட யந்திரம் 99
156. (சீந்தில்) ஸ்வரஸம் (சலக்கழிச்சலுக்கு) 91
157. சுடர்த்தைலம் (சன்னி 13க்கும் 8வித
இசிவிற்கும்) 120
158. சுண்டையிலைக் கஷாயம் (வயிற்றுக் கடுப்பிற்கு) 155
159. சுண்டையாதி நெய் (பித்த வெட்டைக்கு) 153
160. (சுண்டாயாதி) வடகம் (வயிற்றுக்கடுப்பிற்கு) 134
161. சுயமக்கினிச் செந்தூரம் 173
162. சுயமக்கினி (குமரிப் பற்பம்) 102
163. சுரமுராரி வெண்ணெய் (தாகச்சுரம்,
சீதச்சுரம் விஷச்சுரத்திற்கு) 37
164. (சுழல்வண்டு) மருந்து (மருந்தீட்டிற்கும்
ஸ்திரீ வச்யத்திற்கும்) 167
165. (செங்கதாரி) எண்ணெய் (சன்னி 13க்கும்) 90
166. (செப்பு நெருஞ்சிப்) பால் மருந்து
(கல்லடைப்பிற்கு) 97
167. (சேங்கொட்டை) எண்ணெய் (புண்,
சொறிக்குத்தலை முழுக) 135
168. (சைந்தவாதிச் உருண்டை (வயிற்றுவலி,
இசிவு சந்நிக்கு) 13

169. (சைந்தவாதிச்) சுருக்குச் சூரணம்
(வெள்ளோக்காளம் விக்கலுக்கு) 132

170. ஜயவிக்ரமரஸம் (13 வகை சந்நிகளுக்கும்) 40

171. ஜன்னிக்கு மருந்துகள் (சுரத்திலுண்டாகும் 71.

172. ஸர்வ ஜ்வராங்குச மாத்திரை )ஸகல
வியாதிக்கும்) 107

173 (டங்கண சிலாஜித்) நீர்கட்டிற்கு 60

174. தந்த வாயுவிற்கு மருந்துகள் 28

175. தாதுபுஷ்டிக்கு (வெள்ளடம்பு வதக்கல்) 60

176. தாமிரச் செந்தூரம் (கவுசை, பெருவயிறு
மகோதரத்திற்கு) 21

177. தாமிரச்செந்தூரம் (வேறு) அதிசாரக்
கழிச்சலுக்கு 147

178. தாமிர பற்பம் (மேகம், க்ஷயத்திற்கு) 170

179. தாமிரபற்பம் (வேறு) (தோல்வியாதி.
மேகத்திற்கு) 147

180. தாளக பற்பம் (சயம், இருமல், உடம்புக்
கடுப்பு, சூலைக்கடுப்பிற்கு) 4

181. தாளக பற்ப மாத்திரை (சுரத்திற்கு) 158

182. (தான்றிப் பருப்பெண்ணெய்) (வெண்
குஷ்டத்திற்கு 26

183. திப்பில்யாதிச் சூரணம், (சயம், இருமல்
சுவாசத்திற்கு) 162

184. திரிப்புகை (கபால நோய்களுக்கு) 49

185. திருகுக்கள்ளிக்களி (பிளவைக்கு) 142

186. துத்தவெண்ணெய் (தாபச்சுரம், சீத
ஜ்வரத்திற்கு) 37

187. துத்தவெண்ணெய் (கண்ணெரிச்சலுக்கு) 50

188. துத்தாதி உருண்டை (கண்ணோய்களுக்கு) 57

189. துத்தாதிமை (கண்ணோய் அமரத்திற்கு) 127

190. துருசுக்களிம்பு (கண்ரோகத்திற்கு) 50

191. துருசு பற்பம் (கண்ணோய்களுக்கு) 56

192. (தூதுவேளைப்) பாகு (காசம், இருமல்,
வாந்திக்கு) 83

193. தேற்றான் கற்பம் 140
194. தேங்காய் மருந்து (மலட்டு ரோகத்திற்கு) 34
195. தேங்காய் மருந்து (சொறி சிரங்கிற்கு) 34
196. தேன்வளகி மருந்து (விக்கலுக்கு) 9
197. (தைவேளைப்) பூச்சு மருந்து (சன்னியில் வியர்வை கண்டால்) 164
198. நண்டுச்சாறு மருந்து (ராஜபிளவைக்கு) 72
199. (நந்தியாவட்டை) மருந்து (மாதவிடாயாக) 22
200. நயன சஞ்சீவிக் குழம்பு (கண் சிவப்பிற்கு) 52
201. நாசி ரோகங்களுக்குச் சாதிலிங்கப் புகை ((முகர) 117
202. நாபிக்குளிகை (சுரத்திற்கு) 166
203. நிர்குண்டித் தைலம் (13 வித சன்னிக்கும்) 166
204. (நீர்ப்பூலா) எண்ணெய் (மாந்தம், கணச் சூட்டிற்கு) 128
205. நீர்க்கட்டுக்குத் தைலம் 161
206. (நெல்லிக்காய் கெந்தக) மருந்து (பவுத்திரத்திற்கு) 161
207. (நெற்பயிர்த்தாள்) கட்டுமருந்து (விப்புருதிக்கு) 115
208. (நொச்சிச்சாறு) மருந்து (காதுவலி, சீழ் வருதலுக்கு 135
209. நொச்சியெண்ணெய் (வாதத்திற்குப்பூச) 5
210. பஞ்சகவ்ய நெய் (மேக வெட்டைக்கு) 158
211. பஞ்சலவண் வடகம் (குன்மத்திற்கு) 112
212. பஞ்சலவணச் சூரணம் (வாத குன்மத்திற்கு) 13
213. பசுவின் பால் மருந்து (இரைப்பு, இருமலுக்கு) 7
214. பச்சை உருண்டை (கண்ணோய்க்கு) 57
215. பச்சைக்கற்ப்பூர மாத்திரை (விரண சுக்ரனுக்கு கண்ணிலிட) 10
216. பச்சைப்பாம்புக் கலிக்கம் (ஜன்னிக்கு) 118
217. பத்ரகாளிரஸம் (சந்நிக்கு) 38
218. பரங்கிப்பட்டைச் சூரணம் (மூலத்திற்கு) 79
219. பருத்திக்காயெண்ணெய் (ரஸம் முறிய) 8

220. பல்வலிக்கு மூலிகை பிடுங்குதல் 144
221. பவுத்திரத்திற்கு மருந்துகள் 73
222. பறவை தோஷக் குறிகள் 97
223. பறவை தோஷத்திதற்கு யந்திரம் 97
224. (பனையோலைச்) சாம்பல் மருந்து (நீர்க்கட்டிற்கு) 12
225. பாம்புத்தலைச் சூரணப் புகை (வலிப்பிற்கு) 169
226. பாம்புவாய்க்கட்ட 69
227. பாம்புகடி தடை நீக்க மந்திரம் 70
228. பாவனை ஓமம் (கிரந்தி, புண், சூலை ரஸ முறிவு, வெண்குஷ்டத்திற்கு) 19
229. பாஷாணக்கட்டு மருந்து 12
230. பாஷாணத்திற்கு மாற்று 7
231. பாஷாணத்திரி (ஆசனகண்டமாலைக்கு) 22
232. (பாஷாண) மெழுகு - சகல விஷ கடிக்கும் 130
233. பிப்பல்யாதி ரஸாயணம் (பாண்டு, இருமலுக்கு) 43
234. பிரண்டை மருந்து (மேல் மூச்சுக்கு) 97
235. பிரஸவித்த பேர்களுக்கு இரத்தம் நிற்க மருந்து 67
236. பிருங்கராஜத் தைலம் (தலைவாதம் தலைவலிக்கு) 129
237. பிலாமரக்காளான் மருந்து (தேள் கொட்டிற்கும், அக்கரக்காய்க் காய்ச்சலுக்கும்) 157
238. பிலா மரக்காளான் 95
239. பிள்ளை பிறக்க மருந்துகள் (உள்ளுக்கும் மாந்தத்திற்கும்) 68
240. பிள்ளை பிறக்க மருந்துகள் (வேறு) (குளிசம்) 142
241. பிள்ளை பெறச் (சுரைத்தண்டு கஷாயம்) 69
242. பிள்ளை பெற்ற வயிற்றிலே அவகடம் ஏற்பட்டு தன்னை அறியாமலே நீர் இறங்கிளால் மருந்துகள் 66
243. புகை மருந்துகள் (விக்கலுக்கு) 133
244. புகை மருந்து (புண்ணிற்கு) 133

245. புடரஸம் (சாதிலிங்கச் சூரணம் ஜ்வரத்திற்கு) 37

246. புண்ணுக்கு எண்ணெய் (கருநொச்சியெண்ணெய்)
கிரந்தி, மூலவாயுவிற்கு) 103

247. புரசம்பட்டை உருண்டை (வயிற்றிற்
கட்டிக்கு) 8

248. புறவளையம் (நேத்திர ரோகங்களுக்கு) 53

249. (புழுங்கலரிசி) சுருக்குக் (கஷாயம்) 123

250. பூச்சிக் கழிச்சலுக்கு (நமுகை மருந்து) 74

251. பூச்சு மருந்து (கண் சிவப்பிற்கு) 59

252. பூரக்களிம்பு (புண்ணிற்குப் பூச்சு) 76

253. பெருங்காய நெய் (வீக்கத்திற்கு) 31

254. பெருமருந்துக் கல்கம் (சோகை, பாண்டு
காமாலைக்கு) 146

255. பெருங்காயக் கலிகம் (விஷத்திற்கும்
பேய்க்கும்) 117

256. பெரும்பாட்டிற்கு (ஆதண்டை நெய்) 23

257. பெரும்பாட்டிற்கு (சுக்கு நெய்) 23

258. பெரும்பாட்டிற்கு (பிசினி.யும் பால்மருந்தும்) 10

259. பெரும்பாட்டிற்கு (வேப்பம்பட்டை ஆலம்பட்டை
மருந்துகள் 20

260. பெரும்பாட்டிற்கு யந்திரம் 99

261. பேதி ஜ்வரத்திற்கு மாத்திரை (பலவித
ஜ்வரங்களுக்கும்) 108

262. (பேய்முசுட்டையிலை) கட்டுமருந்து (புரையோடும்
புண்ணிற்கு) 158

263. (பேய்மருட்டிக் கஷாயம்) (மாந்தவலிப்பிற்கு) 124

264. பேரண்ட பற்பம் (குன்மத்திற்கும்
சயத்திற்கும்) 132

265. மகிழம்பட்டைக்குடிநீர் (தந்த வாயுவிற்கு) 28

266. மயிலிறகாதித் தைலம் (சந்நிக்கு) 12

267. மரண கெண்டிகை விபரம் (ஜ்வரத்திற்கு) 28

268. மரித்தபிள்ளை விழ (குளவிக்கூடு கல்கம்) 73

269.மருந்தீட்டிற்கு (உப்பிலிச்சாறு மருந்து) 145

270. மருந்தீட்டிற்கு (வல்லாரைக் கஷாயம்) 72

271. மருந்து கோவா (நீரிழிவிற்கு) 152
272. மலட்டு நோய்க்கு (பூ சிறுபீளை வெண்ணெய்) 142
273. மனோசிலையாதி உருண்டை (விக்கலுக்கு) 133
274. மாதவிடாயாக மருந்துகள் 22
275. மாதளங்காய் உருண்டை (கிராணிக்கு) 78
276. (மாவிலங்கைப்பட்டைக்) கஷாயம்
(சூதிகா வாயுவிற்கு) 42
277. மாவிலங்கைத் தைலம் 6
278. மாவிலங்கைத் தைலமும் உருண்டையும்
(நீர்க்கட்டிற்கு) 161
279. மிளகாய்த் தைலம் (நேத்ர ரோகங்களுக்கு) 48
280. முக சந்நிக்குத் (திரிகடுகு கஷாயம்) 69
281. முலைப்பாலெண்ணெய் (வாத ரோகத்திற்கெல்லாம்) 5
282. மூக்கடைப்பிற்கு (ஏலாதி நஸ்யம்) 102
283. மூலத்திற்கு அடை (பேய்ப்பீர்க்கன்) 70
284. மூலத்திற்கு மறுக்காரைக் கல்பம் 72
285. மூலம், பவுத்திரத்திற்குக் கஷாய வகைகள் 80
286. மெழுகுத்தைலம் (புரைவிழுந்த புண்ணிற்கு) 31
287. மேகவெட்டைக்கு (வெள்ளறுகு மோர்) 67
288. மேகனாதி உருண்டை (ஜ்வரத்திற்கு) 118
289. லோகச் செந்தூரம் 160
290. வங்க பற்பம் (மேக நோய், குஷ்டம்
(தோல் வியாதிக்கு) 164
291. வங்க பற்பம் (வேறு) பிரிமியத்திற்கு
நீர்க்கடுப்பிற்கு) 46
292. வச்சிரவல்லித் தைலம் (வாதம் 80, சந்நி
13க்கும்) 104
293. (வட்டக்கிலுகிலுப்பைக்) கஷாயம் (18 வித
எலிகடிகளுக்கும்) 77
294. (வட்டத்திருப்பிக்) கஷாயம் (பிள்ளைப்
பிணிகளுக்கு) 123
295. வண்டு கடிக்குப் பூச்சு மருந்துகள் 144
296. வலம்புரிக்காய்த் தைலம் (காதுவலி
மண்டைக்குத்தலுக்கு) 173

297. வாதராட்சஸன் மாத்திரை (ஜ்வரத்திற்கு) 159
298. வாழாத பெண்கள் வாழ மருந்து 74
299. வாழைக்கிழங்கு மருந்து (மேகவெட்டை
அண்ட வாதத்திற்கு) 77
300. வாழைப்பிசினி மருந்து (கண்ணோய்களுக்கு) 51
301. விச்வம்பர ரஸம் (ஸன்னிபாத ஜ்வரத்திற்கு) 39
302. விடத்தேரிக்கட்டு மருந்து (பிள்ளை விழ) 19
303. (விடத்தேரிப் புல்லுருவிப் பூச்சு மருந்து
பவுத்திரத்திற்கு) 66
304. விரியன் பாம்பு கடிக்குக் குறிஞ்சாச்சாறு
மருந்து 71
305. வில்வப்பழ கஷாயம் (சூதிகா வாயுவிற்கு) 41
306. வில்வாதி கஷாயம் (சூதிகா வாயுவிற்கு) 89
307. விஷமுஷ்டித் தைலம் (சன்னி வாதத்திற்கு) 112
308. வெங்காய எண்ணெய் (மாந்தம், காய்ச்சல்,
அசீர்ணத்திற்கு) 127
309. வெங்காய ஓமக்கஷாயம் (பித்த
வெட்டைக்கு) 165
310. வெள்ளாட்டுக் கோமியக்கஷாயம் (சகல
வியாதிகளுக்கும்) 11
311. (வெள்ளைப் பாஷாணப்) பூச்சு மருந்து
மூலத்திற்கு 79
312. வெள்வங்கப் பற்பம் (மேகத்திற்கு) 36
313. வேப்பம்பட்டையாதிக் கஷாயம்
(வாதத்திற்கு) 4

*
**
***
**
*